32°c
கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 25°c
தெளிவான வானிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24

விலை: யாழ்., வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 ■ கதிர்: 122 ■ வள்ளுவர் ஆண்டு: 2045
பங்குனி 14, வெள்ளி 28.03.2014

28 MAR 2014

## பிரேரணையை வரவேற்கிறது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 28
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூடமைப்பு, மிகமோசமான வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் இந்தப் பிரேரணை பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வலி யுறுத்தியுள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

### தீர்மானத்தை ஆதரித்த நாடுகள்

ஆர்ஜென்ரீனா, ஆஸ்திரியா, பெனின், பொட்ஸ் வானா, பிரேஸில், சிலி, கொஸ்டரிக்கா, கோடே டி, செக் குடியரசு, எஸ்தோனியா, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, மெக்ஸிக்கோ, மொன்டிநீக் ரோ, பெரு, கொரியக் குடியரசு, ரோமானியா, சியாரா லியோன், மஸிடோனியா, பிரிட்டன், அமெரிக்கா.

### தீர்மானத்தை எதிர்த்த நாடுகள்

அல்ஜீரியா, சீனா, கொங்கோ, கியூபா, கென்யா, மாலைதீவு, பாகிஸ்தான், ரஷ்யா, சவூதி அரேபியா, ஐக்கிய அரசு எமிரேட்ஸ், வெனிசுலா, வியட்நாம்.

### நடுவுநிலைமை வகித்த நாடுகள்

புருக்கினோ பாஸோ, எதியோப்பியா, கபோன், இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கஸகிஸ்தான், குவைத், தென்னாபிரிக்கா, நமீபியா, மொரோக்கோ, பிலிப்பைன்ஸ்.


# மீண்டும் வெற்றி

## இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்துக்கு 23 நாடுகள் ஆதரவு, 12 நாடுகள் எதிர்ப்பு, 12 நாடுகள் நடுநிலை

ஜெனீவா, மார்ச் 28
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தொடர்ந்து மூன்றாவது வருடமாக இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் 11 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. பாகிஸ்தானின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியிலும் இலங்கை தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் கிடைத்தன. 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது மௌனமாக இருந்தன.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத்தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. நேற்று முன்தினம் புதன்கிழமை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை அரசுக்கு எதிரான அறிக்கை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் அமெரிக்காவின் தீர்மான வரைவு சபையில் வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஜெனீவா நேரப்படி நேற்று மதியம் 12.20 இற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை மீதான விவாதம் 90 நிமிடங்கள் வரையில் நீடித்தது.


வாக்கெடுப்பின் போது...

**பிரேரணை சமர்ப்பிப்பு**

ஜெனிவாவிற்கான அமெரிக்கா தூதுவர் பவுலா சிறிவ்வர் இலங்கை தொடர்பான பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் பற்றியும், சுயாதீன சர்வதேச விசாரணை தொடர்பில் மனித உரிமை ஆணை

21ஆம் பக்கம் பார்க்க

### உள்ளே...


மற்றுமொரு ஆபத்திலிருந்து தப்பியது மலேசிய விமானம்

பக்கம் 06

## சர்வதேச விசாரணை இலங்கையில் தேவை

*கனேடிய நாடாளுமன்றில் தீர்மானம்*

றொறன்ரோ, மார்ச் 28
இலங்கையில் இடம்பெற்ற போரில் நடந்தேறிய சம்பவங்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்காக இலங்கைக்கு எதிராக சர்வதேச சுதந்திர விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்க வேண்டும் என்று கனேடிய நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கனேடிய எதிர்கட்சியான ஜனநாயகக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் போல் டிவர், இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

21ஆம் பக்கம் பார்க்க

## காலை வாரியது இந்தியா

*வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது பதுங்கிக் கொண்டது*

ஜெனீவா, மார்ச் 28
இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இந்தியா நடுவு நிலைமை வகித்தது. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையிலேயே வாக் கெடுப்பில் இந்தியா 'பல்டி' அடித்தது.

இலங்கைக்கு எதிரான தீர்மான வரைவு மீதான விவாதம் வாக்கெடுப்புக்கு முன்னதாக இடம்பெற்றது.

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீது மூன்று வாக்கெடுப்பு

ஜெனீவா, மார்ச் 28
இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மான வரைவு தொடர்பில் நேற்று மூன்று வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. குறித்த தீர்மான வரைவில் உள்ள 10ஆவது பந்தியை நீக்கிய பின்னர் வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று பாகிஸ்தான் கோரிக்கை முன்வைத்தது. இந்தக் கோரிக்கை தொடர்பில் முதலில் உறுப்பு நாடுகளிடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

21ஆம் பக்கம் பார்க்க

## தெளிவான செய்தி ஒன்றை இலங்கைக்கு வழங்கினோம்

**அமெரிக்கா தெரிவிப்பு**

ஜெனீவா, மார்ச் 28
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை மூலம் இலங்கை அரசுக்கு தெளிவான செய்தி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அமெரிக்கா, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹெரியினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையானது, இலங்கை அரசின் நல்லிணக்கம், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் ஜனநாயக ஆட்சி நடவடிக்கைகளுக்கான சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றது. இதன் காரணமாகவே ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டும் என்று இந்தப் பிரேரணை கோருகின்றது.

இதைக் கருத்தில் கொண்டு, மனித உரிமைகள் ஆணை

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் மிரட்டல் காரணமாகவே ஐ.நா. சபையில் பதுங்கியது இந்தியா

*'உதயனுக்கு' தெரிவித்தார் பழ.நெடுமாறன்*

யாழ்ப்பாணம், மார்ச் 28
இந்திய மத்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் துரோகம் இழைத்து வருகின்றது. இலங்கையின் மிரட்டலுக்கு அடிபணிந்தே இந்தியா வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்டது என்று 'உதயனுக்குத்' தெரிவித்தார் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன்.

ஐ.நா மனித உரிமைகள்

21ஆம் பக்கம் பார்க்க


மருத்துவர் வரதராஜா

## இடுப்பின் கீழ் துண்டாடப்பட்டவரை வேறு வழியின்றி சாகவிட்டோம்

*இறுதிப் போரின் கொடூரங்களை விளக்கினார் மருத்துவர் வரதராஜா*

லண்டன், மார்ச் 28
"இறுதிப் போரில் இடுப்புக் கீழே துண்டாடப்பட்ட நிலையில் எம்மிடம் வந்திருந்த 60 வயது முதியவருக்கு நாம் சிகிச்சையளிக்காமல் அவரை சாவதற்கு விட்டுவிட்டோம். எமக்கு மருத்துவ வசதிகள் இல்லை. நாம் அவரை காப்பாற்றுவதற்கு முயற்சி எடுக்கவில்லை."

04ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு ஆதரவான பிரேரணை தோல்வி

ஜெனீவா, மார்ச் 28
இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடக் கூடாதென பாகிஸ்தானினால், இலங்கைக்கு ஆதரவாக முன்வைக்கப்பட்ட பிரேரணை தோல்வியைத் தழுவியது.

21ஆம் பக்கம் பார்க்க

## மூன்று ஆண்டுகள் நிறைவில் 1,898 வீடுகளே முடிவுற்றன

*இந்திய வீட்டுத் திட்டத்தின் நிலை இது*



யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.மாவட்டத்தில் இந்திய வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில் ஆயிரத்து 898 வீடுகளே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் 10 சதவீதமான வீடுகளில் மக்கள் மீளக் குடியமரவில்லை.

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீனவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 28
இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 மீனவர்கள் நேற்று

21ஆம் பக்கம் பார்க்க

## வாள்களுடன் வந்த கொள்ளையர்களை துணிந்து விரட்டிய 90 வயது முதியவர்

யாழ்ப்பாணம், மார்ச் 28
நள்ளிரவில் கத்தி, வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி அங்கிருந்த 90 வயது வயோதிபரின் துணிச்சலான நடவடிக்கையால் கைகூடாமல் போனது.

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வீடொன்றிலேயே இந்தக் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கத்தி, வாள் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 90 வயதான வயோதிபரின் கழுத்தில்

21ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இணைத் தலைமையின் கீழ் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

*ஆறு ஆண்டுகளின் பின்னர்*

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் 6 ஆண்டுகளின் பின்னர் இணைத் தலைமையில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் முதன் முறையாக நடத்தப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையிலான ஆட்சி அமைந்த பின் னர், கடந்த வருடம் நவம்பர் மாதம் யாழ்.மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

குறித்த கூட்டத்திற்கு வடக்கு மாகாணமுதலமைச்சர் இணைத் தலைமை தாங்க வேண்டியிருந்த போதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலேயே கூட்டம் நடைபெற்றிருந்தது. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை புறக்கணித்திருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி திங்கள் கிழமை காலை 9.30 மணிக்கு, யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைத் தலைமை தாங்கவுள்ளனர்.

கடைசியாக 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு யாழ்.மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைத் தலைமை தாங்கியிருந்ததனர். (ற-5)

## மாடு வெட்டிய மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 28
அனலைதீவில் சட்டவிரோதமாக மாடு வெட்டிய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அது தொடர்பில் பொலிஸார் விரைவில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யவுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மீது அனலைதீவில் கிராம உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அது தொடர்பான வழக்கு நீதிமன்றில் ஏற்கனவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

## விபத்தில் காயமடைந்த வயோதிபர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 28
மஞ்சள் கடவையைக் கடக்க முற்பட்டவேளை, பஸ் மோதியதால் காயங்களுக்குள்ளாகி யாழ். போதானா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இந்த விபத்து நீர்வேலி கந்தசுவாமி கோயிலை அண்மித்து கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அருளம்பலம் ரத்தினசிங்கம் (வயது-83) என்ற ஓய்வு பெற்ற ஆசிரியரே காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவராவார்.

வீதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த அவர் பஸ் வந்ததை அடுத்து, மஞ்சள் கடவையூடாக வீதியைக் கடக்க முற்பட்ட போதே அவர் மீது பஸ் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோதும், சிகிச்சைகள் பயனளிக்காது உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்ட பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை, வயோதிபரை மோதிய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)

## சடலம் மீட்பு

உடுப்பிட்டி, கம்பர்மலை பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி கம்பர்மலை பைங்காரம் சலாட் தோட்டத்தை சேர்ந்த சின்னவன் மனோகரி (வயது -65 ) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மனநோயாளியான குறித்த பெண் அவரது சகோதரியின் கண்காணிப்பில் இருந்தார் என்றும் குறித்த சகோதரி வெளிமாவட்டம் சென்ற நிலையில் வீட்டுக்கு அருகில் அந்தப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-173)



நட்புறவின் அடிப்படையில் மலேசியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 1200சிசி, 1600சிசி, 1400சிசி போன்ற உந்துசக்தி கொண்ட மோட்டார் சைக்கிள்கள் நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு கொண்டுவரப்பட்டன. (ற-21)

## நடுக்கடலில் படகு பழுது: இந்திய மீனவர் ஐவர் சரண்

யாழ்ப்பாணம், மார்ச் 28
நடுக்கடலில் படகு பழுதடைந்ததை அடுத்து நேற்று நெடுந்தீவில் கரையொதுங்கி நெடுந்தீவுப் பொலிஸில் சரணடைந்த இந்திய மீனவர்கள் 5 பேரையும் எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த முனியாண்டி ராஜேந்திரன், ராசு சந்திரன், சூசை பெர்னான்டோ அன்ரனி பெர்ணான்டோ, சின்னப்பன் தங்கராசா மற்றும் நாகு கோவிந்தன் ஆகியோரே இவ்வாறு சரணடைந்தவர்களாவர். அவர்களது படகு பழுதடைந்ததனால் திசைமாறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவுப் பொலிஸார் அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின்குமாரிடம் முன்னிலைப்படுத்தினர். அதன்போதே அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 13 படகுகளுடன் 53 இந்திய மீனவர்கள் இந்த மாதம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அத்துமீறி இலங்கைக்கடற்பரப்பினுள் நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-4)

## மாநகரசபை உறுப்பினர் விஜயகாந் பதவி நீக்கம்

யாழ்ப்பாணம், மார்ச்.28
யாழ்.மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் சு. விஜயகாந் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா நேற்று சபைக்கூட்டத்தில் அறிவித்தார்.

ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னனியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளதால் மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல் அலுவலகத்தில் இருந்து ஒப்பமிடப்பட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் சபையில் தெரிவித்தார். எனினும் குறித்த உறுப்பினர் எந்தக்காரணத்தினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பது தொடர்பில் அவர் விளக்கமளிக்கவில்லை.

குறித்த உறுப்பினர் திருட்டு நகைகளை வங்கியில் அடகு வைக்க முற்பட்டடார் என்ற சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரால் கைது செய்யபட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-14)

## புதுவருடத்தை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28
தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது என்று வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

ஆண்களுக்கான போர்த் தேங்காய் அடித்தல், கிட்டியிழுத்தல் ஆகிய நிகழ்வுகளும் பெண்களுக்கான குத்துவிளக்கு, தோரணம் பின்னுதல், கிடுகு பின்னுதலும், இருபாலருக்கும் பொதுவாக முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தாச்சிப் போட்டி போன்றன அதில் நடத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-5)

# நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு யாழ்.மாவட்டத்தில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ். மாவட்டத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு, மாவட்டத்திலுள்ள விவசாயக் கிணறுகள் குறித்த தரவுகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கை வடக்கு விவசாய அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

"இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நடவடிக்கையில், அதிக அளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாலும் அதிக அளவு இரசாயனங்கள் பிரயோகிக்கப்படுவதாலும் நிலத்தடி நீர்வளம் பாதிக்கப்பட ஆரம்பித்திருப்பது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஏனைய மாவட்டங்களில் உள்ளதைப் போன்று ஆறுகளோ, பெரும் குளங்களோ இல்லாத நிலையில் கிணறுகளே விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்கி வருகின்றன. இத்தகைய விவசாயக் கிணறுகள் அண்ணளவாக 25 ஆயிரம் வரையில் இருக்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளபோதும் இவை பற்றிய முழுமையான தரவுகள் இதுவரையில் இல்லை.

அதிக எண்ணிக்கையான விவசாயக் கிணறுகள் சீராகப் பராமரிக்கப்படாமையால் மேற்கட்டு மற்றும் உட்பக்கச் சுவர்கள் அழிவடைந்தும் உள்ளன.

யாழ் மாவட்டததின நா வளததின் எதிர்காலப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஆய்வுகளுக்கும் திட்டங்களுக்கும் விவசாய கிணறுகளின் கட்டுமானப் பரிமாணங்கள், கிணறுகளிலுள்ள நீரின் அளவு, நீரின் தன்மை உட்படப் பல்வேறு தரவுகள் அவசியமாகும். இதன் அடிப்படையில் வடமா காண விவசாய அமைச்சு விவ சாயப் போதனாசிரியர்களி னூடாக இதற்கெனத் தயாரிக் கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் தகவல்களைச் சேகரித்து வருகிறது. தகவல்சேகரிப்பை விரைவுபடுத்துவதற்காக யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயக் கிணறுகளின் உரிமையாளர்கள் அனைவரையும் தங்கள் பிரதேசங்களுக்குரிய விவசாயப் போதனாசிரியர்களை அணுகி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்பாக அதனை மீளவும் விவசாயப் போதனாசிரியர்களிடம் கையளிக்குமாறு கோருகிறோம்.

**விவசாய கிணறுகளின் கட்டுமானப் பரிமாணங்கள், கிணறு களிலுள்ள நீரின் அளவு, நீரின் தன்மை உட்படப் பல்வேறு தரவுகள் அவசியமாகும்**


விவசாயம் காரணமாக யாழ். மாவட்ட நீர் வளம் எதிர்நோக்கியுள்ள சவால்களை நாம் உரிய முறைகளில் எதிர்கொள்வதன் மூலமே ஒட்டுமொத்த வடமாகாணத்தின் விவசாயத்திலும் நீர்வளப் பாதுகாப்பிலும் நிலையான அபிவிருத்தியை எட்டமுடியும். எனவே விவசாயக்கிணறுகளைப் பதிவு செய்யும் வடமாகாண விவசாய அமைச்சின் இந்த நடவடிக்கைக்கு அனைவரையும் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுகொள்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. (ற-5)

## மாறுபட்ட விலைகளில் சமையல் எரிவாயு விற்பனை

### பாவனையாளர்கள் கவலை

அச்சுவேலி, மார்ச் 28

சமையல் எரிவாயு விற்பனையில் இடத்துக்கிடம் மாறுபட்ட விலை நடைமுறை காணப்படுவதால் பாவனையாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி இருப்பதாகவும் யாழ்.மாவட் டத்துக்கென நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் கூடிய விலையில் பல இடங்களில் விற்பனை செய்யப்படுவதாகவும் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.




**தனியார் விற்பனை நிலையங்கள் சிலவற்றில் 52 ரூபா அதிகரிக்கப்பட்ட நிலையில் 2,660 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

13.7 கிலோ நிறை கொண்ட லிற்ரோ காஸின் (ஷெல் காஸ் - நீலப்போத்தல்) யாழ்.மாவட்டத்துக்கான நிர்ணயிக்கப்பட்ட நியாய விலை 2,608 ரூபா, ஆனால் தனியார் விற்பனை நிலையங்கள் சிலவற்றில் 52 ரூபா அதிகரிக்கப்பட்ட நிலையில் 2,660 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமையல் எரிவாயு நியாய விலை தொடர்பாகப் பொதுமக்கள் விசாரிக்கும்போது வர்த்தகர்கள் சிலர் பொதுமக்களுக்கு "தாங்கள் விற்கும் விலைதான் நியாயவிலை என்று கூறுவதையும்" அவதானிக்க முடிகின்றது.

முன்னைய ஷெல் காஸின் தற்போதைய பெயர் லிற்ரோ காஸ் நீலப்போத்திலின் யாழ். மாவட்ட சில்லறை விலை தொடர்பாக முகவர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில்;

லிற்ரோ சமையல் எரிவாயுவின் விலை 2,608 ரூபா அதிலும் கூடிய விலையில் விற்பனை செய்ய முடியாது. 2,608 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக முறைப்பாடு செய்யும் இடத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (வ-11)

# வடக்கு எரிபொருள் களஞ்சியம் பளையில் 40 ஏக்கரில் அமையும்

### சீரான விநியோகத்தை மேற்கொள்ள வசதியாக

வடமராட்சி, மார்ச் 28

வட பகுதிக்கான எரிபொருள் விநியோகத்துக்கெனப் பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய எரிபொருள் தாங்கிகள் கொண்ட களஞ்சியம் அமைக்கப்படவுள்ளதாக இலங்கைப் பெற்றோலியம் களஞ்சிய நிறுவனத் தலைவர் மேஜர் ஜெனரல் எம். ஆர்.டபிள்யூ டீ.சொய்சா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் எரிபொருள் தேவையில் 40-50 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும். இதனை நாம் தொடர்ந்து பேணி வருகின்றோம்.

எரிபொருள் களஞ்சியத் தாங்கிகள் கொலன்னாவ, முத்துராஜவெல ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தற்போது களஞ்சிய வசதிகள் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

வட பகுதி எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பளைப் பிரதேசத்தில் எரிபொருள் களஞ்சியசாலை அமைக்கப்படவுள்ளது.

பெற்றோல், டீசல் மண்ணெண்ணெய் ஆகியவற்றை களஞ்சியப்படுத்த 40 ஏக்கர் நிலப்பரப்பில் எரிபொருள் தாங்கிகள் அமைக்கப்படவுள் ளன. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்- என்றார். (வ-173)

## நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல், மரம் வழிபாட்டுத் தலங்களுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28

நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல் மற்றும் மரங்கள் சமய வழிபாட்டுத் தலங்களின் நிர்மாண மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு சலுகை விலையில் வழங்குவதென அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி.சில்வா சகல நீதிமன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

வழிபாட்டுத் தலங்களின் நிர்மாண மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்கு ஆகக் கூடி பத்து கியூப் மணலும் மரக் கியூப் அடி மரங்களும் சலுகை விலையில் வழங்கப்படும் ஒரு கியூப் மணலுக்கு ஆயிரம் ரூபாவும், மரத்துக்கு ஒரு கியூப் அடி சம்பந்தமாக மாவட்டக் கட்டுப்பாட்டு குழுவின் விலையில் 15 வீதமும் அறவிடப்படும். மணல் மற்றும் மரங்கள் தேவைப்படும் வழிபாட்டுத் தலங்களின் தலைவர்கள் நீதி அமைச்சால் வழங்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து அந்தந்தப் பிரதேச செயலரின் பரிந்துரையுடன் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கிடைக்கும் விண்ணப்பங்களின் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அமைச்சால் நீதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும்.

நீதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர், அந்தந்த நீதிமன்றங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட மத வழிபாட்டுத் தலங்களுக்கு மணல் மற்றும் மரங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த நபருக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறை


மன்னார், மார்ச் 28

அனுமதிப்பத்திரமின்றி கஞ்சா போதைப்பொருளைத் தம்முடன் வைத்திருந்ததான சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபருக்கு நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதகால கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பல்டானோ தீர்ப்பளித்தார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை மன்னார் பொலிஸார் சந்தேக நபரை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால்பதில் நீதிவான் குறித்த தீர்ப்பை வழங்கினார்.

ஏற்கெனவே இச்சந்தேக நபருக்கு இரண்டு முற்குற்றங்கள் காணப்பட்டமையாலே ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-56)



சாவகச்சேரி ரயில் நிலையத்தை அண்டிய பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தன்னியக்கச் சமிக்ஞை விளக்கு

## புதிய ரயில் பாதையில் தன்னியக்க சமிக்ஞை விளக்கு அமைக்கும் பணி

தென்மராட்சி, மார்ச்28

புதிதாக அமைக்கப்பட்டுவரும் ரயில் பாதையில் தன்னியக்க சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரயில் பாதையைக் கடந்து செல்லும் வீதிகளுக்குத் தன்னியக்க சமிக்ஞை விளக்குகளும் தன்னியக்க வீதித் தடைக் கம்பங்களும் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. சாவகச்சேரி ரயில் நிலையத்தை அண்டிய பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தன்னியக்க சமிக்ஞை விளக்கை இங்கு காணலாம். (வ-9)

# மூடப்பட்ட நிலையில் இறைச்சிக் கடைகள்

### பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பால்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பால் உள்ளூராட்சி சபைகளினால் நடத்தப்படும் இறைச்சிக் கடைகள் கடந்த பத்து நாள்களாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில இடங்களில் கால்நடை வைத்தியர்களின் பரிந்துரையின் பேரில் சில கொல்களங்களில் கால்நடைகள் வெட்டப்பட்டு இறைச்சிகள் ஏனைய இறைச்சிக் கடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மீண்டும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளதன் பின்னரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகள் என்ற வகையில் தொடர்ந்து கடமைகளை மேற்கொள்ளாது அலுவலகங்களில் தங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

# வடக்கின் அசாதாரண செயற்பாடுகள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்

### மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கில் தற்போது தோன்றியிருக்கும் மக்கள் நலன்களைப் பாதிக்கும் அசாதாரண செயற்பாடுகள் உடனடியாக கைவிடப்படவேண்டும்என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

வடக்கில் தற்போது தோன்றியிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பாதிக்கின்ற விடயமாகவே இருக்கின்றன. அவ்வாறான ஒரு அசாதாரண நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கு நியாயபூர்வமான பதிலை இதுவரை பாதுகாப்புத்தரப்பினர் வழங்கவில்லை. மாறாகப் புலிகளின் தலைவர்களுள் ஒருவர் எனச் சந்தேகிக்கும் ஒருவரைத் தாம் தேடுகின்றோம் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இத்தகைய நடவடிக்கைகளின் பின்னால் உள்ள காரணிகள் குறித்து நாம் எண்ணிப்பார்க்கின்றபோது இலங்கை அரசு போருக்குப் பின்னரும் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதில் ஆர்வம் காட்டுகின்றதா என்ற கேள்வியை எம்முள் ஏற்படுத்துகின்றது.

மனித அவலங்களை ஏற்படுத்திய போர் முடிவடைந்து மக்கள் இயல்பான வாழ்வை அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்ற இந்நிலையில் இலங்கை அரசு இரண்டு முக்கிய விடயங்களை எதிர்கொண்டிருக்கின்றது.

முதன்மையாக சர்வதேச அரங்கில் தோன்றியிருக்கும் போர்க் குற்ற விசாரணை கோரும் ஜெனிவாவின் பிரேரணை, மேல், தென் மாகாணசபைகளுக்கான தேர்தல் ஆகிய இரண்டு நிலைகளிலும் அரசு பல்வேறு இக்கட்டான நிலைகளை எதிர்கொள்கின்றது என்பதையே வடக்கில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் கெடுபிடிகளும் புலிப் பூச்சாண்டிகளும் வெளிப்படுத்துகின்றன.

குறிப்பாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் சரிவை நிவர்த்தி செய்ய சிங்கள வாக்காளர்கள் மத்தியில் புலிகள் மீண்டும் உருவெடுத்திருக்கின்றார்கள்' என்ற பரப்புரை உதவும் என்று அரசு எதிர்பார்க்கின்றது.

அதே போன்று ஜெனிவாவை முன்னிலைப்படுத்தி தமிழ் மக்கள் மேற்கொள்ளும் மனிதாபிமானப் போராட்டங்களை முடக்குவது இரண்டாவது தேவையாக இருக்கின்றது. எனவே இவ்விரண்டு நோக்கங்களையும் ' நிறைவேற்றிக்கொள்வதற்காக அப்பாவி மக்களைக் கைது செய்வது, திடீர் சுற்றி வளைப்புகள், கைதுகளை மேற்கொள்வது, என அரசு பல்வேறு உத்திகளைக் கையாள்கின்றது.

இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக மக்கள் பாதிப்படைகின்றார்கள். அமைதியானதும் நல்லிணக்கமானதுமான சூழ்நிலையே மனிதத்தை நேசிக்கின்ற, மனித உரிமைகளை மதிக்கின்ற, இந்த நாட்டில் அமைதியையும் நிலையான அபிவிருத்தியையும் எதிர்பார்க்கின்ற, இந்த நாட்டை நேசிக்கின்ற ஒவ்வொரு குடிமகனினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்று தெரிவித்தார். (வ-10)

மென்பனிதூவும் கனடா தேசத்தில் மாலை நேர உலாவரும் கணங்கள்..............

நினைத்துப் பார்க்கவே உள்ளம் ஆனந்தமாகின்றது.
ஆனாலும் இன்னும் 2 தினங்களில் உங்கள் எண்ணம் நிறைவேறாமல் போகலாம்.

இறுதிநாள் 30.03.2014 ஆகும்.

ஆம் வெறும் 23 இலட்சங்களில் கனடாவில் படிக்க, உழைக்க ஆலோசனை.

இன்னும் என்ன தாமதம். 7 நாள்களும் திறந்திருப்போம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016/021 499 3502.
(46150)(45.6.3)

# உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் அவைக்கே மீள வழங்கப்படவேண்டும்

### முதலமைச்சருக்கு உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச். 28

பிரதேசசபைகளில் இருந்து நீக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மீண்டும் ஆளணியாக உருவாக்கி தருவதுடன் இடம் மாற்றப்பட்டவர்களை உடனடியாக அவர்கள் கடமையாற்றிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு மீண்டும் நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஏற்கனவே வடமாகாண சுகாதார அமைச்சருடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்ட ஆறு மாத கால அவகாசத்தை நடைமுறைப்படுத்துமாறும் கோரி சாவகச்சேரி பிரதேச சபை வடமாகாண முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 78(1),78(2) என்பவற்றில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான கடமைகள் மற்றும் அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை தவிர வேறுசில நகரக் கட்டமைப்புச் சட்டங் களும் இவற்றை வலியுறுத்துகின்றன. இதன்படி வீடமைப்பு நகர மேம்பாட்டுக் கட்டளைச் சட்டத்தில் சுகாதார உத்தியோகத்தர் என்பது எவராவது சுகாதார வைத்திய அதிகாரியையும் ஏதாவது உள்ளூராட்சி அதிகாரசபையால் பொதுச்சுகாதார மேற்பார் வைக்கென்று அதிகாரமளிக் கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரையும் குறித்து நிற்கிறது.

ஆகவே பொதுச்சுகாதாரப் பரிசோதகர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அவசியமான ஆளணியாகும். இவ்வாறான நிலையில் 14.03.2014 தொடக்கம் ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய உள்ளூராட்சி ஆணையாளரினால் சுகாதாரத் திணைக்களத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான ஆளணி ஏனைய மாகாணங்களில் இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதாரப் பரிசோதகர்களை இடம் மாற்றியமையானது உள்ளூராட்சி மன்றங்களை வினைத்திறன் மிக்கதாக செயற்படுவதனை தடுக்கும் ஒரு செயலாகவே நாம் கருதுகின்றோம்.

இதனை ஆட்சேபித்து 26.03.2014 அன்று தொடக்கம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இடம் மாற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் தமது சுகாதார சேவையினை மேற்கொள்வதனை புறக்கணித்திருப்பதுடன் இடம் மாற்றப்பட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் உடனடியாக 31.03. 2014 ற்கு முன்னர் தாம் கடமையாற்றிய உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு விடுவிக்கப்படாவிடில் வடமாகாணம் தழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்கள் தமது முழுமையான சுகாதார சேவையினை புறக்கணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடமாகாண உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் சாவகச்சேரி பிரதேசசபையில் ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளார்கள். எனவே வடமாகாணத்தில் சிறந்த உள்ளூராட்சி சேவை யினை வழங்குவதற்கான தங்களது ஆதரவினை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. இந்தக் கடிதத்தில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஒப்பமிட்டுள்ளனர். (ஐ-4)

# அரசோடு இயங்கும் ஹக்கீம் எதிராகச் செயற்பட்டது தவறே

### பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச், 28

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆவணத்தை வழங்கியிருக்கக்கூடாது என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் உள்ளக பிரச்சினையை உள்ளூரிலேயே பேசித் தீர்க்க வேண்டும். இதற்கு மாறாக எமது பிரச்சினைகளை வெளிநாடுகளுக்கு முறையிடுவதால் எந்த நன்மைகளும் வரப்போவதில்லை.

நடைபெறவுள்ள தேர்தலின் பின்னர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார். இதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்படலாம். ஆனாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியாகும்.

இந்த நிலையில் ஹக்கீம் இலங்கைக்கு எதிராக மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் ஆவணத்தை வழங்கியிருக்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார். (ஐ-10)

# வெளிநாட்டு உதவியுடன் யாழில் கலாசார சீர்கேடு

### இப்படிச் சொல்கிறார் யாழ். மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம்.மார்ச்.28

புலம்பெயர் நாடுகளின் நிதிப் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தில் கலாச்சாரத்தை சீரழிக்கும் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அரசியலிலும் இது விதிவிலக்கல்ல. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா.

யாழ்.மாநக சபையின் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை நேற்று கழிவு ஓயில் வீசித்தாக் கப்பட்டது. இது தொடர் பாக சபைக்கூட்டத்தில் கருத்துதெரிவிக் கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் கலாச்சாரத்தை சீரிகுலைக்கும் வகையில் சிலர்செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான சிலரை செயற்படுத்துவதற்கு புலம்பெயர் நாடுகளில் இருந்து பணம் பரிமாறப்படுகிறது.

எமது கலாச்சாரத்தை சீர் குலைக்கும் வகையில் இத்தகைய தீய சக்திகளால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை. இதற்கு காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ-14)

# வன்னி பகுதியில் இராணுவம் கல்விச் சூழலை குழப்ப முயற்சி

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வன்னியில் உள்ள பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களது விவரங்களை இராணுவத்தினர் திரட்டிவருவதாகவும் இதற்கு அதிபர்களை அவர்கள் வற்புறுத்தி மிரட்டி வருவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த இரண்டு வாரங்களாக பாடசாலைகளில் இராணுவத்தினர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமன்றி அதிபர்கள் கூட கடும் அச்சுறுத்தலுக் குள்ளாகியுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடானது மாணவர்களது கற்றல் செயல்பாடுகள் மாத்திரமன்றி ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடுகளையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

எனவே இத்தகைய செயற்பாடுகளை இராணுவத்தினர் கைவிட வேண்டும். வன்னியில் தற்போதுள்ள சூழ்நிலையை மாற்றி அச்சமான சூழ்நிலையை உருவாக்கி அதன் மூலமாக பாடசாலை செயற்பாடுகளை முடக்க முற்படுவது தவறானதாகும்.

இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து கல்வி அமைச்சின் செயலாளருக்கு இன்று முறைப்பாடு ஒன்றை தாம் பதிவுசெய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## தொடர்ச்சி

### இடுப்பின்

- இலங்கையில் நடந்த இறுதிப் போரின் கொடூரங்கள் குறித்து விளக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார் மருத்துவர் வரதராஜா.

இறுதிப் போர் நடைபெற்ற போது அந்தப் பகுதியில் மக்களுக்கு தன்னாலான மருத்துவ சேவைகளை வழங்கியவர் மருத்துவர் வரதராஜா. தற் போது வெளிநாட்டில் தங்கியுள்ள அவர் இறுதிப்போர் இடம்பெற்ற காலப்பகுதியில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை சனல்-4 தொலைக் காட்சி ஊடகத்துடன் பகிர்ந்து கொண்டுள்ளார். அதன்போது அங்கு இடம்பெற்ற கொடூரங்கள் குறித்து விளக்கினார்.

"இலங்கை அரசு மிக மோசமான முறையில் மருத்துவமனைகள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தியது. மனிதாபிமான உத விகளை எல்லாம் நிறுத்தியிருந்தது. வைத்திய சாலைகளுக்கு மருந்துப் பொருள்களை அனுப்புவதையும் அரசு நிராகரித்தது. உணவுப்பொருள்களைக் கூட அனுப்பவில்லை.

குருதி, மருந்து, நோயெதிர்ப்பு மருந்துகள் இல்லாமையால் போரில் காயமடைந்த பல உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் போனது. காயமடைந்தவர்களுக்கு அவர்களுடைய இரத் தமே திரும்பச் செலுத்தப்பட்டது. போதுமான இரத்தம் கையிருப்பில் இருக்கவில்லை தினமும் குழந்தைகள், பெரியவர்கள் என்று இறப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எனக்கு ஞாபகம் இருக்கின்றது. 60 வயதான முதியவர் அவரது இடுப்புக் கீழே துண்டாடப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தார். அவரைக்காப்பாற்றுவதற்கு எம்மால் எதுவும் செய்ய முடியாதிருந்தது. சத்திரசிகிச்சை உபகரணங்கள் எதுவும் இல்லை. அவர் சிறிது நேரம் அதிலிருந்து கத்திக் கொண்டிருந்தார். பின்னர் அப்படியே அவருடைய குரல் அடங்கி விட்டது.

போரின் இறுதிக் கட்டத்தில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். போர் முடிந்த பின்னர் நாங்கள் இராணுவ புலனாய்வாளர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். அப்போது அவர்களாலேயே செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது, எவ்வாறு கேள்விகள் எழுப்பப்படும், நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு பயிற்சி வழங்கினார்கள். கொழும்பில் அரசு ஒழுங்கு செய்து எம்மைக் கொண்டு நடத்துவித்த செய்தி யாளர் சந்திப்பு கிட்டத்தட்ட ஒரு நாடகம்தான்.

போர்க்களத்திலிருந்து, மக்கள் கொல்லப்படுகின்றமை தொடர்பில் நான் ஊடகங்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தமையால் என் மீது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் கோபமாக இருப்பதாக இராணுவப் புலனாய்வாளர்கள் தெரிவித்தனர். அவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதத்தில் செயற்பட்டாலே எனது விடுதலை சாத்தியம் என்பதையும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்" - என்று தெரிவித்துள்ளார் மருத்துவர் வரதராஜா. (ஐ-5)

## மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கணேசலிங்கம்



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசலிங்கம் நேற்று (27.03.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - இலக்சுமிப் பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் தங்கமுத்துவின் அன்புக்கணவரும் கவிதா (ஆசிரியர் கிளிநொச்சி விவேகானந்தா வித்தி யாலயம்), காந்தரூபி (கனடா), இளங்கோ (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சண்முகநாதன் (வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி), முருகதாஸன் (கனடா) ஆகியோரின் மாமனும் சருனிகா, சகீலன், நிக்ஷாலி ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவநகர்
உருத்திரபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

ஆசிரியர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியில் 5 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:078 8967168, 077 6320956
(29797)(6.2)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## கிறிஸ்தசேவ ஆச்சிரமம்

மருதனார்மடம், சுன்னாகம்

### நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு

அன்புடையீர்!

எதிர்வரும் சனிக்கிழமை (29.03.2014) அன்று மாலை 3.00 மணிக்கு அருட்திரு சேவக் S.S.செல்வரத்தினம் (பெரியண்ணன்) நினைவாகவும் அவர்தம் வாழ்வுக்கும் திருப்பணிக்கும் இறைவனுக்கு நன்றி கூறும் நற்கருணை வழிபாடு ஆச்சிரமத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜெரோம் அண்ணன்

## நன்றி நவில்கின்றோம்

## அமரர் அருளம்பலம் அருந்தவநாயகம்



எமது இல்லத்தின் கலங்கரைவிளக்கமாக திகழ்ந்த குடும்பத்தலைவர் **அமரர் அருளம்பலம் அருந்தவநாயகம்** அவர்களின் திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டு ஓடோடி வந்து உதவி புரிந்த ஊரவர்கள், சனசமூக நிலையங்கள் முன்பள்ளி ஆசிரியைகள், தீவக வலய ஆசிரியர் கள், ஆறுதல் நிறுவனம் மற்றும் வேலணை முத்துமாரி அம்பாள் பரிபால சபையினருக்கும், புளியங்கூடல் மகாமாரி அம்பாள் பரிபாலன சபையினருக்கும், வேலணையில் அமைந்துள்ள பிரதேசசபை, பிரதேச செயலகம், பலநோக்கு கூ.ச. சமுர்த்தி, வைத்தியசாலை, மின்சாரசபை, வங்கிகள், தபாலகம் போன்ற அலுவலகங்களிலிருந்து இறுதி அஞ்சலி நிகழ்த்தியவர்களுக்கும், பத்திரிகை மூலமும், கடிதமூலமும், தொலைபேசி மூலமும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டி லிருந்தும், அனுதாபம் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தி யவருக்கும், மலர்வளையம், மாலை வைத்து அஞ்சலி கூறியவருக்கும், சகல வழிகளிலும் உறுதுணையாக நின்று உதவிகளை நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

வேலணை.

குடும்பத்தினர்.

## சுகாதார பொறியியல் பகுதியை மேம்படுத்த உயர்மட்டக் குழு

### யாழ்.மாநகர சபையில் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.மாநகர சபையின் சுத்திகரிப்புப் பணிகள் தடைப்படுவதற்கு ஐக்கிய தொழிலாளர்களின் தேவையற்ற தலையீடுகளே பிரதான காரணம் என்று வெளியிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் சுகாதாரப் பொறியியல் பகுதியை மேம்படுத்த உயர்மட்டக்குழு ஒன்று மாநகர சபையால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற சுகாதாரக் குழுக் கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் சிரேஷ்ட மேற்பார்வையாளர்களால் மாநகர சபையின் சுத்திகரிப்புப் பணிகள் தடைப்படுவது தொடர்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.**

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற சுகாதாரக் குழுக் கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் சிரேஷ்ட மேற்பார்வையாளர்களால் மாநகர சபையின் சுத்திகரிப்புப் பணிகள் தடைப்படுவது தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இதன் அடிப்படையில் சுகாதார பொறியியல் பகுதியை மேம்படுத்த உயர் மட்டக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுகாதாரக் குழுத்தலைவரும் மாநகரசபை உறுப்பினருமான அ.ம.மங்களநேசன் சமர்ப்பித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.
அதைத்தொடர்ந்து சுகாதாரக் குழு உறுப்பினர்களுடன் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி சிரேஷ்ட மேற்பார்வையாளர்கள், பொதுச் சுகாதார பொறியியல் பிரிவு பொறுப்பதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.
சுத்திகரிப்புப் பணிகளில் ஐக்கிய தொழிலாளர்களின் தேவையற்ற தலையீடுகள் பல வருடங்களாக நிலவி வருவதால் மாநகர சபை வரியிறுப்பாளர்கள், வர்த்தகர்கள், சுகாதார மேம்பாடு கருதி சுகாதாரப் பொறியியற் பகுதிக்கென உயர்மட்டக் குழு ஒன்றைத் தெரிவுசெய்தால் அவர்களின் அறிக்கையின் பிரகாரம் சுத்திகரிப்புப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள வைக்க முடியும் என்று சபையின் கவனத்துக்குத் கொண்டு வருவதாக மங்களநேசன் தமது பிரேரணையில் தெரிவித்திருந்தார். (வ-7)



*விபத்துக்குள்ளான வாகனத்தை அப்புறப்படுத்தும் பணியில்....*

## டிப்பர் - பட்டா விபத்து சாரதி காயம்


தென்மராட்சி, மார்ச் 28
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அருகில் ஏ-9 வீதியில் டிப்பர் வாகனத்தின் பின் சில்லுப் பகுதியில் டிமோ பட்டா வாகனம் மோதியதில் அதன் சாரதிக்குக் காலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.15 மணிக்கு இடம்பெற்றது.
கண்டியிலிருந்து வந்த டிமோ பட்டா வாகனம் வீதியை விட்டு விலகி எதிர்த்திசைக்குச் சென்று எதிரே வந்த டிப்பர் வாகனத்தின் பின் சில்லுடன் மோதியதில் பலத்த சேதமடைந்தது.
சம்பவத்தில் காயமடைந்த டிமோ பட்டாவின் சாரதியான கண்டியைச் சேர்ந்த ரி.டி.ஜெயசுந்தர (வயது-27) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்த விபத்துத் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## வீதியில் இடைஞ்சலாக இருந்த மின்கம்பம் வீதியோரமாக நடப்பட்டது

முகமாலை வடக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதியின் நடுவில் காணப்பட்ட உயர்மின் அழுத்த மின் கம்பம் உரிய இடத்தில் மாற்றி நடப்பட்டுள்ளது.
கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான உயர் மின் அழுத்த மின்சார விநியோகத்துக்கான மின் கம்பங்கள் நடப்பட்ட வேளையில் பற்றைகளாகக் காணப்பட்ட பகுதிகளில் அவை நடப்பட்டன.
அதன் பின்னர் முகமாலை வடக்குக்கான மீளக்குடியமர்வுக்காக அங்குள்ள வீதியொன்று துப்புரவு செய்யப்பட்டபோது மின் கம்பங்களில் ஒன்று வீதியின் நடுவே காணப்பட்டது. பொதுமக்களின் கோரிக்கையை அடுத்து குறிப்பிட்ட அந்த மின் கம்பம் தற்போது வீதியோரத்தில் நடப்பட்டுள்ளது. (ஓ-9)

## மாநகர சபை சுகாதாரப் பணிமனை மீது இனந்தெரியாதோரால் கழிவு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பணிமனை மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை கழிவு ஒயில் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.
யாழ்.மாநகரசபையில் நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.
தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:
யாழ்.இந்து விடுதியில் அமைந்துள்ள குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் 2 ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுக் கழிவு ஒயில் ஊற்றப்பட்டது.
சுகாதார வைத்திய அதிகாரியின் இருக்கை, அவரது அலுவலக மேசைகள் கழிவு ஒயிலால் நிரம்பிக் காணப்படுகின்றன. மேலும் கழிவு ஒயில் எடுத்து வந்த போத்தல் சுகாதார வைத்திய அதிகாரியின் இருக்கையில் காணப்படுகின்றது. இதேவேளை இரண்டு மாதத்துக்கு முன்னர் குறித்த அறையின் தெற்குப் பக்கத்தில் உள்ள கண்ணாடி உடைபட்டிருந்தது. வீதியால் சென்றவர்கள் வீசிய போத்தலால் கண்ணாடி உடைபட்டிருந்திருக்கலாம் என அங்கு பணியில் இருந்தவர்கள் கருதினர். எனினும் நேற்று அதிகாலை இடம்பெற்ற ஒயில் வீச்சு. முன்னர் கண்ணாடியும் ஏற்கனவே திட்டமிட்டு உடைக்கப்பட்டிருந்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் உத்தியோகத்தர்கள் கருதுகின்றனர். (வ-7)



*கழிவு ஒயில் வீச்சுக்கு இலக்கான சுகாதார வைத்திய அதிகாரியின் இருக்கை, மேசை..*

## தொழிற்றிறன் கண்காட்சி இன்று

வலி. வடக்கு, மார்ச் 28
வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி. தெற்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொழிற்றிறன் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் திருமதி வேல்வராணி நல்லைக்குமார் தலைமையில் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியனும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் மற்றும் கிராம அபிவிருத்தித் திணைக்கள யாழ் மாவட்ட அலுவலர் திருமதி ந.அ.ஜெயராஜனும் கலந்து கொள்வர்.
கௌரவ விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ரதி நகுலேஸ்வரன், கணக்காளர் ஞா.லோகநாதன் மற்றும் கிராம அலுவலர் கோ.விக்கிரமசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-86)

## எரிபொருள் நிலையம் அமைப்பது குறித்து இறுதி முடிவை தற்போது எடுக்க முடியாது

### மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை இருந்த இடத்தில் அமைக்கப்படவிருந்த எரிபொருள் நிலையம் தொடர்பாக நாம் இப்போது எந்தவொரு தீர்மானமும் எடுக்க முடியாது. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கக் குழு அமைப்பதாகத் தெரிவித்துள்ளார் என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

**ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்க குழு அமைப்பதாகத் தெரி வித்துள்ளார்**

செஞ்சிலுவைச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பாக யாழ்.மாநகர சபை உதவி முதல்வர் எம்.ரமீஸ் கருத்துத் தெரிவிக்கையில்; கடந்த 13.01.2014 இல் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான அனுமதியை யாழ்.மாநகர சபை வழங்கியபின்னர் 26.02.2014 இல் குறித்த நிலையம் அமைப்பதற்கான தடை உத்தரவை முதல்வர் வழங்கியிருந்தார். ஏற்கெனவே அனுமதி வழங்கிய பின் எங்களுக்கு இந்த விடயம் தெரியாது என்று ஒரு மாதத்தின் பின் தெரிவித்ததன் மூலம் முதல்வர் சபையைத் தவறான வழி நடத்தலுக்கு உட்படுத்தியுள்ளார்.
ஏற்கனவே பல விடயங்களில் முதல்வர் தவறான வழி நடத்தல்களைக் கடைப்பிடித்து வந்ததை நான் பல தடவைகளில் தெரிவித்திருக்கின்றேன்.
மாநகர சபை தனது அனுமதியை வழங்கிய பின்னர் சங்கம் தனது கட்டடத்தை இடித்துள்ளது. தற்போது கட்டடம் அமைக்கத் தடை விதித்தால் செஞ்சிலுவைச் சங்கத்தினர் நீதிமன்றத்தை நாடிச் செல்லும்போது அதற்கான நட்டஈட்டை வழங்க வேண்டிய நிலை ஏற்படும். யார் நட்டஈட்டை வழங்குவது ஐ.ஓ.சி.ஒப்பந்தத்தின் பிரகாரம் இது செயற்படுத்தப்பட்டது. சுயமாக தமக்கு வருமானம் பெறக் கூடியதாக ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டது. முறைப்படி அனுமதி பெற்று அவர்கள் கட்டடத்தை இடித்த பின்னர் பொதுமக்களைக் காரணம் காட்டி எரிபொருள் நிலையம் அமைப்பதைத் தற்காலிகமாக தடை செய்தமை தவறு. பொதுமக்களின் எதிர்ப்பு என்பதற்காக வேலைத் திட்டங்களை நிறுத்துவதாயின் பல வேலைத் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட முடியாத நிலை ஏற்படும்.
அவர்கள் தமது சொந்தக் கட்டடத்தை இடித்த பின்னர் அனுமதி மறுக்கப்படுகிறது. மாநகர சபை முதல்வரால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்கி மறு பரிசீலனை செய்து அனுமதி வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (வ-7-14)

## இலவச மருத்துவ முகாம்

கொழும்புத்துறை, மார்ச் 28
இலவச மருத்துவ முகாம் சேவைகள் இந்த வாரம் யாழ். குடாநாட்டின் பல இடங்களில் நடைபெறவுள்ளன.
நாளைக் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப.2 மணி வரை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும் இலவச மருத்துவ முகாம்சேவைகள் நடைபெறவுள்ளன. நடைபெறவுள்ள மருத்துவசேவையில் இதய குழலி இடர் மதிப்பீடு, நீரிழிவு, இரத்த அழுத்தம் தொடர்பான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-135)



இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரரும் காங்கிரஸ் கட்சி வேட்பாளருமான முகமட் கைப் உள்ளூர் கிரிக்கெட் வீரர்களிடையே தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். (த)

# கனிமொழி - அழகிரி நேற்று திடீர் சந்திப்பு

சென்னை,மார்ச் 28

தி.மு.கவில் இருந்து நிரந்தரமாக நீக்கப்பட்ட மு.க.அழகிரி நேற்று தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினரும் தனது சகோதரியுமான கனிமொழியைச் சந்தித்தார்.

அழகிரி நேற்று முன்தினம் அவரது தாயார் தயாளு அம்மாளைச் சந்தித்தார். அப்போது, கருணாநிதி தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்றிருந்தார்.

இந்நிலையில் நேற்றுசென்னை சி.ஐ.டி காலனியில் உள்ள கனிமொழியின் வீட்டுக்குச் சென்றார் அழகிரி. இருவரும் அரை மணி நேரம் பேசியதாக கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பு குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு ஏதும் கட்சி தரப்பில் இருந்து வெளியாகவில்லை. இருப்பினும் இந்தச் சந்திப்பு தி.மு.கவினர் மத்தியில் பல்வேறு ஊகங்களைக் கிளப்பியுள்ளதாகத் தெரிகிறது.

மக்களவைத் தேர்தல் தி.மு.க வேட்பாளர் பட்டியலில் ஸ்டாலின் ஆதரவாளர்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றனர். அழகிரி, கனிமொழி ஆதரவாளர்கள் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர் என்று சலசலக்கப்பட்டு வந்த நிலையில், அழகிரி - கனிமொழி சந்திப்பு நடந்துள்ளது. (த)

# மனச்சாட்சியற்றவர் சோனியா காந்தி

## மோடி கடும் தாக்கு

பீகார், மார்ச் 28

சோனியா மனச்சாட்சியற்றவர். தேர்தல் வந்தால் மட்டுமே ஏழைகளை நினைத்துப் பார்க்கின்றார் என்று கூறியுள்ளார் நரேந்திர மோடி.



நரேந்திர மோடி

பீகார் மாநிலம் சஷாராம் பகுதியில் பா.ஜ.க சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது பேசிய அவர், இந்த தொகுதியில் இருந்து மீராக்குமாரை (மக்களவை சபாநாயகர்) தேர்ந்தெடுத்தீர்கள். அவர் உங்கள் பகுதிக்கு என்ன வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். எந்த வளர்ச்சியும்ஏற்படவில்லை. அவரது தந்தையின் (பாபுஜெகஜீவன்) கனவைநிறைவேற்றிய அவர் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால் விவசாயிகள் உணவின்றித் தவிக்கின்றனர்.

சோனியா மனச்சாட்சியற்றவர். தேர்தல் வந்தால் மட்டுமே ஏழைகளை நினைத்துப் பார்க்கின்றார். வீணாகும் தானியங்களை விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் கண்டிப்பையும் பொருட்படுத்தாத டில்லி காங்கிரஸ் அரசு, மதுபான ஆலைகளுக்குத் தானியங் களைக் கொடுத்தது. இதனால் விவசாயிகள் உணவின்றி தவிக்கின்றனர். உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குச் சாப்பிட உணவில்லை;

மதுவால் அவர்கள் வாழ்க்கை சீரழிந்து போகிறது; பீகார் வளர்ச்சி பெறாமல் இந்தியா வளர்ச்சி அடையாது;குஜராத்தில் 2 நிமிடம் மின்சாரம் இல்லை என்றால் தான் அது செய்தி; ஆனால் பீகாரில் மின்சாரம் இருந்தால் தான் அது செய்தி; இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் மின்சார வசதி பெற வேண்டும் - இவ்வாறு மோடி கூறினார். (த)

# சுற்றுலாத் தலங்கள் மீதும் முஜாகிதீன்கள் குறி வைப்பு

## பொலிஸ் விசாரணையில் புதிய தகவல்

புதுடில்லி,மார்ச் 28

இந்தியாவில் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழும் தாஜ்மஹால் உட்பட சுற்றுலாத் தலங்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்த இந்தியன் முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் தலைவனான தெஷின் அக்தர் என்ற மோனுவிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், இந்தியாவில் சுற்றுலாத் தலங்களைத் தகர்க்க அவர் சதித் திட்டம் தீட்டியிருந்தது தெரிய வந்துள்ளது.



கைதான தீவிரவாதி ஒருவர்

அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரும் தாஜ்மஹால், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள புஷ்கார், ஜோத்பூர், பரத்பூர், கோபால்கார் ஆகிய இடங்களைத் தகர்க்க இவர்கள் திட்டமிட்டு இருந்தனர்.

இதற்காக மோனு தனது கூட்டாளிகளுடன் சென்று இந்த இடங்களைப் பார்வையிட்டு நோட்டமிட்டு வந்துள்ளார்.

அனைத்து இடங்களிலும், ஒரே நேரத்தில் குண்டுவைத்து வெடிக்கச் செய்யவும், பின்னர் டில்லியில் ஆக்ராவை தகர்க்கவும் திட்டமிட்டு இருந்ததாக மோனு விசாரணையில் தெரிவித்துள்ளார்.

ஆனால், தீவிரவாதிகளும், அந்தக் கூட்டத்தின் தலைவனும் தற்போது கைது செய்யப்பட்டதன் மூலம் தாக்குதல் சதி முறியடிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தலங்களில் குண்டு வெடிப்புகள் நடத்துவதன் நோக்கமே இந்தியாவுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருவதை தடுத்து, அந்நிய செலாவணி கிடைப்பதைத் தடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# எதிர்க்கட்சிச் சூழ்ச்சியால் எனது பதவி பறிபோனது

## முன்னாள் முதல்வர் எடியூரப்பா

புதுடில்லி,மார்ச் 28

பா.ஜ.க. ஆட்சியில் எதிர்க்கட்சியினரின் சூழ்ச்சியால் எனது பதவி பறிக்கப்பட்டது என்று முன்னாள் முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார். இது குறித்து ஷிமோகாவில் நேற்று வியாழக்கிழமை அவர் கூறியது:

பா.ஜ.க ஆட்சியில் சுரங்க முறைக்கேட்டில் என் மீது லோக் ஆயுத வழக்கு பதிவு செய்தது. அதில் என் மீது எந்தக் குற்றமுமில்லாததால் உயர்நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது.



எடியூரப்பா

பா.ஜ.க ஆட்சியில் அரசியல் காரணங்களுக்காக என் மீது எதிர்க்கட்சியினர் தேவையில்லாமல் குற்றம் சாட்டியதால் எனது பதவி பறிக்கப்பட்டது. இதற்கு அரசியல் சூழ்ச்சிதான் காரணம். இதற்கு நான் பலிக்கடா ஆக்கப்பட்டேன். இதற்குச் சில ஊடங் கங்களும்அவர்களுக்குத் துணை போயின. என்னை அரசியலிலிருந்து ஒழித்துக் கட்ட யார் என்ன முயற்சி செய்தாலும் அது ஒரு நாளும் கைகூடாது. நான் நேர்மையாகபணியாற்றினேன் என்பது எனது மனச் சாட்சிக்குத் தெரியும். அரசியலில் நேர்மையானவர்கள் இல்லை என்பது உண்மைதான் என்றாலும் நான் எந்த தவறையும் செய்யவில்லை - என்றார் அவர். (த)

# ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்யும் அதிகாரம் எமக்குண்டு

## உயர்நீதிமன்றில் தமிழக அரசு தெரிவிப்பு

சென்னை,மார்ச் 28

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கான அதிகாரம் தமக்குள்ளதாகத் தமிழக மாநில அரசு இந்திய உயர்நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.



ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டதை அடுத்து, அவர்களின் தூக்குத் தண்டனை இந்திய உயர்நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நளினி, றொபேர்ட் பயஸ், ஜெயகுமார், ரவிச்சந்திரன் ஆகியோரும், முருகன் உட்பட ஏனைய மூன்று குற்றவாளிகளும் 23 வருடங்களுக்கும் மேலாகச் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளதைக் கருத்திற்கொண்டு அவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

இதனையடுத்து ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் மீது மத்திய அரச சட்டங்களின் கீழ் விசாரணை நடத்தப்பட்டுள்ளதால், அவர்களை விடுவிக்க தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லையெனத் தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு மனுத் தாக்கல் செய்திருந்தது.

எவ்வாறாயினும், உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பாகப் பதில் அளிக்கப்பட்டுள்ளதுடன், குற்றவாளிகள் ஏழு பேரும் மத்திய அரசின் தடா சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கிலிருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயுதத் தடைச் சட்டம் உள்ளிட்ட மத்திய அரசின் சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டதண்டனைகளைக் குற்றவாளிகள் ஏற்கனவே அனுபவித்து விட்டதாகவும் தமிழக அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தக் குற்றவாளிகள் அனைவரும் தமிழக அரசின் சிறைகளிலேயே அடைக்கப்பட்டுள்ளதுடன்,

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 432 ஆம் பிரிவின் கீழ் அவர்களை விடுவிக்கும் உரிமை தமிழக அரசுக்கு உள்ளதாகத் தமிழக அரசின் சார்பாக உயர்நீதிமன்றத்தில் முன்னிலையான மூத்த வழக்கறிஞர் ராகேஷ் திவிவேதி குறிப்பிட்டுள்ளார். (த)

## பாப்பரசரை முதல்முறை சந்திக்கிறார் ப்ராக் ஒபாமா

ரோம்,மார்ச் 28
பாப்பரசர் பிரான்சிஸை அமெரிக்க அதிபர் ஒபாமா முதற்தடவையாக வத்திக்கானில் சந்தித்துப் பேசுகிறார்.
நெதர்லாந்திலும் பிரசல்ஸிலும் மூன்று நாள்களாக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய ஒபாமா, பாப்பரசரைச் சந்திப்பதற்காக நேற்று ரோமுக்குப் பயணமானார்.
பாப்பரசரும் ஒபாமாவும் உக்ரைன் தொடர்பிலான கவலைகள் பற்றியும், மத்திய கிழக்கில் அமைதிக்கான தேடல் பற்றியும் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
எனினும் கருக்கலைப்பு, கருத்தடை மற்றும் ஒருபால் திருமணம் உள்ளிட்ட விவகாரங்களில் இருவருக்கும் இடையில் கருத்தொற்றுமை ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. (த)




அமெரிக்காவின் வொஷிங்டனில் இடம்பெற்ற மண்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 16 பேரின் சடலங்கள் மண்சரிவைத் தோண்டி வெளியில் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஆறு பேரின் சடலங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதும், அவற்றை மீட்டெடுப்பதில் சிக்கல்கள் காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 176 பேர் குறித்த தகவல் எதுவும் இன்னமும் தெரியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (த)

# மற்றுமொரு ஆபத்திலிருந்து தப்பியது மலேசிய விமானம்

## நடுவானில் இயந்திரம் தீப் பிடித்தது

கோலாலம்பூர்,மார்ச் 28
மலேசிய உள்நாட்டுப் போக்குவரத்து விமானம் ஒன்று நடுவானில் இயந்திரங்களில் ஒன்று தீப்பிடித்ததையடுத்து உடனடியாகத் தரையிறக்கப்பட்டது.
'மலிந்தோ எயார்' நிறுவனத்தின் பயணிகள் விமானம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கோலாலம்பூர் அருகே உள்ள சுபாங் விமான நிலையத்தில் இருந்து டெரங்கானு விமான நிலையத்துக்கான பயணத்தை ஆரம்பித்தது.
இந்த விமானத்தில் பயணித்தவர்களில் அதிகமானவர்கள் உதைபந்தாட்ட வீரர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



தீப்பற்றிய விமானம்

ஏ.ரி.ஆர் 72-600 என்ற இலக்கமுடைய இந்த விமானம் பயணத்தை ஆரம்பித்துச் சிறிது நேரத்தில் விமானத்தின் ஒரு இயந்திரத்தில் தீப்பிடித்தது.
இதனைத் தொடர்ந்து துரிதமாகச் செயற்பட்ட விமானி தீப்பிடித்த இயந்திரத்தை நிறுத்தியதுடன் விமானத்தை உடனடியாகத் திருப்பினார். பின்னர் சுபாங் விமான நிலையத்திடம் அனுமதியைப் பெற்றுப் பாதுகாப்பாக விமானத்தைத் தரையிறக்கினார். இதனால் பயணிகள் காயங்கள் எதுவுமின்றித் தப்பினர். அவர்கள் அனைவரும் மற்றொரு விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டனர். சரியான நேரத்தில் விமானம் தரையிறக்கப்பட்டதால் மிகப் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. (த)



இராணுவத் தளபதி அப்துல் பத்தாஹ் அல் சிசி

## ராணுவத் தளபதி பதவியை துறந்தார் அப்துல் பத்தாஹ்

கெய்ரோ,மார்ச் 28
எகிப்தின் இராணுவத் தளபதி அப்துல் பத்தாஹ் அல் சிசி தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.
தான் இராணுவச் சீருடையுடன் தோன்றும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவென அப்துல் பத்தாஹ் அல் சிசி தெரிவித்துள்ளார்.
அல் சிசி தனது பதவி விலகலை அறிவித்ததன் பின்னர் தனக்கு இந்த ஆண்டு இடம்பெறவுள்ள எகிப்தின் தேசியத் தேர்தல்களில் போட்டியிடும் எண்ணம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
எகிப்தில் கடந்த வருடம் ஜூலை மாதம் ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றதை அடுத்து அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் முர்ஸியைப் பதவி கவிழ்ப்பதில் முக்கிய பாத்திரம் வகித்தவர் அப்துல் பத்தாஹ் அல் சிசி என்பது குறிப்பிடத்தக்கது.
அப்துல் பத்தாஹ் அல் சிசிக்கு மக்கள் செல்வாக்குக் காணப்படுவதால் எகிப்தின் ஜனாதிபதித் தேர்தலில் அவர் இலகுவாக வெற்றி பெறக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன.
இருப்பினும் பரவலாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தமையால் அல் சிசி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் எகிப்தில் மீண்டும் சர்வாதிகாரம் தலைதூக்கும் என மனித உரிமை அமைப்புக்களும், எதிர்க்கட்சிகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன. (த)

# விமானத் தேடல் மீண்டும் நிறுத்தம்

## மோசமான காலநிலை காரணமாக

கோலாலம்பூர்,மார்ச் 28
விபத்துக்குள்ளானதாகக் கருதப்படும் மலேசியன் எயார் லைன்ஸ் விமானத்தின் பாகங்களைத் தேடும் முயற்சி, இந்தியப் பெருங்கடலின் தென் பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக நேற்று மீண்டும் நிறுத்தப்பட்டதாக ஆஸ்திரேலியா அறிவித்திருக்கிறது.
வியாழனன்று இந்த விமானத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட ஆறு விமானங்களும் தளத்துக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. கப்பல்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றன என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் கூறினர்.
புதன்கிழமை, பிரான்ஸ் செய்மதிப் படங்கள் இந்தப் பகுதியில் விமானத்தின் பாகங்களாக இருக்ககூடிய 122 பொருள்கள் மிதப்பதைக் காட்டுவதாக மலேசியா கூறியது.
இந்தப் படங்கள்தான் இது வரை கிடைத்ததிலேயே மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததாக இருப்பதாகவும் அது கூறியது.
இதனையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இந்தப் பகுதியில் தேடிய விமானங்கள், மூன்று பொருள்களைக் கண்டதாகவும், ஆனால் பலமுறை திரும்பத் திரும்ப விமானங்கள் பறந்தும், மீண்டும் அவைகளைக் காண முடியவில்லை என்றும் ஆஸ்திரேலிய கடல்சார் பாதுகாப்பு நிறுவனம் கூறியது.
இதுவரை, இந்தப் பகுதியில் விமானத்துடன் தொடர்புடைய ஒரு பொருளும் மீட்கப்படவில்லை. கொந்தளிப்பான கடல் பகுதியாதலால் பிரான்ஸ் செய்கோள் அனுப்பிய படங்கள், இந்தப் பொருள்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து மிதந்து வந்த பொருள்கள் அல்ல, ஒரே இடத்தில் மிதக்கும் விமானப் பொருள்களாக இருக்கலாம் என்று காட்டுவதாக அந்தப் படங்களை ஆராய்ந்த வல்லுநர்கள் கூறினர்.
இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டால், அவை விமானத்தின் பாகங்கள் என்று தெரிந்தால், அதை வைத்து, விமானம் விழுந்த இடத்தை வல்லுநர்கள் கணிக்க முயல முடியும், ஆனாலும் அது எளிதாக இருக்காது, என்று ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் கடலியல் துறை ஆய்வாளர் எரிக் வான் செபில் பிபிசியிடம் பேசுகையில் கூறினார்.
இந்தப் பகுதியில் கடல்நீர்ச் சுழல் மிகவும் பலமானதாக இருக்கும் என்றார் அவர். (த)

## மகன்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார் முர்தோக்

சர்வதேச ஊடகத் துறையின் மன்னனாகத் திகழும் ரூபர்ட் முர்தோக் தனது நிறுவனத்தின் இணைத்தலைமைப் பொறுப்பை மகன்களிடம் ஒப்படைத்தார்.
இந்தியாவில் ஸ்ரார் ஊடக குழுமம் உட்பட அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் ஏராளமான பத்திரிகைகள், தொலைக்காட்சி நிறுவனங்களைக் கொண்டுள்ள நியூஸ்கோர்ப் மற்றும் 20 பர்ஸ்ட் செஞ்சுரி பாக்ஸ் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தின் தலைவர் ரூபர்ட் முர்தோக்.
இவர் தனது ஊடக சாம்ராஜ்ஜியத்தில் மேற்கொண்டுள்ள அதிகார மாற்றம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், நியூஸ்கோர்ப் மற்றும் 20 பர்ஸ்ட் செஞ்சுரி பாக்ஸ் நிறுவன இணைத் தலைவராக லாக்லன் செயற்படுவார். இளைய மகன் ஜேம்ஸ் முர்தோக் செஞ்சுரி பாக்ஸ் நிறுவனத்தின் இணைத் தலைமை செயல்அதிகாரியாக செயல்படுவார் என்று கூறியுள்ளார். (த)

## சிரியாவிலிருந்து 49 சதவீத இரசாயன ஆயுதங்கள் நீக்கம்

டமஸ்கஸ்,மார்ச் 28
உலக இரசாயன ஆயுதத் தடுப்புக் கண்காணிப்பு அமைப்பு, சிரியாவில் இதுவரையில் மேற்கொண்டுள்ள ரசாயன அழிப்பு நடவடிக்கைகள் மூலம் 49 சதவீத இரசாயன ஆயுத மூலப் பொருள்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உள்ளது.
இரசாயன ஆயுதத் தடுப்புக் கண்காணிப்பு அமைப்பு ஐக்கிய நாடுகள் சபைக்குச் சமர்பித்த அறிக்கையில், சிரியாவில் இருக்கும் இரசாயன ஆயுதங்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றியமை, இரசாயன ஆயுதங்களைச் செய்வதற்கான மூலப் பொருள்களைப் பறிமுதல் செய்தமை என 49 சதவீத இரசாயன ஆயுதங்கள் தற்போதைய நிலையில் அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளன.
இந்த நிலையில் ஏப்ரல் 13 ஆம் திகதிக்குள் சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் நீக்கப்பட்டுவிடும். மேலும் நெருங்க முடியாத அச்சம் நிறைந்த பகுதிகளில் உள்ள 53.6 சதவீத இரசாயன ஆயுதங்களை ஏப்ரல் 27 ஆம் திகதிக்குள் நீக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயிக்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# உலகின் 9 ஆவது பணக்காரர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

## தற்போது நாட்டில் மிலேச்சத்தனமான அரசியல் என்கிறார் ஜனநாயகக் கட்சித் தலைவர்

கொழும்பு,மார்ச் 28
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உலகில் உள்ள செல்வந்தர்களில் 9 ஆவது இடத்தை வகிக்கிறார் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்க ஒதுக்கப்பட்ட பணத்தில் அதிகளவான பணம் ராஜபக்ஷவால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில் மூன்றில் ஒரு பங்கு நிதி ராஜபக்ஷவால் கொள்ளையிடப்பட்டுள்ளது.



சரத் பொன்சேகா

நாட்டில் இன்று இருப்பது மிலேச்சத்தனமான அரசியல். நாட்டின் ஆட்சியாளர் உலகில் 9 ஆவது செல்வந்தர்.

கடந்த காலங்களில் அவர் எனது சிறந்த நண்பர், ஆனால் இன்று தேசப்பற்றாளர் என்று பொய்யான சிங்கத் தோலைப் போர்த்திக் கொண்டு மார்பில் அடித்து கொள்கிறார்.

அவருக்கு நாட்டின் மீது அக்கறையில்லை. இவ்வாறானவர்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்-என்றார். (ச)

# உண்மையைப் பேசி வாழ்ந்தால் வாழ்வில் எப்போதும் மகிழ்ச்சி

வாழ்க்கை வாழ்வதற்கே. ஆனால் அதை ரசித்து ருசித்து அனுபவிப்பதற்கு இந்த உலகம் தேவை. நல்ல தேகாரோக்கியமான உடலும் தேவை. விஞ்ஞானம் விண்ணுயர வளர்ந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் உடல் நிலையை நன்கு பேணுவது அவசியமானதொன்று.

இறைவனை வழிபாடு செய்வதற்கு இந்த உடம்பு அத்தியாவசியமானது. இறை தொண்டு புரிவதற்கும் மனித உடல் தேவை. இந்த உடலின்றி இறை வழிபாடோ, இறை தொண்டோ செய்ய முடியாது. அத்தனை தூரம் இந்த உடல் முக்கியத்துவம் பெறுகின்றது. நீர்க் குமிழிக்கு நிகரானது. அழியுந்தன்மை வாய்ந்த மனித உடல் நிலையில்லாதது. நீறாக வல்லது உபயோ கமற்றது. ஆன்மா அழியாது. ஆக்கை தான் அழியும். எனவே இந்தப் பூமியில் யாரும் எவற் றையும் கொண்டு வருவதில்லை. கொண்டு போவது மில்லை. இருக்குமட்டுந்தான் எல்லா ஆட்டமும். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றபடி இறைவன் ஆடுகின்றான். நம்மை ஆட்டுவிக்கின்றான். நாங்கள் ஆடுகின்றோம்.

ஞானக்கதிர்

எல்லாமே சூனியந்தான். உலகில் நாம் உயிர் வாழும்வரை உணர்வுகள் இருக்கும். உணர்வுகள் உள்ளவரை உள்ளமும் இருக்கும். அன்புள்ளங்கள் அத்தனையும் அழுது அரற்றினாலும் மாண்டவர் மீண்டு வரப் போவதில்லை. ஆகவே நாம் இருக்கும் வரைக்கும் நல்லவற்றைச் செய்து நல்லவர்களாக வாழ்தல் வேண்டும். அப்போது தான் மனித நேயம் வளரும். புனித வாழ்வு மலரும்.

நன்றி-அருள்ஒளி

# நாட்டில் பிளவை ஏற்படுத்துவதே பலரின் நோக்கம்

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 28
நாட்டில் பிளவை ஏற்படுத்துவதே வெளிநாட்டு சக்திகளின் நோக்கமாக அமைந்துள்ளது என்று வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.



விமல் வீரவன்ச

கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மீண்டும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓட வேண்டும் என்பதே சர்வதேச சக்திகளின் இலக்காக அமைந்துள்ளது.

இந்த சூழ்ச்சித் திட்டத்துக்கு எதிராக தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இது அனைத்து இன மக்களினதும் பிரதான கடமையாகும். கொழும்பில் அனைவருமே அச்சத்துடன் வாழ்ந்து வந்தனர்.

மீண்டும் எமக்கு போர் அவசிய மில்லை. எங்களுக்கு வேண்டியது சமாதானம் மட்டுமே.

நாட்டில் மூன்று இன சமூகங்களுக்கு என தனி அடையாளங்கள் காணப்படுகின்றன. சில நாடுகளில் இருபதுக்கும் மேற்பட்ட இன சமூகங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த மூன்று இன சமூகங்களும் ஒன்றாக இணைந்து ஏன் ஒற்றுமையாக வாழ முடியாது -என்றார். (ச)

# கிழக்குப் பல்கலைக்கு ஜனாதிபதி வருகை

## புதிய கட்டடங்களைத் திறந்து வைக்க

கொழும்பு,மார்ச் 28
கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ வருகை தரவுள்ளார் என்று கிழக்குப் பல்கலைக் கழக துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

நூலகக் கட்டடத் தொகுதி, கலைப்பீட கட்டடத் தொகுதி, வணிக முகாமைத்துவப் பிரிவின் கட்டடடத் தொகுதி, உடற்பயிற்சிக்கான கட்டடத் தொகுதிகள் பூர்த்தியாகியுள்ளன. அவற்றைத் திறந்து வைப்பதற்காகவே ஜனாதிபதி கிழக்குக்கு வருகை தரவுள்ளார் என்று அவர் தெரிவித்தார். (ச)




# அச்சகக் கூட்டுத்தாபன கட்டடத்தில் தீ விபத்து

கொழும்பு,மார்ச் 28
அரச அச்சகக் கூட்டுத்தாபன கட்டடத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்து நேற்றுமுன்தினம் இரவு அச்சகக் கூட்டுத்தாபன கட்டடத்தில் உள்ள அறை ஒன்றில் ஏற்பட்டுள்ளது. எனினும் தீ உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தால் எந்த சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.**

**பிற்போடப்பட்டுள்ளது**

**அட்டவணைப்படுத்தப்படாத பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் - 2014**
**நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது -**
**வலிகாமம் வடக்கு, பிரதேச சபை**

மார்ச் மாதம் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் எமது பிரதேச சபையில் நடைபெறவிருந்த மேற்படி நேர்முகப்பரீட்சையானது தவிர்க்கமுடியாத காரணத்தினால் முறையே ஏப்ரல் மாதம் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

இ-அறிவரசன், செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை, மல்லாகம். (C/12966) (2.6.3)

**வீடு வாடகைக்கு**

சம்பியன் லேன், கொக்குவிலில் கே.கே.எஸ். வீதிக்கு அண்மித்த பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 633 3580 (46145) (6.2.3)

**தவறிவிட்டது**

தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு எனும் முகவரியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சுமங்கலா என்பவருடைய தே.அ.அ. (886403666V) நாச்சிமார் கோயிலுக்கு அண்மையாகத் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 077 387 3924 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (46142) (6.2.3)

**நிரந்தர வேலைவாய்ப்பு**

இலங்கையில் முகாமைத்துவ பயிற்சியிலும், சந்தைப்படுத்தல் துறையிலும் சிறந்து விளங்கும் எமது வவுனியா S.D.M கிளைக் காரியாலயத்திற்கு க.பொ.த.சா.தரம் கற்ற இருபாலாருக்கும் பயிற்சியுடன் வேலை வாய்ப்பு, பயிற்சிக் காலத்தில் சம்பளமும், பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழுடன் நிரந்தர வேலை வாய்ப்பும் 45000/= சம்பளமும் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும். (43230)(7.6.3)
தொடர்பு: 077 367 8472, 071 172 8832

**சாரதி தேவை**

யாழில் உள்ள பிரபல **Food Center** இற்கு நன்கு அனுபவமுள்ள, சாரதி அனுமதிப் பத்திரமுள்ள சாரதிதேவை. (C/12965) (6.2.3)
தொடர்பு: 077 231 3186

**விஞ்ஞான பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**அறிவித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள **முதலாம் வருட மாணவர்களின் 2012/2013 ஆம் கல்வி ஆண்டுக்கான அறிமுக நிகழ்வு 07.04.2014 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி வெள்ளிக்கிழமை 11.04.2014 பிற்பகல்2.30** மணிவரை நடைபெறும். இவ்வறிமுக நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 21.04.2014 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர் (சி.12963) (45.6.3)

**HNB அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்**

**ஹற்றன் நஷனல் வங்கி**

**யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, முல்லைத்தீவு, கைதடி, வேலணை, சங்கானை**

ஆகிய கிளைகளில் **10.02.2013**இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் **30.03.2014** தொடக்கம் **09.04.2014** (ஞாயிறு, புதன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி -

(சி.12962)(12.3.6)

# கிராம அலுவலரைப் பணி நீக்கம் செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

## வவுனியா செக்கடிப்புலவு மக்கள் அரச அதிபருக்கு மனு

கிளிநொச்சி,மார்ச் 28
வவுனியா செக்கடிப்புலவு கிராம சேவையாளரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா செக்கடிப் புலவு கிராம மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளனர்.
அத்துடன் வவுனியா பிரதேச செயலர், வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு அவர்கள் மனுவொன்றையும் கையளித்துள்ளனர்.
நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் வவுனியா மன்னார் வீதியில் ஒன்று திரண்ட மக்கள், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா மாவட்ட செயல்கம் ஆகியவற்றின் முன் பதாகைகளைத் தாங்கியவாறு வவுனியா செக்கடிப் புலவு கிராம சேவகரின் முறையற்ற செயற்பாடுகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் அது தொடர்பாக வவுனியா பிரதேச செயலர் மற்றும் வவுனியா மாவட்ட அரசஅதிபர் ஆகியோருக்கு மனு ஒன்றையும் கையளித்தனர்.
முறையற்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் வவுனியா செக்கடிப்புலவு கிராம அலுவலரை உடனடியாகப் பணி நிறுத்தம் செய்யுமாறு அவர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர். (த-402)



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

# மோசடிப் பெண்ணுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி,மார்ச் 28
சிறையில் உள்ள நபர் ஒருவரை பிணை எடுக்கக் கரைச்சி பிரதேச கிராம அலுவலர் ஒருவரின் பொய்யான கையொப்பங்களுடனான ஆவணங்களை நீதிமன்றில் கையளித்த பெண்ணுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸாரினால் முன்னிலைப்படுத்தப்பட்ட குறித்த பெண்ணைக் கடந்த 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிடப்பட்ட நிலையில் குறித்த பெண் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவரை எதிர் வரும் ஏப்ரல் 9 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-18)

# வரி, வாடகை செலுத்தாத 30 கடைகளுக்குச் 'சீல்'

கிளிநொச்சி,மார்ச் 28
கிளிநொச்சிப் பொதுச் சந்தை வளாகத்தில் இயங்கும், 2013 ஆம் ஆண்டுக்கான மின் கட்டணம், வாடகைப் பணம், வரிப்பணம் என்பவற்றைச் செலுத்தாத 30 வர்த்தக நிலையங்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகச் ' சீல் ' வைக்கப் பட்டு மூடப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் ந.கிருஸ் ணகுமார் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள கிளிநொச்சி பொதுச் சந்தையில், தற்போது 400 வரையான வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்த நிலையில் 30 வர்த்தகர்கள் பிரதேச சபைக்குரிய வாடகைப்பணம், வரிப் பணம் மற்றும் மாதாந்த மின் கட்டணம் என்பவற்றை உரிய முறையில் செலுத்தவில்லை.
இது குறித்து அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவர்கள் தொடர்ந்து கட்டணங்களைச் செலுத்தாமல் இருந்து வந்தனர்.
இதனையடுத்து இந்த வர்த்தக நிலையங்களுக்குச் கரைச்சிப் பிரதேச சபையால் சீல் வைக் கப்பட்டுள்ளது.

**குறித்த 30 வர்த்தகர்களும் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய 2013 ஆம் ஆண்டுக்கான வாடகைப்பணம், வரிப்பணம்,மின் கட்டணம் என்பவற்றைச் செலுத்தவில்லை.**

இவ்விடயம் தொடர்பாகக் கரைச் சிப் பிரதேச சபையின் செயலாளர் ந.கிருஸ்ணகுமாரிடம் கேட்டபோது,
குறித்த 30 வர்த்தகர்களும் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய 2013 ஆம் ஆண்டுக்கான வாடகைப்பணம், வரிப்பணம், மின் கட்டணம் என்பவற்றைச்செலுத்தவில்லை. அதனால் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகக் குறித்த கடைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன - என்றார். (த-55)


# பழைய முறிகண்டியில் தொடரும் மணல் அகழ்வு

## கிராமம் அழிவடையும் அபாயம்



கோப்புப் படம்

கிளிநொச்சி,மார்ச் 28
துணுக்காய் பழைய முறி கண்டிக் கிராமத்தில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் கிரவல் மணல் அகழ்வுகளினால் கிராமம் பெரும் அழிவுக்கு உள்ளாகும் அபாயம் உருவாகியுள்ளது.
அநுராதபுரத்திலும் யாழ்ப்பாணத்திலும் பெறும் அனுமதிப் பத்திரங்களை வைத்துக் கொண்டு நாள்தோறும் 10 இற்கும் மேற்பட்ட டிப்பர்கள் தொடர்ந்து பழைய முறி கண்டியிலிருந்து கிரவல் மணலை நாள் தோறும் ஏற்றிச் செல்வதன் காரணமாகக் கிராமம், சூழலியல் ரீதியான பெரும் அழிவுகளை எதிர் கொண்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.
வடமாகாண விவசாய அமைச்சர் இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-18)




கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பாண்ட் வாத்திய அணியினர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-18)

# யானைகளின் அட்டகாசத்தை தடுப்பதற்கு நடவடிக்கைகள்

## துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 28
துணுக்காயில், புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் எதிர்கொண்டுள்ள யானைகளின் அட்டகாசம் தொடர்பாக வனஜீவராசிகள் திணைக் களத்துக்கு அறிவித்துள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் க.குணபாலன் தெரிவித்தார்.
வனஜீவராசிகள் திணைக் களம் உடனடியாகச் செயற்பட்டு யானை வெடிகளைக் கொளுத்தி யானைகளைக் காட்டுக்குள் விரட்டி விட முடியும் எனவும் பிரதேச செயலர் கூறினார்.

**வனஜீவராசிகள் திணைக்களம் உடனடியாகச் செயற்பட்டு யானை வெடிகளைக் கொளுத்தி யானைகளைக் காட்டுக்குள் விரட்டி விடமுடியும்.**

இதேவேளை யானை வெடிகளைத் தமக்குப் பெற்றுத்தர பிர தேச செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், யானைகளினால் உயிர் இழப்புக்கள் இடம்பெற்றால் அதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் ஐயன்கன்குளம், புத்து வெட்டுவான், பழைய முறிகண்டி கிராம மக்கள் தெரிவித்தனர். (த-18)

# சிறுமிக்கு முத்தமிட்டவர் விளக்கமறியலில்

வவுனியா,மார்ச் 28
வவுனியா கோவில் குளத்தில் இயங்கி வரும் சிறுவர் இல்லத்திலிருந்து தப்பிச் சென்ற சிறுமிக்கு முத்தமிட்டவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
வவுனியா கோவில்குளம் சிறுவர் இல்லமொன்றிலிருந்த நான்கு சிறுமிகள் அண்மையில் தப்பிச் சென்றிருந்தனர்.
இவ்வாறு தப்பிச் சென்ற சிறுமிகள் குடாகச்சக்கொடி கிராமத்தில் உள்ள வீடொன்றில் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டுள்ளனர்.
அங்கிருந்தவர்களுக்குத் தமிழ் மொழி தெரியாததால் அயலில் உள்ள தமிழ் தெரிந்த ஒருவரை அழைத்து வந்து சிறுமிகளுடன் உரையாடச் செய்தனர்.
இரவு நேரம் என்பதால் சிறுமிகளைத் தம்முடைய வீட்டில் தங்குமாறும், காலையில் செல்லுமாறும் கூறித் தமிழ் தெரிந்த அந்த நபர் அழைத்துச் சென்றிருந்தார்.
சிறுமிகளும் அவருடைய வீட்டில் இரவு தங்கிவிட்டுச் செல்வதற்கு ஆயத்தமான நிலையில், தமிழ் மொழி தெரிந்த நபரான துமிந்த கமல் சுரவீர என்பவர் ஒரு சிறுமியை தனியான இடத்துக்கு கூட்டிச் சென்று முத்தமிட்டதாகவும் அதனைக் கண்ட அய்லவர்கள் மேற்படி விடயத்தைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.
குறித்த சிறுமிகள் பின்னர் சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து காப்பற்றப்பட்டு சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
சந்தேக நபரை வவுனியா பொலிஸார் [illegible] செய்து நீதிமன்றில் மு[illegible]லைப்படுத்தினர். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-402)

# பெற்றோரின் ஒத்துழைப்புடன் குடிதண்ணீரை வழங்குங்கள்

## கிளிநொச்சி வலயப் பணிப்பாளர் பாடசாலைகளுக்குக் கடிதம்


கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் குடி தண்ணீர் நெருக்கடி நிலவும் பாடசாலைகள், தம்மிடமுள்ள உள்ள நிதி மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப் புடன் குடிதண்ணீர் நெருக்கடியைத்தீர்க்கநடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் பாட சாலைகளின் முதல்வர்களுக்கு அறிவித்துள்ளார். பூநகரியில் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள முக்கிய பாடசாலைகளுக்கு இக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பூநகரி, அக்கராயன், கண்டாவளை, பளை ஆகிய பிரதேசப் பாடசாலைகள் கடும் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. (த-18)

# கிழக்கில் அரச நியமனத்தில் மாகாண இன விகிதாசாரம்

## அமைச்சரவை அனுமதி கிடைத்தது என்கிறார் உதுமாலெப்பை

திருகோணமலை,மார்ச் 28
கிழக்கு மாகாணத்தில் அரச நியமனங்களை மேற்கொள்ளும்போது மாகாண இன விகிதாசாரத்தைப் பேணுவதற்கு மாகாண அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான யோசனையை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மாகாண அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார். அந்த யோசனையை ஆராய்ந்த மாகாண அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளது என்று மாகாண அமைச்சரவைப் பேச்சாளரும், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி


உதுமாலெப்பை

அமைச்சருமான எம். எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

மாகாண அமைச்சரவையின் இந்த முடிவு மாகாண ஆளுநர் மொஹறான் விஜேவிக்கிரமவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் மாகாணத்தில் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படுகின்றமை மாகாணத்தில் வேலையில்லாப் பிரச்சினையை பெருமளவு குறைப்பதற்குத் துணையாக அமைந்துள்ளது.

எனினும், இவ்வாறான நியமனங்களின் போது, திறமை அடிப்படையை மாத்திரம் கவனத்தில் கொள்ளும்போது மூன்று இனங்களும் மிக நெருக்கமாக வாழும் கிழக்கு மாகாணத்தில், கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு வருகிறது.

தூரப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் குறித்த பிரதேச வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுகின்றபோது, மிகக் குறுகிய காலத்துக்குள் இடமாற்றம் பெறவோ, அல்லது தொழிலை விட்டுவிடுவதற்கோ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில்கொண்டு இனி வரும் காலங்களில் அரச நியமனங்கள் வழங்கப்படும் போது, மாவட்ட வெற்றிடங்களையும், மாகாண இன விகிதாசாரத்தையும் கவனத்தில் கொண்டு, நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அனுமதியைக் கோரி கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார். அதனை ஆராய்ந்த அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது-என்றார். (ச)

## பரீட்சை நிலையம் மாற்றம்

மட்டக்களப்பு,மார்ச் 28
கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட வெளிவாரி மூன்றாம் வருட மாணவர்களுக்காகப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவிருந்த பரீட்சைகள் யாவும் இடம்மாற்றப்பட்டுள்ளன.

வந்தாறுமூலை - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாளை சனிக்கிழமை தொடக்கம் மே மாதம் 25 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த அனைத்துப் பரீட்சைகளும் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள விபுலாநந்தா அழகிய கற்கைகள் நிலையத்தில் நடைபெறவுள்ளன என்று சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ச)


காட்டுயானைத் தாக்குதலுக்கு உள்ளான வீடு

## காட்டு யானைத் தாக்குதல் மட்டக்களப்பில் அதிகரிப்பு

### மயிரிழையில் தப்பினர் மூவர்

மட்டக்களப்பு,மார்ச் 28
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான புனாணை-ரெதிதென்ன கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை புகுந்த யானையொன்று பிரதேசத்தில் பலத்த சேதத்தை விளைவித்துள்ளது.

யானையின் தாக்குதலில் இருந்து மூவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

காட்டுப் பகுதியில் இருந்து அதிகாலை 2 மணியளவில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த குறிப்பிட்ட யானை வீடொன்றின் சுவரை உடைத்துள்ளதுடன் நெல் மூடைகளையும் சேதப்படுத்தியுள்ளது.

யானை வீட்டின் சுவரை உடைத்தபோது வீட்டில் அவரது தாயும் இரண்டு பிள்ளைகளும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

**யானைகள் குடியிருப்புக்குள் வருவதால் இரவு வேளைகளை அச்சத்துடன் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

எனினும் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர் என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் குடியிருப்புக்குள் வருவதால் இரவு வேளைகளை அச்சத்துடன் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பிரதேச வாசிகள் கவலை தெரிவித்தனர். (ச)

## கிண்ணியாப் பாலங்களில் விசித்திரமான உயிரினம்

### மூன்றாவது தடவையாக மிதப்பு

திருகோணமலை,மார்ச் 28
கிண்ணியாவில் மூன்றாவது தடவையாகப் பாம்பு போன்ற விசித்திரமான உயிரினங்கள் தோன்றி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த உயிரினங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை குட்டிக்கராச்சிப் பாலம், காக்காமுனைப் பாலம், குறிஞ்சாக்கேணிப் பாலங்களில் காணப்பட்டன.


சுமார் அரை அடி நீளமான வெள்ளை, கறுப்பு நிறங்களில் நீரின் மேல் தோன்றிய புழுப் போன்ற இந்த உயிரினம் இரவில் மட்டும் தோன்றுவதோடு பகலில் அவை தென்படுவதில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

நீரினுள் அரை அடி நீளமாகக் காணப்படும் இந்த உயிரினத்தைப் பிடித்து தரையில் போட்டவுடன் சிறிது நேரத்தில் பின்னர் அவை சுருங்கி கரைந்து விடுவதுடன் புழுப் போன்றும் காட்சியளிக்கின்றன.

முன்னர் இரு தடவைகள் இந்தப் பாலங்களில் காணப்பட்ட உயிரினம் வெப்ப காலங்களில் வெளிப்படுவது தெரிய வந்துள்ளது.

எனினும் கடல் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் இது பாம்பு அல்ல. சேறு சகதிகளுக்குள் விளையும் புழு இனம் என்று கூறுகின்றனர்.

எனினும் இந்த உயிரினம் பற்றிய ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (ச)


கிண்ணியாப் பாலங்களில் மிதக்கும் விசித்திரமான உயிரினம்

## பல்வேறுபட்ட திருட்டுடன் தொடர்புடைய குழு சிக்கியது


கோப்புப்படம்

அக்கரைப்பற்று,மார்ச் 28
அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் 20 கோயில்கள், கடைகள் உட்பட ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேசங்களில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்து வந்த 5 பேர் கொண்ட குழுவினரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் குழுவினரிடம் இருந்து சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து திருட்டுக் குழுவினரைச் சோந்த ஒருவரைக் கைது செய்ததையடுத்து அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் திருட்டுக் குழுவைச் சேர்ந்த 5 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் அக்கரைப்பற்று தொடக்கம் பொத்துவில் வரையுள்ள கோயில்களின் உண்டியல்கள், விக்கிரகங்கள் ,குத்து விளக்குகள் மற்றும் செம்பு, தாம்பாளங்கள் உட்பட 10 லட்சம் ரூபாவுக்கு மேலான பெறுமதியான பொருள்கள் அவர்களால் திருடப்பட்டமை தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## பிரதிக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றுங்கள்

### அவர் ஒழுங்காகப் பணிபுரிபவர் இல்லை என்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு,மார்ச் 28
பல்வேறு கல்வி வலயங்களில் பல பிரச்சினைகளுக்கு உட்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு நியமித்துள்ளமையை ஏற்றுக் கொள்ளமுடியாது. அவரை வேறு கல்வி வலயத்துக்கு உடனடியாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் நடைபெற்ற பகுதிகளை உள்ளடக்கிய கல்வி வலயமாகும்.

இந்த கல்வி வலயம் முற்று முழுதாக தமிழ் மாணவர்களைக் கொண்ட வலயம் என்பதுடன் 67 பாடசாலைகளைக் கொண்டு வளர்ந்து வரும் கல்வி வலயமாகும்.

இந்த கல்வி வலயத்துக்கு கல்முனை, பட்டிருப்பு, கிண்ணியா ஆகிய கல்வி வலயங்களில் கடமையாற்றிப் பல குற்றச்சாட்டுகள் காரணமாக வெவ்வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஒருவர் முகாமைத்துவப் பிரதிக் கல்விப்பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் உட்பட அனைத்துப் பகுதிக்குமான பிரதிக்கல்விப்பணிப்பாளரொருவர் கடமையாற்றும் நிலையில் மேலதிகமாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கல்விப்பணிப்பாளர் எங்கும் முறையாகப் பணி புரிந்ததாக நாங்கள் அறியவில்லை. அவர் தொடர் இடமாற்றங்களுக்கே உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

எனவே இந்த கல்விப் பணிப்பாளரை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலிருந்து மாற்றி வேறு பொருத்தமான வலயத்துக்கு இடமாற்றம் செய்ய வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## போலி நாணயத் தாள்கள் புழக்கம் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு,மார்ச் 28
நாடு முழுவதிலும் போலி நாணயத் தாள்களின் புழக்கம் உயர்வடைந்துள்ளது. இது தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தென் மாகாணத்தில் போலி நாணயத் தாள்களின் புழக்கம் அதிகளவில் காணப்படுகிறது என்று புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

5,000 ரூபா பெறுமதியான 2,500 இற்கும் மேற்பட்ட போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் உள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது.



கோப்புப்படம்

2013 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் 5,368 போலி நாணயத் தாள்களைப் பொலிஸ் திணைக்களம் கைப்பற்றியுள்ளது. அவற்றின் பெறுமதி 2 கோடி 48 லட்சமாகும் என்று பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது.

அதேபோன்று 2014 ஆம் ஆண்டில் இதுவரை 2,838 போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 14 லட்சத்து 17 ஆயிரம் ரூபாவாகும் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)



கம்பஹா மாவட்டத்தில் உள்ள 13 தேர்தல் தொகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்களை உள்ளடக்கி நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்து கொண்டு உரையாற்றினார். (ச)

# உள்நாட்டு விசாரணையை விரைவில் நடத்தவேண்டும்

### அரசிடம் கோருகிறது ஜாதிக ஹெல உறுமய கட்சி

கொழும்பு,மார்ச் 28
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் காலவரையறைக்கு அடிபணியாமல் உடனடியாக செயற்றிறன்மிகு உள்நாட்டு விசாரணையொன்றை அரசு நடத்த வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

**இலங்கை அரசு தவறிழைப்பதாக இருந்தால், அல்லது மனித உரிமைகளை மீறுவதாக இருந்தால், இந்த முறை தேர்தலில் அவர்கள் குறித்து தீர் மானம் ஒன்றை எடுக்க முடியும்.**

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
உள்நாட்டு விசாரணையொன்றை விரைவில் நடத்துமாறு நாம் அரசிடம் கோருகின்றோம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கால வரையறைக்கு அடிபணியாமல் அதனை நிறைவேற்ற முடியும்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி பிரபாகரனுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர். 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி பிரபாகரன் உயிரிழந்தார்.

இந்தக் கால இடைவெளிக்குள் இடம் பெற்ற விடயங்களை மாத்திரமே தெளிவுபடுத்துமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு கூறியுள்ளது.

அவை அனைத்தும் எவ்வாறு இடம்பெற்றன என்பது தொடர்பில் உள்நாட்டு விசாரணை அவசியமாகும். அதனைவிடுத்து தடை உத்தரவுகளுக்கு இடமளிக்க முடியாது.

இலங்கை அரசு தவறிழைப்பதாக இருந்தால், அல்லது மனித உரிமைகளை மீறுவதாக இருந்தால், இந்த முறை தேர்தலில் அவர்கள் குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும்- என்றனர். (ச)

## பெறுபேறுகள் ஏப்.10 இல் வெளியாகும்

கொழும்பு,மார்ச் 28
ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வெளியாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான செயன்முறை பரீட்சைகள் முடிவடைந்துள்ளன என்று அவர் கூறினார்.

2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற பரீட்சையில் ஆறு லட்சம் மாணவர்கள் வரை தோற்றியிருந்தனர் என்று அவர் குறிப்பிட்டார். (ச)


## கம்பளையில் தீ; ஆடைகள் நாசம்



கொழும்பு,மார்ச் 28
கம்பளை நகரத்திலுள்ள புடைவைக் கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் பெருந்தொகையான ஆடைகள் எரிந்து நாசமாகியுள்ளன என்று கம்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிங்கள-தமிழ் புத்தாண்டு விற்பனைக்காகக் கொண்டு வரப்பட்டிருந்த் ஆடைகளே இவ்வாறு எரிந்து நாசமாகி யுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

அவற்றின் பெறுமதி 50 லட்சம் ரூபாவுக்கு மேலாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கோப்புப்படம்

## பண்டிகையை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

### 8 முதல் நடைமுறைக்கு

கொழும்பு,மார்ச் 28
புத்தாண்டு பண்டிகை காலத்தில் பயணிகளுக்குத் தடங்கலின்றி சொந்த இடங்களுக்கு சென்றுவருவதற்காக எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை நடத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பண்டிகையை முன்னிட்டு கூடுதலான தூர சேவை பஸ்களை ஈடுபடுத்தவும் நேர அட்டவணைக்கு மேலதிகமாகதேவைக்கேற்ப 24 மணி நேரமும் பஸ் சேவை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பஸ்ரியன் மாவத்தையில் இருந்து எதிர்வரும் 8 முதல் 16ஆம் திகதி வரை சகல பிரதான நகரங்களுக்கிடையிலும் தூர சேவை பஸ் சேவைகள் நடத்தப்படும்.

அதற்கென பஸ்களுக்குத் தற்காலிக பயணிகள் அனுமதிப்பத்திரம் வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விசேட சேவை 24 மணி நேரமும் முன்னெடுக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## சிரியா,எகிப்து போன்றதொரு நிலையை இலங்கையிலும் உருவாக்க சூழ்ச்சிகள்

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 28
சிரியா, மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் நிலையைப் போன்றதொரு நிலையை இப்போது உருவாக்கச் சூழ்ச்சிகளை மேற்கொள்ளும் சர்வதேச நாடுகளுக்கு மக்கள் ஒன்றிணைந்து பதில் கொடுக்கும் தருணம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்குஅவர் மேலும் தெரிவித்ததாவது:-



நிமல் சிறி பால டி சில்வா

உள்நாட்டில் அரசைப் பலவீனப்படுத்தும் பலம் எந்த சக்திகளுக்குமில்லை. அதனால்தான் வெளிநாடுகளின் பலத்தோடு காலை வாரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. இந்தத் தேர்தல் மாகாண சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் தேர்தல் மட்டுமல்ல. நாட்டையும், அரசையும் பாதுகாக்கின்ற, அதற்குப் பதில் கொடுக்கின்ற தேர்தல்.

சிரியா, எகிப்து போன்ற நாடுகள் ஏகாதிபத்தியவாதிகளின் கோட்டையாக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் அரசுக்கு எதிராகச் செயற்பட எவருக்கும் பலம் இல்லை. அதனால் சில சக்திகள் வெளிநாடுகளின் உறுதுணையுடன் அரசைக் கவிழ்க்க சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றன- என்றார். (ச)

## மாகாணசபைத் தேர்தல் குறித்து 1007 முறைப்பாடுகள்

கொழும்பு,மார்ச் 28
மாகாணசபை தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் ஆயிரத்து ஏழு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 311 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

களுத்துறையில் 141 முறைப்பாடுகளும், கம்பஹா மாவட்டத்தில் 129 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

மாத்தறையில் 160 முறைப்பாடுகளும், காலியில் 106 முறைப்பாடுகளும் அம்பாந்தோட்டையில் 96 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

பரப்புரைக்கென அனுமதிக்கப்பட்ட கால பகுதிக்குள் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 36 முறைப்பாடுகளும், சட்ட விரோத கூட்டங்கள் மற்றும் பேரணிகள் என்பன தொடர்பில் 262 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச வாகனங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் 72 முறைப்பாடுகளும், அரச கட்டடங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் 46 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அரச அதிகாரிகளை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியமை தொடர்பில் 125 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசுக்கு எரிச்சலைத் தூண்டும் நவநீதம்பிள்ளையின் காட்டம்;

• இலங்கை அரசு கடந்த சில வருடங்களாக உருவாக்கிய, விசாரணைப் பொறிமுறைகள் மீது, பாதிப்புற்ற மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதன் காரணமாக, அவர்கள் அனைத்துலக விசாரணை ஒன்றின் மீதே நம்பிக்கை வைத்துள்ளனர். மேலும் அத்தகைய பொறிமுறை ஒன்றின் முன்னால் சாட்சியம் வழங்குவதற்கும் அவர்கள் தயாராக உள்ளனர் -

• இவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கை அரசு மீதான மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்கள் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் -

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் ஜெனிவாவில் நடைபெறும் மாநாட்டில் இதனை வெளிப்படுத்தி உள்ளார் ; வேண்டுகோள் விடுத்துள்ளார்.

• உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை தோல்வி அடைந்துள்ளமையால், சுயாதீனமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை அமைத்து அதன் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

★ மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட, அனைத்துலக மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாகச் சுயாதீனமான , நம்பகத் தன்மையான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்றும் -

★ பொறுப்புக் கூறுதல் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பாக, சுயாதீனமான, நம்பகத்தன்மை உள்ள விசாரணைகள் நடத் தப்படவில்லை என்றும் -

★ ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாடு நடை பெற்று வரும் வேளையிலும் (அதாவது கடந்த வாரத்திலும்) தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் உட்பட மனித உரிமைக் காவலர்கள் மீது (வடக்கில்) அச்சுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் தொடர்ச்சியான கண்காணிப்புக்குள் உட்படுத்தப்பட்டிருப்பது குறித்துக் கவலை கொண்டுள்ளோம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

★ கடந்த கால மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கென இலங்கை அரசு பல்வேறு பொறிமுறைகளை உருவாக்கிய போதிலும், அவை எதுவும் பாதிப்புற்ற மக்கள் மத்தியிலும் சாட்சி கள் மத்தியிலும் நம்பிக்கையை உண்டாக்கவில்லை. சுயா தீனமாகவும் அமையவில்லை.

★ கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக இலங்கை அரசு பல பொறிமுறைகளை உருவாக்கியது ; உருவாக்கி வருகிறது. எனினும் அவை எதுவும் பாதிக்கப்பட்ட மக்களிடம் சுயாதீனமானவை என்ற நம்பிக்கையை உண்டாக்கத் தவறிவிட்டன.

★ அதனால் புதிய சாட்சிகள் மூலமாகப் பல விடயங்கள் வெளிவர ஆரம்பித்து உள்ளன.

அதனால் சாட்சிகள் மத்தியில், தங்களுக்குப் பாதுகாப்பை வழங்கக் கூடிய சூழ்நிலையை வழங்க வல்ல அனைத்துலகப் பொறிமுறை (விசாரணைக் குழுக்கள்) ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற நிலை மேலெழுந்துள்ளது.

•• அதனைக் கருத்தில் கொண்டு அனைத்துலக விசாரணை மூலம் அனைத்துலக மனிதாபிமானச் சட்டமும் , மனித உரிமைகளும் மீறப்பட்டதை விசாரிக்க வேண்டும்.

•• இலங்கையின் உண்மை நிலையைக் கண்டறிவதற்கு நீதி, பொறுப்புக்கூறல் மிகவும் அவசியம்.

மேற்கண்டவற்றை விடவும், பின்வரும் அம்சங்களையும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டி உள்ளார்.

★★ இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில்-

★★ அனைத்துலக உதவியுடன் சுயாதீனமான, நம்பகத்தன்மையான குற்றவியல் தடயவியல் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பனவற்றையும் மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் உள்ளடக்கி உள்ளார்.

இவற்றையும் இன்னும் பல மனிதாபிமான, மனித உரிமைகள் சார்ந்த பல அம்சங்களையும் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது மிக நீண்ட அறிக்கையில் இடித்து உரைத்து உள்ளார்.

எனினும் எமது நாட்டு அரசு, மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்துக்களில், பரிந்துரைகளில் கவனம் செலுத்துமா அல்லது வழமை போன்று தனது ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளிவிடும் போக்கை கைக்கொள்ளுமா என்பது நாள்கள் நகரத்தான் தெரியவரும்...

அனைத்துலக விசாரணை என்பது அரசுக்கு ஒவ்வாமையை - அலர்ஜியைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

எதற்கும் -

நன்றும் தீதும் பிறர்தர வாரா - என்ற கனியன் பூங்குன்றனாரின் தத்துவத்தை ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்வார்களா என்பது இன்றோ, நாளையோ தெரியவரும்!

# சுயாதீன விசாரணையில் இலங்கைக்கு ஆபத்து

நித்தியபாரதி

இலங்கை அரசின் நூறு வரையான ஆதரவாளர்கள் கடந்த வாரம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்ததுடன், இந்துக்களின் சமய முறைப்படி அமெரிக்கத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தேங்காய்களை உடைத்தனர். எமது நாட்டின் அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் அமெரிக்காவை ஒருபோதும் அனுமதியோம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்போது தெரிவித்தனர்.

இலங்கையின் தலைநகர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால், இலங்கை அரச ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்த மறுநாள் இலங்கையிலிருந்து பல மைல்கள் தொலைவிலுள்ள அமெரிக்காவிலிருந்து அதன் இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்கள் இருவர் கடத்தப்பட்டமை தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

இலங்கையின் நீண்ட உள்நாட்டுப் போரின் போது அதில் பங்குகொண்ட இரு தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காகத் தமது வாழ்வைப் பணயம் வைத்துத் துணிந்து செயற்படும் தனது சொந்தக் குடிமக்களான இலங்கையர்களுக்கு எதிராக இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் மிகவும் மோசமானவையாகும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட வரைவுக்கான வாக்களிப்பு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இடம்பெறவுள்ள நிலை யில், ஏற்கெனவே இது தொடர்பில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் தீவிரம் பெற்றுள்ள முறுகல்நிலை மேலும் அதிகமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது இலங்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணையை அனைத்துலக சமூகம் ஆரம்பிக்குமா அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதற்கான வாக்களிப்பே இன்று இடம்பெறவுள்ளது.

இலங்கையில் கைதுசெய்யப்பட்ட முதன்மை மனித உரிமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான றுக்கி பெர்னாண்டோவும் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் சமாதானம் மற்றும் மீளிணக்கப்பாட்டுக்கான மையத்தின் இயக்குநரும் கத்தோலிக்க மதகுருவுமான வணக்கத்துக்குரிய பிரவீன் மகேசன் அவர்களும் கடந்த செவ்வாயன்று இலங்கை காவற்துறையினரால் விடுவிக்கப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்ட இவ்விருவரும் தடுப்பிலிருந்த மூன்று நாள்களும் வெளிநாட்டு ஊடகங்களுடன் பேசுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டதுடன், இவர்களிட மிருந்து கைப்பற்றப்பட்ட இவர்களது கணினிகள் மற்றும் கைத்தொலை பேசிகளின் 'சிம்' அட்டைகளையும் கையளிக்குமாறு



கட்டளையிடப்பட்டிருந்து.

இலங்கை அரசிடம் சரணடைந்து காணாமற் போனவர்களின் உறவுகளுக்காக முன்னின்று செயற்படும் ஜெயக்குமாரி பாலேந்திரன் தற்போதும் இலங்கை அரசின் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மனித உரிமைச் செயற்பாட்டாளர் றுக்கி பெர்னாண்டோ, வணக்கத்துக்குரிய பிரவீன் மகேசன் மற்றும் ஜெயக்குமாரி பாலேந்திரன் ஆகிய மூவரும், இலங்கை அரசின் தடுப்பிலிருந்து தப்பிச் சென்று நோர்வேயில் முகாமிட்டுள்ள ஆயுததாரியான கே.பி.செல்வநாயகத்துடன் தொடர்பைப் பேணுகிறார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே தடுத்து வைக்கப்பட்டதாக இலங்கை அரசு தெரிவித்திருந்தது.

இந்த மூன்று மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கைதுசெய்யப்பட்ட புலிகளின் முன்னாள் கோட்டையாக விளங்கிய கிளிநொச்சியில் வெடிமருந்துகளை மறைத்து வைத்திருந்ததாகவும் இலங்கை அரசு குறிப்பிட்டிருந்தது. மோட்டார்கள், கைக்குண்டுகள் மற்றும் கண்ணிவெடிகள் உட்பட வெடிமருந்துகளை ஒளித்து வைத்திருந்தனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டனர். இவர்கள் கைதுசெய்யப்பட்டமையை மனித உரிமை அமைப்புக்கள் பல கண்டித்ததுடன், தற்போது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருமதி பாலேந்திரன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தான் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினரால் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவதாகவும் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் துன்புறுத்தப்படுவதாக வும் இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரணதுங்க கடந்த வாரம் முறையிட்டுள்ளார்.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான கைதுகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் பேரவையில் முன்வைக்கப்படும் தீர்மானத்தை எதிர்த்து நிற்பதற்கான வலுவை அரசுக்கு வழங்குமா எனவும் இலங்கை அரசு தனக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை தானே உறுதிப்படுத்த முயற்சிக்கிறதா எனவும் கொழும்பிலுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிறைவேற்று இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை காவற்துறையினர் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஏனைய உலக நாடுகளுக்கு விளக்கும் வகையில் இலங்கை அரசு தனது இராஜதந்திரக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளது.

போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் கூட, சாத்தியப்பாடான போர்க் குற்றவிசாரணைகளுக்குப் பொறுப்பளிக்க வேண்டும் என இலங்கை அரசு சிறிதளவேனும் கருதவில்லை. 2009 இல் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இலங்கையால் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளத் தவறும் பட்சத் தில் நாட்டில் கிளர்ச்சிகள் தோன்றக் கூடும் என அனைத்துலக சமூகம் அச்சம் கொள்கிறது.

இந்த நிலையில், இலங்கை அரசின் இழுத்தடிப்புக்கள் தொடர்பில் அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் பொறுமை இழந்துள்ளதுடன், அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. நாட்டில் நீண்ட காலம் தொடரப்பட்ட போரை முடிவுக்கு கொண்டு வந்தவர் என்ற ரீதியில் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ பிரபல்யம் பெற்றுள்ளார். போர் முடிவடைந்ததன் பின்னர் நாட்டில் பொருளாதாரம் புத்துயிர் பெற்றுள்ளது.

ஆனால் போர்க் கால மீறல்களை விசாரணை செய்வதற்கான சுயாதீன விசாரணையானது இலங்கை அதிபருக்கும் அவரது சகோதரர்களில் குறைந்தது ஒருவருக்காவது அதாவது இராணுவத்தை வழிநடத்திய பாதுகாப் புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வுக்கும் ஆபத்தை விளைவிப்பதாக அமையலாம்.




# மகத்துவம் நிறைந்த மன்னார்க் கழுதைகள்

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னாரின் பழைமை வாய்ந்த வரலாறும், கலாசாரமும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே பிரசித்தி பெற்றிருந்ததை எவராலும் மறுக்க முடியாது.

அழகான, மனதைக் கவரும் காட்சிகளும், இயற்கை வளங்களும், இன்னும் உலகப் பிரசித்தி பெற்ற முத்து விளைகின்ற கடல்வளமும், பல்வேறு நாடுகளிலுள்ள பறவைகளைக் கவர்ந்திருக்கும் இதமான காலநிலையும், கற்பகதருவான பனைவளமும், இலங்கையில் பிரசித்தி பெற்ற கருவாடும் என நீண்டு கொண்டு செல்லும் மன்னாரின் வளங்களோடு இன்று சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிராணிகளாக மன்னார்க் கழுதைகள் மாறியிருப்பது மகிழ்ச்சி மிக்க தொன்றாகும் என டயஸ்போரா லங்கா அமைப்பின் திட்ட இணைப்பாளர் கெல்வின் பர்னாந்து தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கழுதைகள் சுற்றுலாப் பயணிகளை இலகுவாகக் கவருகின்ற, மனிதர்களோடு நெருங்கிப் பழகக்கூடிய பிராணிகளாகும்.

மன்னாரிலுள்ள கழுதைகள் பராமரிக்கப்படுகின்ற முறையைப் பார்த்து பல சுற்றுலாப் பயணிகள் பரிதாபப்படுவதோடு அவற்றினால் சுற்றுலாத்துறைக்குக் கிடைக்கும் இலாபத்தை மக்கள் கண்டுகொள்ளாதமை குறித்துக் கவலையும் அடைகிறார்கள்.

கழுதைகள் மிகவும் இணக்கமான, மனிதர்களோடு நெருங்கி பழகக் கூடிய பிராணிகளாகும்.

சுற்றுலாப் பயணிகளும், வெளிநாட்டு இயற்கை நலன் விரும்பிகளும் மன்னாரிலுள்ள கழுதைகளைப் பராமரிப்பதன் மூலம் மன்னார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வது தொடர்பாக மன்னார் நகர சபையுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளார்கள். ஆனால் அதற்குத் தகுந்த ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமானதாகும்.

கடந்த வருடம் 'மன்னாரின் மறுமலர்ச்சி' திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து மன்னாருக்கு வருகை தந்த மிருக வைத்திய நிபுணர் குழுவொன்று மன்னாரிலுள்ள கழுதைகளுக்கான ஒரு மருத்துவச் சிகிச்சையையும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் மன்னார் நகரசபை மற்றும் மிருக வைத்திய அதிகாரியுடன் இணைந்து நடத்தியமை குறிப்பிடத்தக்கது. மன்னாரிலுள்ள கழுதைகள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப் பதன் மூலம் மன்னாரின் பொருளாதாரத்தை அதிகரிக்க உதவுகின்றன.

மன்னாரிலுள்ள சில பாடசாலைகளில், சிறப்பாக சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, சாந்திபுரம் ஆரம்ப பாடசாலை, மற்றும் சில பொது இடங்களிலும் கழுதைகளைப் பராமரிப்பது தொடர்பாகவும், அவற்றின் நன்மைகள் தொடர்பாகவும் பல விழிப்புணர்வுப் பட்டறைகள் மாதர் சங்கங்களினால் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அங்கே மாணவர்கள் பலர் கழுதைகள் தொடர்பாக ஒரு வகையான நேர்நிலையான எண்ணத்தை வளர்த்துக் கொண்டார்கள்.

இந்த வகையான சிகிச்சை முறைகள் இங்கிலாந்து நாட்டில் மிகுந்த வெற்றியளித்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மன்னாரிலுள்ள ஒரு சில குடும்பங்கள் மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்காக கழுதைகளை வளர்க்க ஆரம்பித்துள்ளமை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. இவர்களால் வளர்க்கப்படும் கழுதைகள் மன்னாரிலுள்ள மாற்றாற்றல் நிறுவனத்திலுள்ள (MARDAP) பிள்ளைகளின் சிகிச்சைக்காகக் கையளிக்கப்படும்.

ஆரம்ப காலங்களில் இலங்கைக்கு வியாபார நோக்கத்துக்காக வருகை தந்த இஸ்லாமிய வணிகர்களே கழுதைகளைத் தமது தேவைக்காகக் கொண்டு வந்தார்கள். மன்னாரிலுள்ள கழுதைகள் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சோமாலியாவிலிருந்து வருகை தந்த இஸ்லாமிய வணிகர்களால் கொண்டுவரப்பட்டதாக ஆய்வுகள் சான்று பகர்கின்றன.

மன்னாரில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட அதிகமான கழுதைகள் காணப்படுவதால் மன்னார் நகரமானது கழுதை நகரம் எனச் செல்லமாக அழைக்கப் படுகின்றது.

கழுதைகள் எழுப்பும் ஒலி தென்னந் தோப்புகளிலுள்ள வண்டுகளைத் துரத்தியடிப்பதனால் இலங்கையின் பல இடங்களிலுமுள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்கள் மன்னாரிலுள்ள கழுதைகளை நாடி வருகின்றார்கள்.

கடந்த காலப் போர் மக்களுக்கும் கழுதைகளுக்கும் இடையிலான உறவை முறித்துவிட்டது. இதனால் மன்னாரிலுள்ள கழுதைகளின் எண்ணிக்கை அதீதமாகக் குறைந்துள்ளது.

தற்போது மன்னாரில் 1000 இற்கும் அதிகமான கழுதைகள் காணப்படுவதோடு மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதியில் கிட்டத்தட்ட 400 கழுதைகள் காணப் படுகின்றன.

மன்னார் நகர வாசியான பீற்றர் சிங்கிளேயர் கூறுவது போல கடந்த காலத்தைப் போன்று மன்னாரிலுள்ள கழுதைகளைப் பராமரித்து அவற்றின் மூலம் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

மன்னாரிலுள்ள கழுதைகளை பராமரிப்பதன் மூலம் பயனடைய விரும்பும் யாராயினும் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு டயஸ் போரா லங்கா அமைப்பின் திட்ட இணைப்பாளர் கெல்வின் பர்னாந்து தெரிவித்துள்ளார்.

## தவக்காலச் சிந்தனை



### மெஞ்ஞானமே நடுநிலையின் ஆணிவேர்

உள்ளம் உள்ளங்கை அளவுதான். ஆனால் அதன் சிந்தனை வெளிப்பாடும், ஆற்றலும் உலகை விடப் பெரியது. நல்லெண்ணங்களும் தீய நாட்டங்களும் ஒரே உள்ளத்தில் பொதிந்து கிடக்கின்றன. தீயதைக் கட்டுப்படுத்தி நன்மையை மேலோங்க விடுவது நெஞ்சக் கட்டுப்பாட்டிலும், ஞானத்தின் தெளிவிலும் தங்கியுள்ளது. சரி எது, பிழை எது என்பதை எமது மனம் எந்நேரமும் சொல்லிக் கொண்டேயிருக்கும். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையும் ஆள் பார்த்து செயற்படுவதும் உண்மைக்குப் புறம்பாக பக்கம் சாரும் நிலையைத் தோற்றுவிக்கிறது. அதுவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது.

எமது சிந்தனைக்குத் திரையைத் தட்டிவிட்டு அது தரும் பொது முடிவை செயற்படுத்துவதே நடுநிலை தவறாத தீர்ப்பைத் தரும். உண்மையை எதிர்த்துப் பொய்யுரைப்பதும், பொறாமை, மனக்கசப்பு, கட்சி மனப்பான்மை மண்ணுலகு சார்ந்த ஞானமாகும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும். பொறுமை கொள்ளும். இணங்கிப் போகும். இரக்கம் நற்செயல்களுடன் நடுநிலை தவறாது அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் கனி விளைகிறது. (யாக்.3 3:17-18)

மெஞ்ஞானத்தில் உருவமான இறைவனின் திருச் சித்தத்தை நிறைவேற்றவே இயேசு நடுநிலையாளராகப் பிறந்து எமக்காக இறந்து விடுதலை தந்தார். எமது பணிவு, நன்னடத்தை ஆய்ந்துணரும் நடுநிலைத் தன்மைகளால் எமது வாழ்வில் மெய்ஞானத்தை வெளிப்படுத்துவோம்.

யே.சுபீட்சன் கொழும்புத்துறை

## ஆறறிவுக்கு மதிப்புக் கொடுங்கள்

வாசகர் திருமுகம்

அது ஒரு காப்பெற் வீதி. முன்பு குன்றும் குழியுமாகப் பாவனைக்கு உதவாது பலரது விமர்சனத்துக்கு ஆளான வீதி. அதன் மேலாக பல தரப்பட்ட வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. பாதசாரிகளும் பயணித்த வண்ணமாக உள்ளனர். அது மட்டுமல்ல கட்டாக் காலிகளும் நாய்களும் கூட. கட்டாக்காலிகளை விட நாய்கள். யமன் உருவத்தில் வாகனச் சாரதிகளுக்குக் காட்சியளிக்கும். அவை எந்தப் பக்கம் ஓடும் என தீர்மானிப்பதற்குள் விபத்து நிகழ்ந்துவிடும். சில சமயம் நாயானது இரத்தம் வடிய வடிய வாள்.. வாள் எனக் கத்திக் கொண்டு ஓடும். அன்றேல் ஸ்பொட்டிலேயே இறந்து விட்டிருக்கும்.

வீர மரணம் அடைந்து கிடக்கும் நாயை எடுத்து அப்புறப்படுத்துவதற்குள் வயிறு பெருத்து நாற்ற மெடுக்கத் தொடங்கிவிடும். மோட்டார் சைக்கிள் வரும் வேகத்தைப் பொறுத்து நாயை அடித்துப் பிரட்டிவிட்டு அதற்குப் பிராயச்சித்தமாக நானும் பிரண்டு கிடப்பதுண்டு. சாரதியை ஏற்ற அம்புலன்ஸ் வருவதுமுண்டு. இது யதார்த்தம். இதனால் வாகனச் சாரதிகள் நாயைக் கண்டுவிட்டால் வேகத்தைக் குறைத்து தம்மை நிதானப் படுத்திக் கொள்வதும் கண் கூடு. காரணம் தமது உயிரின் மேலுள்ள ஆசையாலும், வாகனத்துக்கேற்படும் சேதங்களுக்குப் பயந்துமே. ஐந்தறிவு படைத்த பிராணிகளுக்கு பயந்து பயந்து மிகவும் அவதானமாக வாகனம் ஓட்டும் இவர்கள்... ஆறறிவு படைத்தவர்களைக் கண்டால் மட்டும் அக்ஸிலேட்டரை இன்னும் முறுக்குவார்கள். அப்படியாயின் இந்தச் சாரதிகளுக்கு ஆறறிவை விட ஐந்தறிவு மேல் போல் தெரிகிறதோ? ஏழாம் அறிவுக்காரன் தான் வரவேண்டுமென பார்வையாளர் விரும்புகிறார்கள். இதுவும் நியாயம் தானே?

S.N.J. மரியாம்பிள்ளை - குருநகர் யோகி-
645/1, கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**இடபம்**: நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மிதுனம்**: உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். திட்டமிடாத செலவுகளை போராடிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.

**கடகம்**: புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயற்படப்பாருங்கள்.

**சிங்கம்**: ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**கன்னி**: கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**துலாம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**விருச்சிகம்**: நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**தனுசு**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். நெருங்கிய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**மகரம்**: கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கும்பம்**: யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளை கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்பாருங்கள். எதிலும் அவசரப்பட வேண்டாம்.

**மீனம்**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

## நாளை

**பங்குனி-15 சனிக்கிழமை | 29.03.2014**

திதி: சதுர்த்தசி பி.இ.02.45 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ.03.10 வரை
சுபநேரம்: 03.13-04.43 வரை
இராகுகாலம்:. 09.13-10.43 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### சித்துப் பிராணன்

முதுகுத்தண்டு ஓர் அதிசயமான வகையில் அமைந்திருப்பதை நாம் அறிவோம். எட்டு என்ற இலக்கத்தைப் படுக்க வைத்து எழுதினால் அதில் இரண்டு பகுதிகள் தோன்றுகின்றன. அவை நடுவில் ஒன்றோடு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு படுத்து அமைந்த 'எட்டு' இலக்கத்தை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கினால், அதன் சேர்க்கை முதுகுத்தண்டு போல் தோன்றும். இடது பக்கம் இருப்பது இடை ; வலது பக்கம் இருப்பதை பிங்கலை. முதுகுத் தண்டின் ஊடே செல்வது சுழுமுனை என்ற துளை பொருந்திய குழாய். முதுகுத் தண்டின் கீழ் பாகம் முடிகின்ற இடத்தில் எலும்பில் (Lumbar Vertebrae) மிக நுண்ணிய நரம்பு கீழ் நோக்கிச் செல்கிறது. அந்த நுண்ணிய நரம்பின் வழியாக மிகமிக நுட்பமான சுழுமுனை நாடிக்குழாய் செல்கிறது. இந்த நரம்பின் கீழ் நுனியின் துளை சாதாரணமாக மூடியிருக்கும். அது நரம்பு மண்டலத்துக்கு (Sacral Plwxus) அருகில் உள்ளது. தற்கால உடல், நூல் விஞ்ஞானிகள் அது முக்கோண வடிவத்தில் உள்ளது என்கின்றனர். முதுகுத் தண்டில் உள்ள வெவ்வேறு நரம்பு மண்டல மையங்களை, யோகி கூறும் வெவ்வேறு 'தாமரைகளோடு ஒப்பிடலாம்.

யோகிகளின் கருத்துப்படி முதுகுத் தண்டில் இரண்டு நரம்பு ஓட்டங்கள் உள்ளன. அவை பிங்கலை, இடை என்பவை ஆகும். முதுகுத் தண்டின் வழியாக உள்ளே ஒரு துளை பொருந்திய நாளம் செல்கிறது. அதுதான் சுழுமுனை. சுழுமுனையின் கீழ் நுனியைக் 'குண்டலிக் கமலம்' என்று யோகிகள் கூறுவர். அது முக்கோண வடிவமாக இருப்பதாகவும், அதில் குண்டலினி சக்தி பாம்பு போன்று சுருண்டு படுத்து உறங்குவதாகவும் யோகிகள் கூறுவர். குண்டலினி விழித்து எழும்பொழுது, அது சுழுமுனை வழியாக மேலே கிளம்ப முயல்கிறது. அது படிப்படியாக மேலெழும் பொழுது மனத்தின் திரைகள் ஒன்றன்பின் ஒன்றாக விலகுகின்றன. அந்த நிலையில் பல தெய்வீகக் காட்சிகளும், அற்புதமான ஆற்றல்களும் அவனை வந்தடைகின்றன. குண்டலினி சக்தி மூளையை அடைந்தவுடன், யோகி முழுக்க முழுக்க உடல், உள்ளம் இவற்றிலிருந்து பிரிந்தவனாகிறான். ஆன்மா, தான் சுதந்திரமாக இருப்பதை உணர்கிறது.

## மீண்டும் தள்ளிப்போகும் 'கோச்சடையான்'




ரசிகர்களின் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்த இருக்கும் திரைப்படமான கோச்சடையான்' வெளியீட்டுத் திகதியை மே 16 ஆம் திகதி என பிற்போட வைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் திரைப்படத்தில் ரஜனி, தீபிகா படுகோன், சரத் குமார், ஷோபனா, ஆதி, ருக் மணி உள்ளிட்ட பலர் நடிப் பில், சௌந்தர்யா ரஜனி காந்த் இயக்க, ஏ.ஆர்.ரஹ் மான் இசையமைத்திருக் கிறார்.

'மீடியா ஒன்' நிறுவனம் தயாரித்திருக்கும் இந்தத் திரைப்படத்தை ஈராஸ் நிறுவனம் வெளியிட இருக்கிறது. இப்படத்துக்கு சென்சார் அதிகாரிகள் 'யு' சான்றிதழ் அளித்திருந்தாலும் படத்தின் முதல் பிரதியை தயார் செய்ய இயக்குநர் சௌந்தர்யா சீனாவுக்குச் சென்றிருக்கிறார்.

அனைத்துப் பணிகளும் முடிவடைந்து முதல் பிரதி முடிந்தவுடன் தான் சென்னை திரும்பத் திட்டமிட்டிருக்கிறாராம்.

இந்தநிலையில் கோச்சடையான் படத்தை வெளியி டும் ஈராஸ் நிறுவனம், தமிழகத்தில் தேர்தல் பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் படத்தை தற்போது வெளியிட்டால் நன்றாக இருக்காது. தேர்தல் முடிந்து யாருக்கு வெற்றி என்ற அறிவிப்பு மே 16 ஆம் திகதி வெளியாக இருக்கிறது. அன்றைய தினமே, படத்தை வெளியிட தீர்மானித்து இருக்கிறார்கள் என்று கூறியுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 7 | | 8 | |
| | | | 9 | 8 | 2 | | 7 | |
| | | | | | | 9 | | 2 |
| 4 | 5 | | 7 | | 8 | | 9 | 3 |
| 1 | 3 | | 5 | | 9 | | 4 | 8 |
| 6 | 8 | | 4 | | 3 | | 1 | 7 |
| 5 | | 8 | | | | | | |
| | 9 | | 2 | 4 | 5 | | | |
| | 6 | | 8 | | | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 8 | 3 | 4 | 2 | 5 | 7 | 6 |
| 5 | 4 | 3 | 9 | 6 | 7 | 2 | 8 | 1 |
| 2 | 7 | 6 | 5 | 8 | 1 | 4 | 9 | 3 |
| 3 | 6 | 1 | 2 | 7 | 9 | 8 | 5 | 4 |
| 4 | 5 | 2 | 6 | 1 | 8 | 7 | 3 | 9 |
| 7 | 8 | 9 | 4 | 5 | 3 | 1 | 6 | 2 |
| 1 | 3 | 5 | 8 | 9 | 4 | 6 | 2 | 7 |
| 8 | 9 | 4 | 7 | 2 | 6 | 3 | 1 | 5 |
| 6 | 2 | 7 | 1 | 3 | 5 | 9 | 4 | 8 |

## மாதந்தோறும் மில்லியன் கணக்கான பயனர்களை கவர்ந்திழுக்கும் WeChat

இலகுவானதும், விரைவானதுமான மொபைல் தொடர் பாடலுக்கு உதவும் WeChat மற்றும் WhatsApp அப்பிளிக்கேஷன்களுக்கிடையே பலத்த போட்டி நிலவுகின்றது.

WhatsApp அப்பிளிக்கேஷனை பேஸ்புக் நிறுவனம் 16 பில்லியன் டொலர்களுக்குக் கொள்வனவு செய்த தன் பின்னர் மாதந்தோறும் 450 மில்லியன் பயனர்கள் பயன்படுத்திவருகின்றனர்.

இதேவேளை WeChat அப்பிளிக்கேஷனும் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில் மாதாந்தப் பாவனை யாளர்களாக 355 மில்லியன் பயனர்களைக் கவர்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**மாதந்தோறும் 450 மில்லியன் பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.**



## விரைவில் வருகிறது அண்ட்ரொய்ட் கடிகாரம்

கூகுள் கூட்டுத்தாபன நிறுவனம் அன்ட்ரோய்ட் Wearable Smart கடிகாரங்களைத் தயாரித்து, விரைவில் சந்தையில் விற்பனைக்கு விடவுள்ளதாக அறிவித்துள்ளது.

கூகுளின் அண்ட்றொய்ட் கடிகாரங்களை Android Wearable Smart Watches என்ற பெயரில் வெளியிட உள்ளது.

சாம்சுங் எலெக்ட்ரானிக்ஸ் கூட்டுத்தாபனம், எல்ஜி எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் இன்டெல் கூட்டுத்தாபனம், அதே போல் பஷன் நிறுவனம் ஃபேஷன் குரூப் உள்ளிட்ட பல நுகர்வோர் மின்னணு மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்து இந்தப் புதிய தொடர் கடிகாரங்கள் உருவாக்கப்படுகின்றன.

இதன்மூலம் மக்கள் தங்கள் கடிகாரங்களில் பேசலாம், விளையாட்டு முடிவுகளைச் சரிபார்த்துக் கொள்ளலாம், இசையைக் கட்டுப்படுத்தல் மற்றும் குறுந் தகவல்கள் (text messages) பதில் அனுப்பலாம் மற்றும் வீட்டின் கார் நிறுத்துமிடங்களைக் கூடத் திறக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## நீர் உட்புகாத தொழில்நுட்பத்துடன் வெளிவரவுள்ள Samsung Galaxy Note 4

பல்வேறு புதுமைகளை உள்ளடக்கி மொபைல் சாதனங்களைத் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தி வரும் சம்சுங் நிறுவனம் தற்போது நீர் உட்புகாத கலக்ஸி நோட்-4 (Galaxy Note 4) ஐ அறிமுகம் செய்ய வுள்ளது.

இந்த வருடம் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் சம்சுங் கலக்ஸி நோட்-4 ஆனது நீர் உட்புகாத தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள கலக்ஸி எஸ்-5 (Galaxy S5) கை பேசியை அடுத்து தயாரிக்கப்படும் சாதனம் ஆகும். இதேவேளை சம்சுங் கலக்ஸி எஸ்-5 ஆனது நீரினுள் 30 நிமிடங்கள் வரை எவ்விதமான பாதிப்பும் இன்றி இருக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதே தொழில்நுட்பமே புதிதாக அறிமுக மாகவுள்ள சம்சுங் கலக்ஸி நோட்-4 இலும் கையாளப்படவுள்ளது.

## தெரிந்து கொள்வோம் 'Extranet'




தனிப்பட்ட முறையில் அமைத்து இயக்கப் படும் வலையமைப்பு அல்லது இணையத் தளத்தை Extranet என்று குறிப்பிடுவர்.

இதனைப் பொதுமக்கள் அணுகி பயன்படுத் தவோ, பார்க்கவோ முடியாது. நிறுவனம் ஒன்றின் எக்ஸ்ட்ராநெட் அமைப்பை அதன் வாடிக்கையாளர்கள், பயனாளர் கள், நிறுவனக் கூட்டாளிகள், நிறுவனத் துக்குப் பொருள்கள் வழங்குபவர்கள், நிறுவனத்தின் தன்னுரிமை பெற்ற வர்கள் மற்றும் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே இதனை அணுகிப் பயன்படுத்த இயலும்.

மேலும் இதற்கெனத் தனியாகப் பயனர் சொல் மற்றும் கடவுச்சொல் தேவைப்படும். இது பெரும்பாலும் இலவசமாகவே அவர் களுக்கு வழங்கப்படும். தள நிர்வாகிகள் முடிவு செய்யும் பட்சத்தில் வழங்கப்பட்ட உரிமைகள் நிறுத்தப்படும்.

VPN(Virutual Private Network) எனப்படும் சேவை, Extranet பயன்பாட் டுக்கு வழிவகுக்கிறது.

பாதுகாப்புப் பணிக்கான மென்பொருள்கள் இவற்றில் பயன்படுத்தப்படுகிறது, இவை ஹக்கர்ஸ் என்று சொல்லப்படும் தன்னு ரிமை பெறாதவர்கள் அனுமதியைத் தடை செய்கிறது. மேலும் இவற்றில் பயன்படுத் தப்படும் தொழில்நுட்பத்தின் மூலம் தகவல்கள் எவ்வித இழப்பும் இல்லாமல் பயனர்களைச் சென்றடைகிறது.

Electronic Data Interchange(EDI) என்ற முறையைப் பயன்படுத்தி அதிக அளவிலான தகவலை அனுப்பவும், பயிற்சி வகுப்புகள் மூலம் ஏனைய நிறுவ னங்களுடன் இணைந்து நிறுவனங் களை வழிநடத்தவும் பயன்படுகிறது.

இருப்பினும் இதன் ஆரம்ப மற்றும் பரா மரிப்புச் செலவு அதிகமாகவே உள்ளது.



## வீடியோ விளையாட்டுக்கள் பார்ப்பதால் குழந்தைகளின் மனதில் வன்முறை வளரும்

காணொலி விளையாட்டுக்களின் மூலம் குழந்தைகள் வன்முறையைக் கற்றுக்கொள்வதாக ஆய்வு ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் லோவா' மாகாண பல்கலைக்கழகத்தின் உளவியல் துறை நிபுணர்கள் உலகளவில் நடை பெறும் வன்முறைக்கான காரணம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, வன்முறைச் சம்பவங்கள் குழந்தைப் பருவத்தில் இருந்தே மன தில் ஊறி விடுவது தெரியவந்தது. அதில் முக்கிய பங்கு வகிப்பது காணொலி விளையாட்டு என்றும் கண்டறியப் பட்டுள்ளது. அவர்கள் மிகவும் வன்முறைச் சம்பவங்கள் நிறைந்த காணொலி 'கேம்ஸ்' களையே விரும்பிப் பார்க்கின்றனர். அதுவே அவர்களின் மனதில் வன்முறையை வளரச் செய்கிறது.

எனவே அது போன்ற காணொலி விளையாட்டுக்களை குழந்தைகள் பார்க்க பெற்றோர் அனுமதிக்கக் கூடாது என்று ஆய்வில் ஈடுபட்ட உளவியல் பேராசிரியர் டக்லிஸ் ஜென் டைல் அறிவுறுத்தியுள்ளார்.

## பிளாக்பெர்ரியின் புதிய இயங்குதளம்

மொபைல் சந்தையில் கலக்கி வரும் பிளாக்பெரியின் புதிய இயங்குதளம் பற்றிய தகவல்கள் கசிந்துள்ளன. புதிய அம்சங்களைக் கொண்ட Blackberry OS 10.3 பற்றிய தகவல்கள் இணையத்தில் கசிந்துள்ளன. அத்துடன் குறித்த இயங்குதளங்கள் பற்றிய படங் களும் வெளிவந்துள்ளன.

படங்கள்/காணொலிகள், தேடல், விசைப்பலகை மற்றும் வடிவமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள் ளதாகத் தெரிகிறது.

எனினும் பிளாக்பெரியிடம் இருந்து எவ்வித அதிகார பூர்வமான தகவலும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகத் தெரிவு கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி இ.சிவகாமி கலந்து கொண்டார்.

இதன்போது சங்கத்தின் தலைவராக அ.கனகரத்தினம், செயலாளராக திருமதி நா.யோகராணி, பொருளாளராக மு.சிவஞான சுந்தரமூர்த்தி, உப தலைவராக பொன். தில்லைநாதன், உப செயலாளராக நீ.குலேந்திரதாசன், நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.பெருமாள் மிக்கல் பிரான்சிஸ், சி.சுந்திரராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-18)

# வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி தெப்பத் திருவிழா வும், மறுநாள் கைலாச வாகனத் திருவிழாவும் இடம் பெறும். 10 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 12 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 13 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி குகப்பிரியா இராஜேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை
**அருளம்பலம் இரத்தினசிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(45143) (2.6.3)

அதிபர், ஆசிரியர் கல்விசாரா ஊழியர்கள்,
நலன்புரிக் கழகம். யா/கனகரத்தினம் ம.ம.வி.

## மரண அறிவித்தல்

**சோமசுந்தரம் சண்முகரத்தினம்** (மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.709/1, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சண்முகரத்தினம் நேற்று (27.03.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னம் தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, நடராசா, சுப்பிரமணியம், விநாயகமூர்த்தி, சோதிநாதன், தில்லம்மா, சங்குவதி மற்றும் கைலாயநாதன், செல்லம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் மயில்வாகனம், காலஞ்சென்ற திருநாமம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதானந்தம் (லண்டன்), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாபரமேஸ்வரி (லண்டன்), தயாளன், (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், அதிசயா (லண்டன்), மகிஷா, அபிநயா, பிரிவிந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

709/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(46140 (45.3.6)

தகவல்:
மனைவி

# சர்வதேச மகளிர் தினம்

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் பிரதேச-செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி, ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ.சிவயோகநாயகி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செ.சுந்தரேசன், ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ஜெ.கணேசரத்தினம் ஆகியோர் கௌரவிக்கப் படவுள்ளனர். மேலும் கவிதை, பேச்சு, பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க)

# துணைத் தூதுவருக்கு பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத் தூதுவராகப் பதவி வகித்து தூதுவராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்லும் வெ.மகாலிங்கத்துக்கு இந்து சமயப் பேரவையால் நடத்தப்படும் பிரிவுபசாரவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பலாலி வீதி, கந்தர் மடத்திலுள்ள பேரவையின் தலைமைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (க)

# முன்பள்ளியில் மெய்வன்மைப் போட்டிகள்

ஊர்காவற்றுறை, மார்ச் 28


அனலைதீவு அருணோதயா முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

செல்வி இ.இராஜினி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர் என்.இராதாகிருஷ்ணன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

# பொதுக் கூட்டம்

வல்லை கணபதி படிப்பகத்தின் 47 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்




சாவகச்சேரி பெரிய மாவடியைச் சேர்ந்த பரமசாமி சுடரானந் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக நியமனம் பெற்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சுகாதாரத் திணைக்களத்தில் மருந்தாளராகக் கடமையாற்றும் இவர் நீலகண்ட அபிவிருத்திச் சபையின் செயலாளரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். (ஒ-400)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**கந்தையா இராசலிங்கம்** (கிளி)



தோற்றம்
06.08.1940


மறைவு
26.02.2014

கடந்த 26.02.2014 சிவபதம் அடைந்த கந்தையா இராசலிங்கம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (28.03.2014) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (46144)(12)(3.6) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **வேலன் தெய்வேந்திரம்** (பட்டு)



மண்ணில்
09.02.1959

விண்ணில்
08.04.2013

திதி: திரயோதசி (28.03.2014)

அன்பான தெய்வமே!
அரவணைத்த என் கைகள்....
ஆறவில்லை.......உங்கள் மீது
அன்பு கொண்ட உள்ளங்கள்
ஓயவில்லை!
ஆறாத சோகத்தால் அழுகின்றோம்...
ஈராறு மாதமாய் சென்றதெங்கே....
எப்போது காண்போமோ....?
உங்கள் முகம் நாமிங்கே....!

குடும்பத்தினர்.
077 662 4408
மடத்துக்கடவை, அல்வாய் மேற்கு.

(46132) (12.6.3)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி **றோசாமலர் (தங்கா) மரியாம்பிள்ளை**



ஆசைமுகம் என்றும்
அகலாது எம்மை விட்டு
வாழ்வின் வழிகாட்டியாய்
நேசமுடன் எம்மை
அணைத்த நேசக்கரம்
என்று எமை அணைக்கும்?

தேசமெங்கும்
தேடிடினும் தேறாது எம்
துயரம் ஆண்டுகள்
இரண்டு
சென்றிடினும்-உங்கள்
ஆசை நினைவுகள்
என்றும் எம் நெஞ்சில்

பிரிவால் துயருறும்
கணவர்-அ.மரியாம்பிள்ளை.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
7 ஆம் வட்டாரம்,
விடத்தல் தீவு, மன்னார்.

ஒளிர்வு
14.07.1950

மறைவு
28.03.2012
(சி/12731)(3.8.4)

## நெஞ்சை விட்டகலாத 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 * 08 * 1976

உதிர்வு 28 * 03 * 2009

அமரர்
**கனகரத்தினம் சுரேஸ்குமார்** (சுரேஸ்)
(பணியாளர் - புதுக்குடியிருப்பு வைத்தியசாலை)

நெஞ்சம் கனக்கின்றது விழி நீர் சொரிகின்றது
பாசம் வைத்து இரண்டாண்டு கழியு முன்னே
கொடிய யுத்தத்தினால் இத்துயர் சுமந்து
ஆண்டுகள் ஐந்து ஆனாலும் நித்தம் உமை
நினைத்தே நிம்மதி இழக்கின்றேன்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தாவளை, இயற்றாலை,
வரணி.

நீங்கா நினைவுகளுடன்
சு.பரிமளம்.
(மனைவி - மதி)



மலர்வு 17 * 05 * 1984

உதிர்வு 13 * 03 * 2009

அமரர்
**கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)**

அழகான சிரித்த முகத்துடன்
அனைவரையும் கவர்ந்தாய்
அன்பான குறும்புப் பேச்சினால்
எதிரியையும் நட்பாக்கினாய்
ஆண்டுகள் ஐந்து ஆன போதும்
அகலுமா உன் பிரிவின் சோகம்.

அப்பா, அம்மா,
அத்தான்மார்,
அண்ணிமார்,
உடன் பிறப்புக்கள்.

(29794)(5-6.3)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**மரியறோஸ் தங்கராசா மரியமலர்**



தோற்றம்
10.10.1950

மறைவு
28.03.2004

ஆண்டுகள் பத்து சென்றாலும் ஆறவில்லைஎம் துயர் அம்மா
அருகிலிருந்து அன்புமழை பொழிந்தாய்
எமக்கு ஆதரவு தந்த நாள்களை எண்ணும்போது
உங்கள் வதனமே எங்கள் மனதினில் தோன்றுதம்மா
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீரோ?
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடற்கரை வீதி.
தாளையடி.


இவரின் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இரண்டு கோயில்களில் உண்டியல்கள் உடைப்பு

மட்டக்களப்பு,மார்ச் 28

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலர் பிரிவில் கோரகல்லிமடு கிராமத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இரண்டு கோயில் உண்டியல்கள் உடைக்கப்பட்டு அவற்றில் இருந்து பணம் திருடப்பட்டுள்ளது.

கோரகல்லிமடு செல்வ விநாயகர் ஆலயம், ஏரிக்கரை காளி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் உண்டியல்களே உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பணம் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



உடைக்கப்பட்ட உண்டியல்

இந்த இரண்டு கோயில்களிலும் கடந்த இரண்டு வருடங்களில் மூன்றாவது முறையாக உண்டியல்கள் உடைக்கப்பட்டுள்ளன என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ச)

# சர்வதேச அழுத்தங்களைத் தடுக்க ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு,மார்ச் 28

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதன் மூலம் சர்வதேச அழுத்தங்களை தடுக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு போன்றவற்றை அரசு உரிய முறையில் நிலைநாட்டினால்,



லக்ஸ்மன் கிரியெல்ல

சர்வதேச அழுத்தங்களிலிருந்து மீள்வதற்கு அரசுக்கு ஆதரவளிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளால் இலங்கை பிளவுபடுத்தப்படும் என்ற அரசின் கருத்தில் உண்மையில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட உள்ள தீர்மானமானது நாட்டுக்கு எதிரானதல்ல. அது அரசுக்கு எதிரானது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமை குறித்தே தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாக பலர் கருதுகின்றனர். தீர்மானத்தின் 80 வீதமான விடயங்கள் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன-என்றார். (ச)

# கல்வியியற் கல்லூரியின் மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வடமாகாண சபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொள்வார்.

விசேட விருந்தினராக லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினமும், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் ஐங்கரன் பேக்கரி உரிமையாளர் எஸ்.பொன்குமார் மற்றும் யாழ்ப்பாணம் சிவா பிரதர்ஸ் உரிமையாளர் பாலசிங்கம் சிவசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (க)

# அபிவிருத்திச் சங்கக் கூட்டங்கள்

வடமராட்சி, மார்ச் 28

இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடமராட்சி வலய பிரதிப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் கலந்துகொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தொடர்பாக விளக்கமளிப்பார். புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

இதேவேளை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் பி.சந்திரபாபு தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-173)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**விற்பனைக்கு**
நல்லின ஆட்டுக்கடாய்கள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு : 077 900 9371 (46148)(7.6.3)

**பெயர்மாற்றம்**
நொச்சிக்குளம் மரையடித்தகுளத்தைச் சேர்ந்த சிவசம்பு நவரட்ணம் ஆகிய நான் 28.03.2014 இன்றிலிருந்து எனது பெயரை சிவசம்பு நவரத்தினம் என்று மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.
(43231)(7.6.3) சிவசம்பு நவரத்தினம்

# பொதுக் கூட்டம்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கவருடாந்தப்பொதுக் கூட்டமும் இயக்குநர் சபைத்தெரிவும்நாளைய தினம் சனிக்கிழமை சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சங்கத்தின்தலைவரும் பிரதேச செயலருமான ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.அருந்தவநாதன் கலந்து கொள்வார். கிளைக் குழுக்களுக்குத் தெரிவானோரில் இருந்து இயக்குநர் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (க-173)

## முதலாம் வருட நிறைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
19.08.1930

மறைவு
08.04.2013

திதி: திரயோதசி
இன்று (28.03.2014)
வெள்ளிக்கிழமை

திருமதி
**கானகம்மாள் சாமி**

மனிதராய் பிறந்திங்கு மாண்புகழ் பல சுமந்து
தேனினும் இனிதான வாழ்வுதனில் திளைத்திட்டு
அன்போடும் பண்போடும் அவனிதனில் வந்துதித்த
நற்குணத் தாயின் ஆத்மா இறைவனின் திருப்பாதம்
சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
இல.37/2, 2 ஆம் விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
(46146)(2.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராமலிங்கம் இலட்சுமணன்



ஆண்டு ஒன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமையணைத்து
அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எம்மை வளர்த்து
பாரினில் உயரவைத்தீர்
ஆயிரமாயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்பைப்போல் வருமா
கண்ணீரில் நாம் தோய எமைப்பிரிந்து
எங்குச்சென்றீர்கள்?
எந்நாளும் உங்கள் நினைவலைகளை
இதயத்தில் சுமந்து நிற்கின்றோம் -அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்.

மலர்வு 03.01.1947
உதிர்வு 07.04.2013

மனைவி,பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.
புகையிரத நிலைய வீதி,சுன்னாகம்.
(46149)(5.6.3)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி யோகேஸ்வரி கதிர்காமநாதன்

(பெரியக்கா, மனேஜர் அம்மா)

கொக்குவில், 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி, முத்தட்டு ஒழுங்கை, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி கதிர்காமநாதன் நேற்று (27.03.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - மனோன்மணி தம்பதியரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கதிர்காமநாதனின் (தெண்டமான் - ஓய்வுபெற்ற ப.நோ.கூ.சங்க முகாமையாளர் - சுன்னாகம்) பாசமிகு மனைவியும், யோகராணி, இரத்தினராணி, குமாரலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜாதா, ஜெகதீஸ்வரன் (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), கவிதா, சிவகரன் (ஏசியன் அலையன்ஸ், பிராந்திய முகாமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லைநாதன், பகீரதி (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிராமி, விகர்ணன், நிகர்னி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2014) வெள்ளிக்கிழமை ந.ப.12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஈஸ்வரி இல்லம்"
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு.
(46147)(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
021 300 6155

### சின்னத்தம்பி சிறிதரன் (சின்னச்குட்டி)



நெல்லியடி, முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிறிதரன் 24.03.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் கனகம்மா (கனடா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை- பாலசரஸ்வதி (சிந்தம்) தம்பதியரின் அன்பு மருமகனும், சியாமளா வின் அன்புக் கணவரும், அபினாஷ், ஆகாஷ், அக்ஷிகா ஆகியோரின் பாச மிகு தந்தையும், இந்திரா (கனடா), வசந்தி (லண்டன்), ரஞ்சினி (கனடா), உமா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராயேஸ்வரன் (கனடா), மனோகரன் (லண்டன்), பாலசுப்பிரமணியம் (கனடா), ராகவன் (லண்டன்), கஜன் (கனடா), மஞ்சுளா (கனடா), பிரமிளா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனித்தா, சஞ்சி, ராஜி, தீபன், கஸ்தூரி, தர்ஷன், அம்சாளினி, கீர்த்திகா, நிவேதா, கௌதம், சுவேத்தா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.03.2014) வியாழக் கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(33424)
(10.6.3)


தகவல் : ச. பிறேம்குமார்.

# 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறாது

## மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 28
2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்தமுறை எனது பதவிக் காலம் நிறைவடைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப்பட்டது. எனினும், இம்முறை உரிய நேரத்தில் தான் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.


மஹிந்த ராஜபக்ஷ

சில அரசியல்வாதிகள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருகின்றனர் என்று அவர் கூறினார்.

மக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க முடியாத தரப்பினர், சர்வதேச சக்திகளின் ஒத்துழைப்புடன் அரசைக் கவிழ்க்க முயற்சிக்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் நடைமுறையைத் தாண்டி குரோத உணர்வுடன் நாட்டுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (ச)

**சில அரசியல் வாதிகள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருகின்றனர்.**

# ஜனநாயக கட்சிக்கு எதிராக தற்போது போலிப் பரப்புரை

## ஜயந்த கெட்டகொட தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 28
ஜனநாயகக் கட்சிக்கு எதிராக போலிப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கெட்டகொட தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியில் ஜனநாயகம் இல்லை. சரத் பொன்சேகாவை தலைமைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கோருவதில் அர்த்தமில்லை என்று அவர் கூறினார்.


ஜயந்த கெட்டகொட

எமது கட்சியைச் சேர்ந்த சிலர் அரசிடம் பணம் பெற்றுக் கொண்டு இவ்வாறு பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாக்காளர்கள் தமக்கு ஆதரவளிக்கமாட்டார்கள் என்று அஞ்சும் ஒரு சில வேட்பாளர்கள் இவ்வாறு அரசுடன் இணைந்து ஜனநாயகக் கட்சிக்கு எதிராகப் போலிப் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் இந்தச் சதித் திட்டங்களுக்குநாளைமறுதினம் சனிக்கிழமை தமது வாக்குகள் மூலம் உரிய பதிலளிப்பார்கள் -என்றார். (ச)

# தேர்தலன்று மதுபான கடைகள் பூட்டு

கொழும்பு,மார்ச் 28
மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தலை முன்னிட்டு அந்தப் பிரதேசங்களிலுள்ள மதுபானக் கடைகள் அனைத்தும் நாளை சனிக்கிழமை மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறுவதற்குத் தடைகள் ஏற்படாதிருப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று இந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை குறிப்பிட்ட பிரதேசங்களில் மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)


ஆகாய மார்க்க சுற்றுலா சேவை நேற்று முன்தினம் கண்டியில் ஆரம்பமானபோது பிரான்ஸ் நாட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# ஆகாய மார்க்க சுற்றுலா சேவை

## கண்டியில் நேற்றுமுன்தினம் ஆரம்பம்

கொழும்பு,மார்ச் 28
அதிவேக வீதி அபிவிருத்திகள் இல்லாத காரணத்தால் உள்ளூர் சுற்றுலா மையங்களுக்குச் செல்வதற்கு ஆகாய மார்க்க சுற்றுலா முறையொன்று வெளிநாட்டுச் சுற்றுலாத் துறையினருக்காக நேற்றுமுன்.தினம் புதன்கிழமை கண்டியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஆகாய மார்க்க சுற்றுலா கண்டி, போகம்பரை மைதானத்திலிருந்து ஆரம்பமானது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் மூலம் சுற்றுலாப் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். நேற்று நடைபெற்ற நிகழ்வில் 130 பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாத்துறையினர் பங்கு கொண்டனர். (ச)

# 14 மாணவர்களின் கற்றலுக்குத் தடை

கொழும்பு,மார்ச் 28
நீதிமன்றத் தடையை மீறி கடந்த 19 ஆம் திகதி களனி பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போது 14 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பிணைக்கான உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியதையடுத்து அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடைய கற்றல் நடவடிக்கைகளுக்கும் நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டது. (ச)

# அரசுக்குப் பலத்தை வழங்க வேண்டாம்

## ஐ.தே.க. வேண்டுகோள்


அகில விராஜ் காரியவசம்

கொழும்பு,மார்ச் 28
எந்தவொரு அரசுக்கும் அளவுக்கு அதிகமான பலத்தை வழங்க வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அளவுக்கதிகமான பலத்தை அரசுக்கு வழங்கியமையின் காரணமாகவே இலங்கை மக்கள் தற்போது பெரும் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் பல வழங்கப்படாதுள்ளன.

தற்போது பணமுள்ள எந்தவொரு நபராலும் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆசிரியர்கள், விரிவுரையாளர்களது கல்வி மட்டம் குறித்து எவரும் எந்தவொரு அக்கறையும் கொள்வதில்லை. இதன் காரணமாக இலவச கல்வி அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளது.

இலவசக் கல்வியை ஏற்படுத்திக் கொடுத்தஎமது கட்சிக்கு நாட்டின் கல்விச் செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்புவதற்கு உரிமை உண்டு-என்றார். (ச)

# பயணச்சீட்டு மோசடிகளால் 10 வீதம் வருமானம் இழப்பு

கொழும்பு,மார்ச் 28
ரயில் பயணச்சீட்டு மோசடிகளால் வருடாந்தம் 10 வீத வருமான இழப்பு ஏற்படுகிறது என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய மோசடிகளில் ஈடுபட்ட 13,855 பயணிகளிடம் இருந்து அபராதமாக ஒரு கோடி 79 ஆயிரத்து 605 ரூபா அபராதமாக அறிவிடப்பட்டுள்ளது என்று திணைக்களத்தின் பொது முகாமையாளர் சிசிர குமார கூறினார்.

அவர்களைத் தவிர நாளாந்தம் பெரும் எண்ணிக்கையிலான பயணிகள் பயணச்சீட்டு இன்றியும் பயணிக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

இவை தவிர, பயணச்சீட்டுக்கு பொருத்தமற்ற பெட்டிகளில் பயணித்தல், காலாவதியான பயண அட்டைகளைப் பயன்படுத்தல் போன்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் ரயில்வே திணைக்களத்தால் அரசுக்கு வருடாந்தம் 10 வீதம் வரை வருமானம் இழக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# ஜனாதிபதிக்கு நல்லாசி வேண்டி பள்ளிவாசலில் விசேட வழிபாடு

கொழும்பு.மார்ச் 28
தாய்நாட்டின் அனைத்து சவால்களையும் வெற்றிகொள்வதற்கு ஜனாதிபதிக்கு நல்லாசி வேண்டி, மாத்தறை கொடப்பிட்டிய 'ஜும்ஆ' பள்ளிவாசலில் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற சமய நிகழ்வில், இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தாய்நாட்டுக்கு எதிராக வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகளை தோற்கடிக்கச் செய்ய ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஆசி வேண்டியே இந்த விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

**ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஆசி வேண்டியே விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.**

# 10 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்தது கண்டி மேல் நீதிமன்றம்

கொலைச் சம்பவமொன்று தொடர்பில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட 10 பேருக்கு கண்டி மேல் நீதி மன்றம் நேற்று வியாழக்கிழமை தூக்குத் தண்டனை விதித்துள்ளது.

2004 அம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி இறத்தொட்டை பகுதியில் நபரொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணை நடைபெற்றது.

பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதை அடுத்து, கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க அவர்களில் பத்துப் பேருக்குத் தூக்குத் தண்டனை தீர்ப்பை வழங்கினார்.

இந்த வழக்கில் 14 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் பிரதிவாதிகளில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் மூவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்து, விடுதலை செய்ய கண்டிமேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச)

**வழக்கில் 14 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.**

அபான்ஸ் பொருட்களுக்கான
மலிவு விற்பனை
50% வரை விலைக்கழிவு
தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள், வளிச்சீராக்கிகள், சலவை இயந்திரங்கள், ஹோம் தியட்டர், மின்பிறப்பாக்கி, டிவிடி ப்ளேயர்ஸ், மைக்ரோவேவ் அவன்கள் மற்றும் கணினி மேலும் பல



- ஓடியோ சிஸ்டம் - 4,500/- ரூபாவிலிருந்து
- குளிரூட்டிகள் - 20,000/- ரூபாவிலிருந்து
- டிவிடி ப்ளேயர்ஸ் - 2,000/- ரூபாவிலிருந்து
- தொலைக்காட்சிகள் - 7,500/- ரூபாவிலிருந்து
- கணினிகள் - 15,000/- ரூபாவிலிருந்து

இன்றும் நாளையும்
காலை 8.30 மணி முதல் மாலை 7.00 மணி வரை
இல.121/1 பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்
(பிரதான பேருந்து நிலையத்திற்கு எதிரில்)
அபான்ஸ் செகண்ட் காட்சியறைகள் மஹரகமை, காங்கேசந்துறை மற்றும் பிட்டகோட்டை
Abans

### கலந்துரையாடல்

நாளை மறுதினம் 30 ஆம்திகதிவேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள டீ.சீ. எம்.தனியார் கல்வி நிறுவனத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுமென சர்வதேச மார்க்ஸியக் குழுவின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. மாலை 4 மணியளவில்ஏ.சி.ஜோர்ச்தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுமெனவும்மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### விபத்தில் சிக்கிய மாணவர்கள் காயம்

வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஓட்டோ - பஸ் விபத்தில் 5 பாடசாலை மாணவர்கள் காயமடைந்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோவும், பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவர்களே சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த விபத்துத் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-400)


பணம் வசூலிப்பவர்கள் தேவை

சினேரு என்ரபிறைசஸ் நிறுவனத்தில் பணிபுரிவதற்குப் பணியாளர்கள் தேவை. ஆண்கள் மாத்திரம். கடன் அடிப்படையில் கொடுத்த பொருள்களின் பணத்தை அறவிடுவதற்கு மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளுக்கு. சம்பள விவரத்திற்கும், மேலதிக விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 721 8055, 072 228 9375

சினேரு என்ரபிறைசஸ்,
கனகராயன்குளம், வவுனியா.
(43422)(8.2)

## 100 ஆவது பிறந்தநாள் நினைவு



அமரர்
செல்லையா இராசதுரை
(ஆசிரியர்)
தோற்றம்
28.03.1914
மறைவு
18.12.1987

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே
உங்கள் நினைவுகளில் நாம் வாழ்கின்றோம்.

தாவடி வடக்கு,
தாவடி

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி சிவபூஷணம் (புனிதம்) சுப்பையா**
6ஆம் வாய்க்கால், ஆலடிச்சந்தி, கிளிநொச்சி.



| அன்னையாய்: | தெய்வமாய்: |
|---|---|
| 25 | 08 |
| 12 | 04 |
| 1944 | 2013 |

திதி: 28.03.2014

ஆண்டுகள் ஆயிரம் போனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மாறாது
பாசமுடன் வளர்த்தீர்கள் அம்மா எம்மை,
பார் உள்ளவரை மறவோம் உங்களை!

இன்று (28.03.2014) வெள்ளிக்கிழமை அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

6ஆம் வாய்க்கால்,
ஆலடிச் சந்தி, கிளிநொச்சி.


குடும்பத்தினர்.

# 7 பேரின் விடுதலை கோரி மே 17 இயக்கம் போராட்டம்

சென்னை, மார்ச்28

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுவிக்கக் கோரி மே 17 இயக்கத் தினர் போராட்டம் நடத்தினர்.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளிகளாக உள்ள முருகன், சாந்தன், பேறறிவாளன், நளினி ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது. மேலும், அவர்களை விடுதலை செய்வது குறித்து மாநில அரசு முடிவெடுக்கலாம் என்றும் கூறியது.




பழ. நெடுமாறன் உள்ளிட்ட 200 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அதை அடுத்து, முருகன், சாந்தன், பேறறிவாளன், நளினி உட்பட 7 பேரை விடுதலை செய்வதாக தமிழக அரசு அறிவித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

அதை அடுத்து அவர்களை விடுதலை செய்ய உச்ச நீதி மன்றம் இடைக்காலத்தடை விதித்தது.

இந்த நிலையில், முருகன், சாந்தன், பேறறிவாளன், நளினி உட்பட 7 பேரையும் விடுதலைசெய்யக்கோரி மே17 இயக்கத்தினர் சென்னை மெரினா கடற்கரையில் போராட்டம் நடத்தினர். இதில், உலகத்தமிழர்பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் உள்ளிட்ட 200 இற்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர்.

அப்போது, தமிழர்களுக்கு விரோதமாக மத்திய அரசு செயற்படுவதாகவும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்டோரின் விடுதலைக்கு மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்து வருவதற்கு தங்கள் கண்டனத்தையும் தெரிவித்தனர். (வ)

# இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர் 24 பேர் கைது

சென்னை, மார்ச்.28

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் 24 மீனவர்களைக் கைது செய்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து அந்த ஊடகங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று 600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் நேற்று முன்தினம் இரவு வழமையாக மீன்பிடிக்கும் பகுதிகளில் மீன்பிடித்து கொண்டிருந்துள்ளனர். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற் படையினர் மீனவர்களை சுற்றி வளைத்து துப்பாக்கிச் சூடு நடத்தித் தாக்கியுள்ளனர்.

இதில் பாம்பனைச் சேர்ந்த மீனவர் அந்தோனி என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

அதை அடுத்து நேற்று அதிகாலை கரை திரும்பிய மீனவர் அந்தோனிக்கு இராமேஸ்வரம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மேலும், இலங்கைக் கடற்படையினர் மற்ற மீனவர்களையும் மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்ததால் அவர்களும் நேற்று முன்தினம் அதிகாலை கரைக்குத் திரும்பிவிட்டனர்.

இதில் இராமேஸ்வரம் மீனவர்களின் 4 விசைப் படகுகளையும், அதில் சென்ற 24 மீன வர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைப் பிடித்து சென்றுள்ளனர்.

ஏற்கனவே மீன்பிடிக்கச் சென்ற நாகபட்டினம், தஞ்சாவூர் மற்றும் இராமேஸ்வரம் மீனவர்கள் 74 பேர் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால், நடைபெற இருந்த இந்திய - இலங்கை மீனவர்களிடையேயான 2 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை.

இந்தநிலையில் மீண்டும் தமிழக மீனவர்கள் சிறைப் பிடித்து செல்லப்பட்டிருப்பதால், இருநாட்டு மீனவர்கள் இடையேயான பிரச்சினைக்கு இப்போதைக்கு தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளதாக மீனவ பிரதிநிதிகள் கூறுகின்றனர். (வ)

# சாவகச்சேரி மருத்துவமனையில் மேலும் ஒரு சிகிச்சை விடுதி

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் மேலும் ஒரு சிகிச்சைப் பிரிவுக்கான விடுதி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பெண் நோயியல் மற்றும் வன் முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உடல், உள வளங்களை ஆற்றுப்படுத்தல் ஆகியவற்றுக்குச் சிகிச்சை வழங்குவதற்காகத் தனியான விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இவ்வாறான நோயாளர்கள் பெண் நோயாளர் விடுதியில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்ததாகவும் ஏனைய நோயாளர்களுடன் அவர்களுக்குச் சிகிச்சை வழங்கும் போது மன உளைச்சலுக்கு உள்ளாவதாகச் சி[illegible] பெண்களால் ஆதங்கம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அதைஅடுத்து முன்னர் பெண்கள் விடுதி இயங்கிய விடுதியில் - இவ்வாறான நோயாளர்களுக் குச் சிகிச்சை வழங்கப் பட்டு வருகிறது. (ஒ-9)

## மரண அறிவித்தல்

திருமதி சாரதாவேி இராஜேந்திரன் (சாரதா)



யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், இங்கிலாந்தில் கம்பர்லியை வதிவிடமாகவும் கொண்ட சாரதாதேவி இராஜேந்திரன் நேற்று (27-03-2014) வியாழக் கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சாம்பசிவம் - செல்வநாயகி தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற சோமசுந்தரம்,- ரோகிணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற சிவகாமிப்பிள்ளை கனகசுந்தரம்(இளையாச்சி) அவர்களின் அன்புப் பேர்த்தியும்,இராஜேந்திரனின் அன்பு மனைவியும்,முகுந்தன், ரமேஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும், சரிதா, ஷாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷ்மிதேவி, பத்மாதேவி, சுகந்தி, சிவகுமார், ஜெயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தில்லைநாயகி - அருளய்யா திருமதி சிவகாமசுந்தரி பஞ்சலிங்கம் தவமணிதேவி வரதராஜா ஆகியோரின் பெறாமகளும் நடேசன் (சட்டத்தரணி), முருகமூரத்தி, Dr.மயிலேறும் பெருமாள் ஆகியோரின் மருமகளும் சிறிகணேஷ், இராமலிங்கம், யோகச்சந்திரா, கீதா, ஜனனி, செல்வராணி நித்தியானந்தன், காலஞ்சென்ற பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ஆரூரன், கபிலன், நிதிலா, தூயா, கவின் ஆகியோரின் அன்பு அப்பாச்சியும் ஆவார். இவர் ஆதரிக்கும் கரங்கள் நிறுவனம் ஸ்ரீலங்காவின் பணிப்பாளர்களில் ஒருவருமாவார்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆதரக்கும் கரங்கள் நிறுவன சமூகத்தினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சோமா இராஜேந்திரன் - +447448051699 +441276503148
முகுந்தன் - +44 7404023319 ரமேஷ் - +44 7920400727
மின்னஞ்சல் - rasa.saratha@gmail.com

CARING HANDS CENTRE ORGANISATION - SRILANKA
ஆதரிக்கும் கரங்கள் நிறுவனம் ஸ்ரீலங்கா

# ஈழத் தமிழருக்கு உரிமைபெற மோடி பிரதமராக வேண்டும்

**இல.கணேசன் கூறுகிறார்**

சென்னை, மார்ச் 28

இலங்கையில் தமிழர்கள் சம உரிமை பெற நரேந்திர மோடி பிரதமராக வேண்டும் என்று தென் சென்னை மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் இல. கணேசன் தெரிவித்தார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள பா.ஜ.க. தென் சென்னை தொகுதி அலுவலகத்தில் 'பாலசந்திரன் மாணவர் அமைப்பு' நிர்வாகிகள் இல. கணேசனை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்து இலங்கைத் தமிழர்களின் முன்னேற்றத்துக்கு பா.ஜ.க. ஆதரவுதர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இல.கணேசன் கூறியதாவது:-

"இலங்கைத் தமிழர் விவ காரத்தில் பா.ஜ.கவும், காங் கிரஸும் ஒரே மாதிரி இருந்த தில்லை.

பா.ஜ.க. இலங்கைத் தமிழர் களுக்கு ஆதரவாகத் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசு இந்தியாவிடம் ஆயுதங்கள் கேட்ட போது; தமிழர்களுக்கு எதிராக அது பயன்படுத்தப்படும் என்பதால் வழங்கப்படாமல் தவிர்க்கப்பட்டது. ஆனால், இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவித்து ராஜபக்ஷ செய்த பாவத்தில் பாதிப்பங்கு காங்கிரஸுக்கு உள்ளது.

காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருந்த தமிழக கட்சிகளுக்கும் உண்டு. இலங்கையில் தமிழர்கள் சம உரிமை பெறுவது, த்மிழர்கள் வசிக்கும் பகுதியில் குவிக்கப்படும் இராணுவத்தை வெளியேற்றுவது, தமிழர்கள் தங்கள் சொந்த இடத்தில் குடியேறுவது, இலங்கையில் உள்ள அனைத்து மாநிலங்களும் அதிகாரம் பெறுவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை பா.ஜ.க. வலியுறுத்தி வருகிறது. இலங்கையில் தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்க நரேந்திர மோடி பிதமராக வேண்டும்"- என்றார். (வ)

# விவசாயக் குளங்களை புனரமைக்க கோரிக்கை

வரணி, இடைக்குறிச்சி, மாவில் வயல்வெளிப் பிரதேசத்தில் உள்ள பெரிய விவசாயக் குளம் மற்றும் அதனோடு இணைந்ததாக உள்ள சின்னக்குளம் என் பவற்றைப் புனரமைத்துத் தருமாறு குறித்த வயல் பிரதேசத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயி கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வருடந்தோறும் குறித்த பிரதேசத்தில் சிறு தானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவ சாயிகள் இம்முறை ஏற்பட் டுள்ளகடும்வறட்சிநிலைகாரணமாக பெரியளவில் நீர்ப்பற்றாக் குறையை எதிர் நோக்கியுள்ளனர். எனினும் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் கமத்தொழில் திணைக்களம், வட மாகாண விவசாய அமைச்சு போன்றவை குறிப்பிட்ட குளங்கள் இரண்டையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-122)

## பெயர்மாற்றம்

43 A ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த இரத்தினம் விஜயம் ஆகிய நான் (01.01.2014) முதல் இரத்தினம் பவானி என மாற்றம் செய்துள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் தாதிய உத்தி யோகஸ்தராக கடமைபுரியும் **கந்தையா சிவகுமார்** (விடுதி - 27) அவர்களின் அன்புத் தந்தை

**முருகேசு கந்தையா**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது சங்கம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! யா.அ.போது வைத்தியசாலை
தா.உ நலன்புரி சங்கம்.
யாழ். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

## தாதிய உத்தியோகஸ்தர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு -2014

காலம் - 29.03.2014 (மாலை 4.30 மணி)
இடம் - தாதியர் பயிற்சி பாடசாலை யாழ்ப்பாணம்

யா/போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகஸ்தர்கள் கூட்டுறவு நலன்புரி சங்கம் நடத்தும் மேற்படி நிகழ்வில் இவ் வைத்தியசாலையில் பணிபுரிந்து ஒய்வு பெற்றுச் சென்ற தாதிய உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர் / செயலாளர்
தா.உ.கூ.நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்

**M.A.N. Antony** (B.Sc Dip. Edu)

**(புனித பத்திரிசியார் கல்லூரியின் ஒய்வுபெற்ற ஆசிரியர்)**



24, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அலோசியஸ் நல்லையா அன்ரனி நேற்று முன்தினம் (26.03.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், மேரி ஜசிந்தா மனோகரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் நித்தியானந்தம்-பெனடிக்ரா தம்பதியரின் மருமகனும், லூட்ஸ் (கனடா), சந்திரக்குமார் (பிரான்ஸ்), இராஜேந்திரகுமார் (பெரன்டினா அபிவிருத்தி சேவைகள்), மரின்குமார் (சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சனின் அன்பு மாமனும், மேர்வின், றொசான், திவ்வியா ஆகியோரின் அன்புப் பேரனும், திரேசா, காலஞ்சென்ற அக்னஸ் மற்றும் ஞானப்பிரகாசம், அருள்பிரகாசம், லில்லி, அரியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வநாயகம், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, தேவநாயகம், விக்கினராஜா மற்றும் அஞ்சலோ, காலஞ்சென்றவர்களான தியாகராஜா, சிசில் செல்வராஜா மற்றும் சாந்தி துரைரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதித் திருப்பலி நாளை (29.03.2014) சனிக் கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித பத்திரிசியார் கல்லூரியின் சிற்றாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மரின்குமார் (மகன்)
077 844 9859

24, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(41164) (10.6.3)

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மத்திய சன்சமூக நிலையத்தினதும், விளையாட்டுக் கழகத்தினதும் நிரந்தர உறுப்பினரும் ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் (Asian Alliance Insurance) நிறுவனத்தின் பிரதேச முகாமையாளருமாகிய **திரு. க. சிவகரன்** அவர்களின் அன்புத் தாய்

திருமதி **யோகேஸ்வரி கதிர்காமநாதன்**

நேற்று (27.03.2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன், அவரின் மறைவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவ னைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்,
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம்,
(K.C.C.C & K.C.C.C.S.C)

(சி/2972) (10)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மூன்று

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வெஸ்திரி அலன்ரின், முருகேசு சந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அப்போது, யாழ்.மாவட்டத்திற்கு 8 ஆயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த 3 வருடங்களில் ஆயிரத்து 898 வீடுகள் மாத்திரமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதில் 186 வீடுகளில் மக்கள் வந்து குடியமராலேயே உள்ளன- என்று தெரிவிக்கப்பட்டதுடன், மக்கள் குடியமராத இந்திய வீடுகளை மக்களுக்கு கால அவகாசத்தை வழங்கி, அவற்றை அவர்களிடமிருந்து மீளப்பெற்று, வீடில்லாதவர்களுக்கு கையளிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. எனினும் அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கிராமசேவையாளர்கள், அவ்வாறு கொடுப்பதனால் காணி உரிமை தொடர்பில் ச்சினை எழும் என்பதைச் சுட்டிக் காட்டினர். அதற்குப் பதிலளித்த அமைச்சர், நீதிமன்றத்தினூடாக சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எவ்வாறு அதனைச் செய்யலாம் என்று ஆராயலாம் என்று தெரிவித்தார்.

வீடுகள் அமைக்கப்பட்டும் அதில் மக்கள் வந்து குடியேறாமை தொடர்பில் ஆராயப்பட்டபோது வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவானோர் அவ்வாறு குடியேறாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கிராமசேவையாளர்கள், "அந்தப் பகுதிக்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமையினால், மக்கள் வீடுகளைப் பெற்று அதனைக் கட்டி விட்டு வெளியேறி கின்றனர்" என்று தெரிவித்தனர். பயனாளிகள் தெரிவில் உரிய ஒழுங்குமுறை பின்பற்றப்படாததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாக வேறு சில கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர்.

அதையடுத்து அடுத்த கட்ட பயனாளிகள் தெரிவின்போது கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. (ற-5)

### சர்வதேச

அந்தத் தீர்மானத்துக்கு ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியும், லிபரல் கட்சியும் முழு ஆதரவு வழங்கியதை அடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தில், "இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான மிக மோசமான மீறல்கள், துஷ்பிரயோகங்கள் குறித்து சர்வதேச சுதந்திர விசாரணை அவசியமானது. இந்த விடயங்கள் தொடர்பிலான தேசியப் பொறிமுறை தோல்வி கண்டுள்ளமையால் சர்வதேச விசாரணைக்கான தேவைப்பாடு உள்ளது" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் ஐ.நா மனித உரிமைகள் சபையில், இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் உரையாற்றிய கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஒபிராய், நவநீதம்பிள்ளையின் அறிக்கையை வரவேற்றதுடன், இலங்கை மீது உடனடியாக சர்வதேச விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். (ற-5)

### இலங்கை

முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இந்தியக் கடலோரக் காவற்படையால் கைது செய்யப்பட்டு, விசாரணைகளின் பின்னர் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். தற்போது அவர்கள் சென்னை நீதிமன்ற உத்தர வின்படி அவர்களது படகுகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் இந்தியக் கடலோரக் காவற்படையினரால் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்றையதினம் திருகோணமலை மற்றும் மாத்தறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் தெரிவித்தது.

அவர்களில் 2 படகுகளுடன் கூடிய 9 பேரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். மற்றைய படகுடன் கூடிய 5 பேரும் மாத்தறையைச் சேர்ந்தவர்களாவர். (ற-4)

### வாள்களுடன்

கத்தியை வைத்து மிரட்டினர். மயக்கமருந்துதோய்ந்ததுணியை அவரின் முகத்தில் வைத்து அழுத்தவும் முற்பட்டனர்.

ஆனால் அந்த வயோதிபர் அவர்களுடன் போராடியுள்ளார். கழுத்தில் வைக்கப்பட்ட கத்தியை அகற்ற முற்பட்டதுடன், மயக்க மருந்து தோய்த்த துணியை முகத்தில் வைக்கவிடாது போராடிய வண்ணம் உரத்துக் குரலெழுப்பியுள்ளார். கொள்ளையர்கள் அவரின் வாயைப் பொத்திய போதும் அவர் சளைக்கவில்லை. அதனால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் வயோதிபரின் வீட்டுக்கு ஓடி வரத் தொடங்கினர்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத கொள்ளையர்கள் வயோதிபரின் கையில் வாளால் வெட்டித் தமது ஆத்திரத்தைத் தீர்த்து விட்டுத் தப்பியோடியுள்ளனர். 90 வயதான கே.நடேசன் என்ற அந்த வயோதிபர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் கையில் வாளால் வெட்டப்பட்டுள்ளதுடன், முகத்திலும் பல அடிகாயங்கள் காணப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்துச் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

அதேவேளை, உடுவில் அம்பலவாணர் வீதியில் கடந்த 3 மாதங்களில் மட்டும், இந்தச் சம்பவத்துடன் சேர்த்து 5 கொள்ளை அல்லது திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் இதுவரை எவரும் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை. (ற-4-21)

### பிரேரணையை

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"போரின் முன்னரும் பின்னரும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு மனித உரிமைகள் ஆணையாளரைக் கோரும் தீர்மான வரைவு ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டதை நாம் வரவேற்கின்றோம்.

நல்லிணக்கம் - நீதி உண்மை என்பவற்றுக்காக போராடும் இலங்கை மக்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றியாகும். ஜனநாயக விரோத - இராணுவ மயப்படுத்தப்பட்ட ஏற்றுக் கொள்ள முடியாத நிலைத்த தன்மையற்ற நிலையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு விடுக்கப் பட்டுள்ள தீர்க்கமான செய்தியே இந்தப் பிரேரணை.

இலங்கையில் வேகமாக வளர்ந்து வந்த குற்றவாளிகளைத் தண்டிக்காத போக்கை முடிவுக்கு கொண்டு வந்திருக் கின்றது இந்தப் பிரேரணை. தமிழ் மக்களின் அரசியல் தலை மையாக இந்தச் சந்தர்ப்பத்தை நாம் மனிதாபிமானத்துடனும் - சுய விமர்சனத்துடனும் ஏற்றுக்கொள்கின்றோம். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடன் இலங்கை முழுமையாக ஒத்துழைத்துப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையில் சகல மக்களும் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும், உண்மையான நல்லிணக்கத்தை நோக்கி நகர்வதற்கு, கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு இலங்கை அரசு முன்வரவேண்டும்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### இலங்கை மீது

அதில் அவ்வாறு கைவிட வேண்டும் என்பதற்கு ஆதரவாக 17 நாடுகள் வாக்களித்தன. இல்லை அந்தப் பந்தி தொடர்ந்து இருக்க வேண்டும் என்று 25 நாடுகளும் வாக்களித்தன. 5 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை. இதனால் குறித்த தீர்மானம் தோல்வியடைந்தது.

இதன் பின்னர் அமெரிக்கத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று 23 நாடுகளும், இல்லை நடத்தப்படக்கூடாதென்று 14 நாடுகளும் வாக்களித்தன. 10 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கெடுக்காமல் நடுவுநிலைமை வகித்தன. இறுதியில் அமெரிக்கத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் 23 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாகவும் 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. 12 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை. (ற-5)

### இலங்கையின்

சபையில் இந்தியா, அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், வாக்கெடுப்பில் பங்கெடுக்காமல் இந்தியா ஒதுங்கிக் கொண்டது. இது தொடர்பில் பழ.நெடுமாறனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"இந்திய மத்திய காங்கிரஸ் அரசு நேற்று (நேற்றுமுன்தினம்) வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இலங்கைப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் ஏனைய சர்வதேச நாடுகளுடன் இணைந்து விசாரணை நடத்த வழிசெய்யும் என்று தெரிவித்திருந்தது.

அந்த அறிக்கை வெளிவந்து 24 மணிநேரத்துக்குள்ளேயே, காங்கிரஸ் தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியிருக்கின்றது. அரைகுறையான அமெரிக்கத் தீர்மானத்துக்கு வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றது. இந்திய அரசை, இலங்கை அரசு மிரட்டுகின்றது. இந்தியாவின் தென்மண்டல இராணுவத் தளபதி, இலங்கை இராணுவத் தளபதியை சில மாதங்களுக்கு முன்னர் சந்தித்த ஒளிப்படங்களை சில தினங்களுக்கு முன்னர் இலங்கை அரசு வெளியிட்டிருந்தது. இது இந்தியாவுக்க விடுக்கப்பட்ட முதலாவது மிரட்டல்.

எமக்கு எதிராக வாக்களிக்கக் கூடாது. அவ்வாறு வாக்களித்தால் இவ்வாறே சகல விடயங்களையும் வெளிப்படுத்தி விடுவோம் என்று சமிஞ்சை எச்சரிக்கையாக அது அமைந்தது. இந்திய மத்திய அரசு இறுதிப் போரின் போது இலங்கை அரசுக்கு வழங்கிய இராணுவ உதவிகளை இலங்கை வெளியிட்டு விடுமோ என்ற அச்சத்திலேயே, வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாமல் இந்தியா நழுவியது" - என்று தெரிவித்தார். (ற-5)

### இலங்கைக்கு

ஜெனீவா மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மான வரைவு நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அப்போது பேசிய பாகிஸ்தான் பிரதிநிதி, அமெரிக்கப் பிரேரணையில் காணப்படும் 10 ஆவது பந்தியை நீக்க வேண்டும் எனக் கோரினார். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு விசாரணை செய்யக் கோரும் குறித்த பந்தியை நீக்குமாறு அவர் வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து குறித்த பந்தியை நீக்குவது தொடர்பில் வாக்கெடுப்பு நடைபெற்றது. பாகிஸ்தானினால் முன்வைக்கப்பட்ட மேற்படி கோரிக்கை மீதான வாக்கெடுப்பு தோல்வியைத் தழுவியது.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் பிரதிநிதி, ஐ.நா மனித உரிமைகள் சபையில் போதிய நிதி வளம் இல்லை. இதனால் இந்தப் பிரேரணையை கைவிடுமாறு கோரினார். இந்தப் பிரேரணையைக் கைவிடுவது தொடர்பில் பாகிஸ்தானால் இலங்கைக்கு ஆதரவாக முன்வைக்கப்பட்ட இரண்டாவது கோரிக்கை மீதான வாக்கெடுப்பும் தோல்வியைத் தழுவியது. (ற-5)

### காலை

இதன்போது பேசிய இந்தியப் பிரதிநிதி, "இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது நாட்டின் நிலைப்பாடு. இந்த அடிப்படையிலேயே நாம் முதல் 2 பிரேரணைகளுக்கு ஆதரவளித்தோம். இடைக்காலத்தில் அங்கே நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனை மனித உரிமைகள் ஆணையாளரும் ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே நாம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளப் போவதில்லை" என்று தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்கத் தீர்மானத்தின் 10 ஆவது பந்தியை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதிநிதி வலியுறுத்திய கோரிக்கையின் வாக்கெடுப்பில், இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தானின் வேண்டுகோளுக்கு தலைசாய்த்து இந்தியா வாக்களித்தது.

ஏமாற்றம்

இந்தியாவின் இந்தத் திடீர் நிலைப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்தியத் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், இந்தியா ஏமாற்றி விட்டது என்று குறிப்பிட்டார். (ற-5)

### தெளிவான

யாளர் அலுவலகம், இலங்கையின் சிவில் போரின் போது இடம்பெற்ற பெரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை கேட்டுக் கொண்டுள்ளது.

சிவில் சமூகப் பிரதிநிதிகளை தடுத்து வைத்தல், அவர்களை அச்சுறுத்துதல் உள்ளிட்ட அண்மைக்காலத்தில் இலங்கைப் பிரஜைகளுக்கு எதிராக நடத்தப்படும் செயற்பாடுகள் தொடர்பாக நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். மனித உரிமை பாதுகாவலர்கள் மீது நடத்தப்படும் எதிரீட்டு நடவடிக்கைகளே, இலங்கை மீது சர்வதேச சமூகத்தின் கடுமையான கரிசனையை வெளிப்படுத்த காரணமாயிற்று.

இலங்கையர்கள் நெகிழ்திறன் கொண்டவர்கள். போர் நடந்த காலத்தில் தங்களது திறனையும் மன உறுதியையும் அவர்கள் வலுவாக வெளிப்படுத்தியிருந்தனர். இப்பொழுது ஜனநாயகம், செழிப்பு மற்றும் சமாதானமான எதிர்காலத்தை கோரும் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இலங்கையர்கள் எல்லோரினதும் பக்கமுமே அமெரிக்கா நிற்கின்றது. இந்த நாட்டின் வெற்றியின் பங்காளிகளாக அனைத்து இலங்கையர்களும் இருக்க வேண்டும் என்ற கனவு உண்மையாக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்" - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற-5)

### மீண்டும்

யாளர் பிரேரித்துள்ள விடயத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கும், மசிடோனியா துணைத்தூதுவர் டுஸ்கோ உசுனோவ்ஸ்கி பிரேரணையை ஆதரித்து உரையாற்றினார். இணை அனுசரணை வழங்கும் மற்றொரு நாடான மொரிசியஸ் தூதுவர் இஸ்ராயானந்தா டல்லடு உரையாற்றினார்.

இதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் இத்தாலி பிரதிநிதி பிரேரணையை வரவேற்று உரையாற்றினார். பிரேரணையை இணைந்து முன்வைத்த மொன்ரிநீக்ரோ தூதுவர் சொரிக்கா மரிக் யோர்யேவிச் பேசியதைத் தொடர்ந்து இறுதியாக பிரிட்டன் பிரதிநிதி உரையாற்றினார்.

ஏமாற்றம்

இதனையடுத்து ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி ரவிநாத் ஆரியசிங்க உரையாற்றினார். இலங்கைக்கு உதவ விரும்புவதாக பல நாடுகள் சிறிது நேரத்திற்கு முன் கூறியமையைக் கேட்டோம். அவை எமக்கு எவ்வகையில் உதவ முடியும்? எமது இறைமையைப் பாதித்தா? சர்வதேச விசாரணை தொடர்பான விடயம் கூறப்பட்டுள்ளமை இலங்கையின் இறைமையைப் பாதிப்பதாக உள்ளது. நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்தப் பிரேரணை இலங்கை மக்கள் தொடர்பானது அல்ல. புலிகளுடன் தொடர்புடைய சக்திகளின் செல்வாக்கு இதன் தயாரிப்பில் உள்ளது. உறுப்பு நாடுகளுக்கு நாங்கள் கூற விரும்புவது. மீள் நல்லிணக்கம் தொடர்பாக கடினமான காலத்தில், மீண்டும் ஒரு போருக்கோ, பயங்கரவாத காலத்திற்கோ செல்ல விரும்பவில்லை" - என்று தெரிவித்த அவர், தீர்மானத்தை நிராகரிக்குமாறும் கோரினார்.

சர்ச்சை

இலங்கைக்கு ஆதரவான நாடுகளின் வரிசையில் பாகிஸ்தான் பிரதிநிதி உரையாற்றுகையில், "இது மனித உரிமைக் காரணங்களுக்காக அன்றி அரசியல் காரணங்களுக்காகவே கொண்டு வரப்படுகின்றது. சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை தொடர்பில் கூறும் 10 ஆவது பந்தி அகற்றப்பட வேண்டும். அதன் பின்பே வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

கியூபா, வெனிசுவேலா, சீனா, ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் தீர்மானத்திற்கு எதிராக உரையாற்றினர். இவர்களின் உரைகளும் பெரும்பாலும் இந்தப் பிரேரணை அரசியல் நோக்கம் கொண்டது என்றும், தமது அதிகாரத்தை ஏனைய நாடுகளின் மீது செலுத்தும் அதிகார நோக்கம் கொண்டது என்பதுவாகவுமே அமைந்திருந்தன. அத்துடன் பாகிஸ்தான் முன்னரே வலியுறுத்தியதைப் போன்று தீர்மானத்தின் 10 ஆவது பந்தி நீக்கப்பட வேண்டும் என்பதை இந்த நாடுகளும் வலியுறுத்தின.

இந்த நாடுகள் உரையாற்றிய பின்னர் பதிலளித்த மனித உரிமைச் சபைத் தலைவர், வாக்கெடுப்பில் தீர்மானம் தோல்வி கண்டால் 10 ஆவது பந்தியை அகற்றி விட்டு மீள் வாக்கெடுப்பு நடத்துவது குறித்து ஆலோசிக்கலாம் என்றார். இதன் பின்னரும் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்திய ரஷ்யப் பிரதிநிதி 10 ஆவது பந்தியை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தொடர்ந்து உரையாற்றிய மாலைதீவு, இந்தோனேசியப்பிரதிநிதிகளும் பிரேரணையை எதிர்த்து உரையாற்றினர்.

நிதி எங்கே ?

இதனை அடுத்து மீண்டும் பேசிய பாகிஸ்தான் பிரதிநிதி "இந்த முயற்சிக்கு சரியான நிதிமூலம் இல்லாத நிலையில், பிரேரணையை முன்மொழிந்த நாடுகள் நிதி தந்தால் அது உள்நோக்கம் கொண்டதாக அமையும் எனவே வாக்கெடுப்பையே கைவிட வேண்டும்" என்று கூறினார்

நிதி தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்த நிதிப் பொறுப்பாளர் மேலதிக நிதிக்கான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றிய அவைத் தலைவர் 116 ஆவது சரத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன் என்பதை இலங்கைக்கு ஆதரவான உறுப்பு நாடுகளுக்கு சுட்டிக்காட்டினார். தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடக்கும் என்று அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து கியூபா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு வாக்கெடுப்புக்கு எதிராகப் பேசுமாறும் அமெரிக்கா, மொன்ரிநீக்ரோ ஆகிய நாடுகளுக்கு வாக்கெடுப்பை ஆதரித்துப் பேசுவதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது" என்றார் அவைத் தலைவர்.

பதிலடி கொடுத்த அமெரிக்கா

அமெரிக்க பிரதிநிதி பவுலா சிறிவ் வர் பதிலளித்துப் பேசுகையில் "மார்ச் 3 இல் தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. அதன் பின் இரண்டு மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு கருத்துக்கள் கேட்கப்பட்டன. அப்போது கூறப்பட்ட கருத்துக்களில் தீர்மானத்தைக் கைவிடுவது தொடர்பில் பேசப்படவில்லை. அப்போது பாகிஸ்தான் பிரதிநிதியும் அங்கே இருந்தார்.

இது மனித உரிமைக் குழுவின் உரிமைகளை மீறுவதாக உள்ளது. தீர்மானத்திற்கு எதிரான கருத்துக்கள் உடையவர்கள் அதனை வாக்களிப்பில் காட்ட வேண்டும்" என்று தெரிவித்தார்.

மொன்ரிநீக்ரோ பிரதிநிதி, "தற்போதைய பிரேரணை மனித உரிமைச்சபையின் சட்டதிட்டங்களுக்கு அமையவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அதில் உள்ள விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமே ஒழிய தடுக்க முனையக் கூடாது. தமது எதிர்ப்பை அவர்கள் வாக்கெடுப்பில் காட்டவேண்டும்" - என்றார்.

இருப்பினும் அவைத் தலைவரினால் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதற்கு முதலில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பாகிஸ்தான் முன்வைத்த மேற்படி கோரிக்கை தோல்வியைத் தழுவியது. தொடர்ந்து 10 ஆவது பந்தி நீக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதற்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதுவும் தோல்வியைத் தழுவியது.

இறுதியில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் பிரேரணைக்கு ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. 12 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கெடுக்காமல் நடுவுநிலைமை வகித்தன. (5)

# நெடியகாடு, வெற்றிலைக்கேணி அணிகள் நேற்று அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
பரபரப்பாக இடம்பெற்ற இரு ஆட்டங்களில் வல்வெட்டித் துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக 'பி' அணியினரும், வெற்றிலைக் கேணி சென். செபஸ்தியார் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றன. பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுசரணை யுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் 'உத யன்' பத்திரிகையும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன. முதலில் இடம் பெற்ற ஆட்டத் தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக கழக 'பி' அணியினரும் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.
இளம் வீரர்களைக் கொண்ட இரு அணிகளினதும் ஆட்டம் தொடங்கியது முதல் இறுதி வரை இரு அணியினரும் மாறிமாறி எதிரணிகளின் கோல் கம்பங்களை ஆக்கிரமித்த வண்ணமிருந்தனர். இச் சூழ் நிலையில் நெடியகாடு இளை ஞர் விளையாட்டுக்கழக வீரர் திவாகரன் ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் தனது பின்கள வீரர்களிடமிருந்து அனுப்பிய பந்தை மிகவும் நிதானமாகப் புகுத்தி தமது அணிக்கான கோலினைப் பெற்றுக் கொடுத்தார்.
இதனை அடுத்து ஆட்டம்






விறுவிறுப்படையப் பாரதி விளை யாட்டுக்கழக வீரர்கள் தமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை வீணடித்து எதிரணியின் கோல் கம்பங்களுக்கு மேலாகப் பந்தை அனுப்பி பார்வையாளரிடம் எரிச்சலைத் தோற்றுவித்த வண்ணம் இருந்தனர். இச் சூழ்நிலையில் நெடியகாடு அணி 1:0 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் ஆட் டம் மேலும் சூடு பிடிக்கத் தொடங்கியது. இடைவேளை யின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் பாரதி விளையாட்டுக்கழக வீரர் மயூரன் மிகவும் அருமையான கோல் ஒன்றைப் பெற்று கோலின் எண்ணிக்கையை சமப்படுத்தினார்.
இதன்பின்னர் ஆட்டம் மேலும் இறுக்கமடைந்த போதும் இரு அணியினராலும் மேலதிக கோலைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் 1:1 என்ற அடிப்படையில் ஆட்டம் நிறைவடைந்தது.
இதனை அடுத்து வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற் காக வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதையில் நெடிய காடு விளையாட்டுக்கழக வீரர்கள் மூன்று கோல்களை அடிக்க, பாரதி விளையாட்டுக் கழக வீரர்கள் ஒரு கோலை மட்டுமே பெற்றனர்.
இறுதியில் 4:2 என்ற கோல் கணக்கில் நெடியகாடு இளை ஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மும், வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியார் விளை யாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இவ்வாட்டத்தில் இரு அணி வீரர்களும் பல கோல் பெறும் சந்தர்ப்பங்களை தவற விட்டனர். இவ்வாட்டத்தில் 2:0 என்ற அடிப்படையில் சென். செபஸ்தியார் அணி வெற்றி பெற்றது. (த-400)

## புத்தாண்டுப் போட்டிகள்

கொழும்புத்துறை, மார்ச் 28
அரியாலை சனசமூக நிலை யம் முன்னெடுக்கும் சித்தி ரைப் புத்தாண்டு விழா அடுத்த மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மாபெரும் துடுப்பாட்டப் போட்டி உதைபந்தாட்டப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன. அழைக்கப்பட்ட கழகங்களுக் கான துடுப்பாட்டப் போட்டி 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இறுதிப்போட்டி 14 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். பிற்ப கல் 3 மணிக்கு இடம்பெற வுள்ள உதைபந்தாட்டப் போட்டி யில் அரியாலை ச.ச.நிலையம் எதிர் யாழ்.மத்திய கல்லூரி, பாஷையூர் சென்.அன்ரனிஸ் எதிர் ஊரெழுறோயல் அணி கள் மோதவுள்ளன. (த-135)

## கொலின்ஸ், றெட்றேஞ்சர்ஸ் ஆட்டங்களில் அசத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கொலின்ஸ், விளையாட்டுக்கழகம், றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற் றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத் தில் கொலின்ஸ் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளை யாட்டுக் கழக அணி மோதிக்



கொண்டது.
அதில் கொலின்ஸ் விளையாட் டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் றெட்றேஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது. (த-23)

## சென்.சேவியர், சென். ஜேம்ஸ் மன்னார் கபடியில் சம்பியன்

மன்னார், மார்ச் 28
முசலி பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்க ளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சவேரியார்புரம் சென். சேவியர் விளையாட்டுக் கழக மும் பெண்கள் பிரிவில் கொக்குப் படையான் சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின.
சவேரியார்புரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சவேரியார் சென். சேவியர் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து கெக்குபடையான் சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் சவேரியார்புரம் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி 38:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.
பெண்களுக்கான இறுதியாட் டத்தில் கொக்குப்படையான் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சவே ரியார்புரம் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் கொக்குப்படையான் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 34:30 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற் றுச் சம்பியனானது. (த-23)



சவேரியார்புரம் சென். சேவியர் அணி



கொக்குப்படையான் சென். ஜேம்ஸ் அணி

## திருமலையில் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28
திருகோணமலை பட்டின மும் சூழலும் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான உதைபந் தாட்டம், கபடி, கரப்பந்தாட்டம், பெண்களுக்கான வலைப்பந் தாட்டம் ஆகிய போட்டிகள் நாளையும் நாளைமறுதினமும் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம்பெறவுள் ளன. (த-23)

## சென்.சேவியர் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 28
மன்னார் உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களின் முதற் தர அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை மன்னார் நகர சபை விளை யாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூர்வீதி பிட்டி சென்.அன்ரனிஸ் விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் சென்.சேவியர் விளை யாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்ட மானாறு ஒற்றுமை விளையாட் டுக்கழகம் நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட் டங்கள் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட் டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'பி' அணி மோத வுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட் டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கலை மதி விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 28
தொண்டமானாறு ஒற்றுமை விளை யாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை தொண்டமானாறு விநாயகர் சன சமூக நிலைய முன்றலில் ஆரம்ப மாகின்றன.
இதில் மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட் டத்தில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அவரங் கால் இந்து இளைஞர் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து நெடிய காடு இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனும தியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாலாலி விண்மீன் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா வடதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன், 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக் கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். தோமஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் விளை யாட்டுக்கழக 'பி' அணி அணி மோதவுள்ளது. (த-23)




இந்திய மகளிர் அணி

## இந்திய மகளிர் தொடர் தோல்வி

இங்கிலாந்துக்கெதிரான 20/20 மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா 5 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பங்களாதேஷில் மகளிருக்கான 20/20 உலகக் கிண்ணப் போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில் சல்கெட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 5 இலக்குகள் இழப்புக்கு 95 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்திய அணியின் தலைவி அதிகபட்சமாக 56 பந்துகளில் 57 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

96 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிக எளிய இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 11 பந்துகள் மீதமுள்ள நிலையில் 5 இலக்குகள் இழப்புக்கு 98 ஓட்டங்கள் எடுத்து 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 3 இலக்குகளைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணியின் அன்யா ஆட்டநாயகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். (த)

# இந்தியக் கிரிக்கெட் சபை தலைவராக கவாஸ்கர்?

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இடைக்காலத் தலைவராக கவாஸ்கரை நியமிக்கலாம் என உயர்நீதிமன்றம் யோசனை தெரிவித்துள்ளது. ஐ.பி.எல் சூதாட்ட சர்ச்சை வழக்கில் உச்ச நீதிமன்றம்இன்று வெள்ளிக்கிழமை இடைக்கால உத்தரவு பிறப்பிக்கிறது.

இவ்வழக்கில் இறுதி தீர்ப்பு வெளியாகும் வரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தற்காலிகத் தலைவராக சுனில் கவாஸ்கரை நியமிக்கலாம் என உயர்நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது. அதேபொல் ஐ.பி.எல் 7 போட்டியில் சென்னை சுப்பர் கிங்க்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் இடம் பெறக்கூடாது என நீதிபதிகள் பரிந்துரைத்தனர்.

மேலும், இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனத்துடன் தொடர்புடைய எந்த ஒரு நபரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் அங்கம் வகிக்கக்கூடாது எனவும் நீதிமன்றம் தெரிவித்தது.


உயர்நீதிமன்ற வழிகாட்டுதல் மீதான நிலைப்பாட்டை இன்று வெள்ளிக்கிழமை தெரிவிக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டது.

ஐ.பி.எல் சூதாட்ட சர்ச்சை விவகாரத்தில் முகுல் முத்கல் குழு அறிக்கையின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்நீதி மன்றத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்று உறுதியளித்துள்ளது. இருப்பினும், கிரிக்கெட் விளையாட்டின் நலன் கருதி, தீவிர பரிசீலனைக்குப் பின்னரே உத்தரவு பிறப்பிக்க முடியும் என உயர்நீதிமன்றம் தெரிவித்தது. ஐ.பி.எல் முறைகேடு விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பதவியிலிருந்து என்.சீனிவாசன் தாமாகவே விலக வேண்டும் என உயர்நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

பதவி விலகத் தவறினால் உயர்நீதி மன்றம் உரிய உத்தரவு பிறப்பிக்கும் எனவும் நீதிபதி ஏ.கே.பட்நாயக் தலைமையிலான அமர்வு எச்சரித் தது.

வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, ஐ.பி.எல் சூதாட்ட சர்ச்சை குறித்து விசாரணை நடத்திய முகுல் முத்கல் குழு அறிக்கையின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்நீதிமன்றத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் உறுதியளித்துள்ளது.

ஐ.பி.எல் சூதாட்டம் மற்றும் ஸ்பாட் பிக்ஸிங் விவகாரத்தில் குருநாத் மெய்யப்பனுக்கு தொடர்பிருப்பதாகக் கூறப்படும் விவகாரத்தில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் விசாரணை நடக்க வேண்டும் என்றால் சீனிவாசன் பதவி விலகுவது தான் சரியானது என்று அமர்வு தெரிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த)



சுனில் கவாஸ்கர்

# இனவாத ரசிகர்களுக்கு தடை பிரேசிலில் அதிரடி உத்தரவு




இனவாத ரசிகர்கள் உலகக் கிண்ணப் போட்டிகளில் நுழைவதைத் தடுக்க பிரேசில் அரசு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

உலகக்கிண்ணப் போட்டியின் போது இனவாத ரசிகர்கள் அதிகம் காணப்படுவதால் இவர்களின் பிரச்சினைகளில் இருந்து மற்ற ரசிகர்களைக் காப்பாற்ற பிரேசில் அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் ஆல்டோ கூறுகையில், போட்டிகளில் கலந்துகொள்ளும் ரசிகர்களை இது போன்ற இனவாத பிரச்சினைகளில் தலையிடவேண்டாமென்றும், மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அதுமட்டுமின்றி மைதானங்களில் சுற்றித் திரியும் அத்தகைய இனவாத ரசிகர்கள் மற்ற ரசிகர்களால் அடையாளம் காணப்பட்டு அவர்கள் தடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (த)

# ஐ.பி.எல். சூதாட்டத்தில் டோனிக்கும் தொடர்பு?

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனிக்கும் கிரிக்கெட் சூதாட்டத்தில் தொடர்புள்ளது என உயர்நீதிமன்றத்தில் சால்வே என்பவர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்தாண்டு நடந்த ஐ.பி.எல் போட்டிகளில் சூதாட்ட விவகாரம் பெரும் விஸ்வரூபம் எடுத்தது.

சில விளையாட்டு வீரர்கள் மற்றும் அணியின் உரிமையாளர்கள், ஆட்ட நிர்ணயச் சதியில் ஈடுபட்டதாகப் புகார் எழுந்தது. இதன் அடிப்படையில் மும்பை பொலிஸாரால் கிரிக்கெட் வீரர்கள் ஸ்ரீசாந்த், அஜீத் சந்திலா, அங்கீத் சவான் ஆகிய 3 வீரர்கள் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து ராஜஸ்தான் அணி உரிமையாளர் ராஜ் குந்த்ரா, சென்னை அணி நிர்வாகி குருநாத் மெய்யப்பன் ஆகியோர் மீதும் பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டனர். தற்போது இந்த வழக்கு உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்பில் நடந்து வருகிறது.

இந்நிலையில் டோனிக்கும் கிரிக்கெட் சூதாட்டத்தில் தொடர்பு உள்ளது என்றும், அவரும் குற்றவாளியே எனவும் சால்வே என்பவர் மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு விசாரணையில் சட்டத்தரணி நீதிபதிக்கு முன் வைத்த உரையில், டோனிக்கு தெரிந்து சில விடயங்கள் நடந்திருக்கிறது. டோனி ஆட்ட நிர்ணயச் சதி குறித்து விசாரணக் குழுவிடம் தவறான தகவலைக் கொடுத்துள்ளார்.

இதனால் இவரும் ஒரு குற்றவாளியே. இவர் முட்கல் குழு முன்பு தனது வாக்குமூலத்தை அளிக்க வேண்டும். மேலும் குருநாத் மெய் யப்பன் மீதான நடவடிக்கையில் சீனிவாசன் இடையூறாக உள்ளார் என்றும் கூறினார்.

இது தொடர்பான உத்தரவை நாளை(இன்று) பிறப்பிப்போம் என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். (த)




டோனி

## சென்னை,ராஜஸ்தான் அணிகளுக்குத் தடை

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகளில் விளையாட சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்குத் தடை விதிக்க உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

கடந்த ஐ.பி.எல். 6ஆவது போட்டியின் போது சூதாட்டம் உள்ளிட்ட முறைகேடுகள் குறித்து விரிவான விசாரணை அறிக்கையை நீதிபதி மூத்கல் குழு உச்சநீதிமன்றத்தில் தாக் கல் செய்தது. இந்த அறிக்கையில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சீனிவாசனின் மருமகன் குருநாத் மெய்யப்பன் மீது சூதாட்டத் தில் ஈடுபட்டது உள்ளிட்ட பல முறைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஐ.பி.எல். சூதாட்டக் குற்றச்சாட்டில் சிக்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மறு உத்தரவு வரும் வரை நடப்பாண்டு ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடக் கூடாது. இந்த பரிந்துரைகளுக்கான பதிலை கிரிக்கெட் சபை நாளை(இன்று) தாக்கல் செய்ய வேண்டும் என்று உயர்நீதி மன்றம் நேற்றுத் தெரிவித்துள்ளது. (த)

# இங்கிலாந்து அணி திறில் வெற்றி



20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக் கெதிரான ஆட்டத்தில் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 4பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளால் வெற்றி பெற்றது இங்கிலாந்து.

சர்வதேச 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் இலங்கை -இங்கிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி திலகரட்ண டில்சான் மற்றும் மஹேல ஜெயவர்த்தனா ஆகியோரின் அரைச் சதங்களின் உதவி யுடன் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக டில்சான் 55 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 89 ஓட்டங்களையும்பெற்றனர்.

பந்து வீச்சில் டெர்ன்பஞ், ஜேர்டன் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

190 என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி அளித்தார் குலசேகரா. முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் லும்ப்,அலி ஆகியோர் ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழக்கச் செய்தார்அவர்.

அடுத்து அலிக்கன் ஹெல்ஸ் அதிரடியாக ஆடிப் பெற்ற சதத்தின் உதவியுடன் வெற்றி இலக்கை அடைந்தது இங்கிலாந்து அவ்வணி சார்பாக 62 பந்துகளை எதிர்கொண்ட ஹெல்ஸ் 11 நான்கு ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 116 ஓட்டங்களைப் பெற்று கொடுத்தார்.

இதுதவிர மோர்க்கன் 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் குலசேகரா 4 இலக்குகளைக் கைப்பற்றினார். இப் போட்டியின் ஆட்டநாயகனாக அல்க்ஸ் ஹெல்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (400)

# போராடி வென்றது தென்னாபிரிக்கா

நெதர்லாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் போராடி வென்றது தென்னாபிரிக்கா.

உலகக் கிண்ண 20/20 போட்டிகள் பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றன. நேற்று சிட்டக் கொங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணியும் நெதர்லாந்து அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணித் தலைவர் பீற்றா பௌவில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அம்லா, டி கொக் களமிறங்கினர். முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் டி கொக் வெளியேறினார். இருந்த போதும் அம்லா சிறந்த அடித்தளத்தை இட்டுக் கொடுக்க தென்னாபிரிக்க அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அவ்வணி சார்பாக அம்லா 43 ஓட்டங்களையும் டி யூ பிளசர்ஸ் 24 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மாலிக் ஜனமல் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இதனை அடுத்து 146 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நெதர்லாந்து அணி 18.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அவ்வணி சார்பாக தனி மரமாக நின்று போராடிய மைபர்க் 51 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் இம்ரான் தஷிர் 4 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இம்ரன் தஷிர் தெரிவு செய்யப்பட்டார். (400)


## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

01) காசு சேகரிப்பாளர்கள் (Cash Collectors)
02) விநியோக பையன்கள் (Delivery boys)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை எதிர்வரும் 05.04.2014 இற்கு முன் பாக கிடைக்கக் கூடியவாறு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.விளம்பர இல-4494,
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(46141) (10.6.3)


## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா (இரத்தினம்) மரியநாயகம்



இளவாலையைப் (மணியகாரன் வளவு) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா மரியநாயகம் (22.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-மரியப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ் சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை- றோசமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், மரியநாயகத்தின் அன்பு மனைவியும் ஜெனி (ஜேர்மனி), யோகராஜ் (பிரான்ஸ்), கனி (பிரான்ஸ்), றெனி (லண்டன்), நந்தினி (கனடா), சுபாசினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், யேசுதாசன், லிண்டா, அருந்தி, நிமலகுமார், மோகன் ஆகியோரின் அன்பு மாமியும், சுவி, சுகி, கரினா, பிறோண்டன், அக்ஸ்சி, சோபி, எடிசன், ஷிரோனி, நிமேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான அன்னம்மா, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான வயித்தியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, ஆரோக்கியநாதர், பேதுருப்பிள்ளை, றெபேக்கா, அல்வீனம்மா மற்றும் டெய்சி காலஞ் சென்றவர்களான எலன், கிறேஸ் ஆகியோரின் மைத்துனியும் மேரி, யஸ்வின், நிகஷா ஆகியோரின் பேர்த்தியும் சற்பால், தனான் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை (29.03.2014) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து காலை 8.30 மணியளவில் இளவாலை புனித அன்னாள் ஆலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு, பின் இளவாலை அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி. இளவாலை. தகவல்: மகன்.


கணக்காளர் போட்டிப் பரீட்சை - யூன் 2014
வகுப்புக்கள் ஆரம்பம்
29.03.2014
நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் குழாமினால் கற்பிக்கப்படும்
சனி, ஞாயிறு காலை 9.00 மணி
Mind Vision Technology CAMPUS
யாழ் பொருளியல் கல்லூரிக்கு அருகாமையில்
077 933 93 53

Spoken English
Veta Fluency Diploma
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
veta
Experts in English Training
சனி, ஞாயிறு காலை 10.00 மணிக்கு (யாழ் நகர்)
அறிமுக முதல் வகுப்பு இலவசம்
பதிவுகளுக்கு பெயர் மற்றும் விலாசத்தினை SMS செய்யுங்கள் 0777 24 07 07
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி
Come, let's speak fluent English
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்
No.113. கன்னாதிட்டி வீதி,
(சயன்ஸ் ஹோல் அருகாமை)
Tel.: 021-222 4403

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான தனியார் நிறுவனத்திற்கு
குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Civil Technical Officer) தேவை.
ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையை கீழ் உள்ள முகவரிக்கோ அல்லது மின் அஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.
தொடர்புகளுக்கு: விளம்பர இல:- 4495,
மே/பா உதயன்,
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail:jaffnacivil@gmail.com
(C/13039) (2.6)

## கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனத்தில் (AL-Jaber) கீழ்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

* Carpenter - 10
* Painter - 05
* Mason - 20
* Electrician - 05
* Steel fixer - 20
* Plumber - 10
* Rillmason - 10
* Labourer - 10

அதி உயர் சம்பளம்+OT, கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம். (மிகக் குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள்
(குவைத் நாட்டில் Heavy Vehicles driver உடன் தேவை)
தொடர்புகளுக்கு: LANKA VOICE 077 058 4658
(43229) (10.6.3)

## மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளான சவூதி, கட்டார், ஓமான், டோஹா போன்ற செல்வந்த நாடுகளில் பாதுகாப்பான கௌரவமான வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணிபுரிய அரிய சந்தர்ப்பம். வீட்டுப் பணிப்பெண் (House Maid) 10 பேர் உடன் தேவை. உணவு, தங்குமிடம், மருத்துவம், விமான பயணச்சீட்டு என்பன முற்றிலும் இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம். முற்றிலும் இலவசமான பயணம். விசேடமாக முன்கூட்டியே கொடுப் பனவும் வழங்கப்படும். மலேசியா நாட்டிலும் கௌரவமான வீடுகளில் வீட்டுப்பணிப் பெண்கள் தேவை. நீங்களும் இரண்டு வருட நிறைவில் கைநிறைய சம்பளத்துடன் திரும்பிவர விரையுங்கள். (Sub Agent துணை முகவர்களும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்பு : Lanka Voice 077 058 4658, 077 792 9475
யாழ்ப்பாணத்தில் : ரசி 077 615 6304 (43228)(7.6.3)

German Institute
German, Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் Goethe Institute இன் Exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
அடுத்த பிரிவு 31.03.2014 அன்று ஆரம்பம்.
தொடர்புகளுக்கு: Mrs. P.Kajenthini
T.P. 077 160 4823 ஆரியகுளத்தடி.
(46111) (7.6.3)

Yoga & Meditation Centre
Persanal and Group Educational Training
Mathavady lane-Kondavil - T.P:0718617972
Yoga
Coures Name
Certificate in Yoga & Relaxation Techniques
Coures Duration:03 Months
யோகாசனம்
University of Kelaniya-Sri-Lanka

கருத்தரங்குகள்
போட்டிப் பரீட்சை களுக்கான
பொது உளச்சார்பு I.Q
ஆரம்பம்: சனி (29.03)
மு.ப. 11-4 மணிவரை
* வினைத்திறன் பரீட்சைகள் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்நகர்.
075 416 4564

## தென்னிந்திய யாத்திரை

நாள்கள்-12 யாத்திரிகர்கள்-10பேர்
முதலாவது பயணம் : ஆரம்பம் - 09.04.2014 நிறைவு - 20.04.2014
இரண்டாவது பயணம் : ஆரம்பம் - 23. 04.2014 நிறைவு - 04.05.2014

தமிழ்நாடு, ஆந்திரா,பாண்டிச்சேரியூடான யாத்திரை. உச்சிப்பிள்ளையார்,திருப்பதி, பத்மாவதித் தாயார்,காளகஸ்திரி உட்பட பஞ்சபூதத்தலங்கள்,ஆறுபடை வீடுகள், மேல் மருவத்தூர், 9 நவக் கிரக ஆலயங்கள், பொற்கோயில், தஞ்சாவூர், ராமேஸ்வரம், பிரம்மா கோயில், காஞ்சிபுரம், வடபழனி, அஷ்டலெட்சுமி, நவபாஷாணம், சுவாமிமலை, திருச்செந்தூர், பழனி, திருப்பரம்குன்றம்,திருத்தணி, அழகர்கோயில், பழமுதிர்ச்சோலை, மாங்காடு, திருவேற்காடு, சிதம்பரம், திருவண்ணாமலை, திருக் கடையூர் உட்பட 40இக்கும் மேலான ஆலயங்களை தரிசிக்கலாம். தங்குமிடம், வாகன வசதி (A/C), 3வேளை உணவு, குடிநீர், விமான டிக்கட் உட்பட சரஸ்வதி ஆலயமும் தரிசிக்கலாம். (C/12964)(5.6.3)
விபரங்களுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் 0777 680 102/ 0777 362 154

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -
Only Official FRENCH Centre
பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு
Alliance Française de Jaffna
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

முதலீட்டாளர் கருத்தரங்கு
www.cse.lk
யாழ்ப்பாணம்
2014 மார்ச் 29
மு.ப. 9.30
பங்குப்பரிவர்த்தனை கேட்போர் கூடம்
147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு
021-2221455/0777-822014
வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்
CSE COLOMBO STOCK EXCHANGE
(46160)(10.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.